பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 19 வியாழக்கிழமை (05.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 344

- 5 NOV 2009

# அமெரிக்க விசாரணையை மறுத்து நாடு திரும்புகிறார் பொன்சேகா!

## அரசே ஏற்பாடு செய்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிப்பு



கொழும்பு, நவம்பர் 05

முப்படைகளின் தலைமை அதிகாரியான ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று அமெரிக்காவிலிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டார். இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க அரசு அவர் மீது நேற்று விசாரணை நடத்தவிருந்த நிலையில், அந்த விசாரணையை ஏற்க மறுத்து நிராகரித்துவிட்டு அவர் அங்கிருந்து இலங்கை நோக்கிப் புறப்பட்டார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் நேற்று மாலை தகவல் வெளியிட்டன.

சரத் பொன்சேகா நாடு திரும்புகின்றமை தொடர்பாக முதலில் ஜே.வி.பி. வட்டாரங்களிலிருந்தே தகவல் வெளியானது. பின்னர் பாதுகாப்பு வட்டாரங்களும் அதனை உறுதி செய்துள்ளன.

நேற்று நாடாளுமன்றத்தில் ஜே.வி.பி. (20ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

### உள்ளே

- ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கணிதம்-I,II பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

### நாளை

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான வரலாறு- I,II பாடத்துக்கான கான மாதிரி வினாத்தாள்கள்.

## பம்பலப்பிட்டி கடலில் நடந்த கொலைக்கு கண்டனம் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 05

பம்பலப்பட்டி கடலில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடை பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள், சமயத் தலைவர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பொலிஸாருக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் குற்றமிழைத்த பொலிஸாருக்குத் தகுந்த தண்டனை வழங்குமாறும் கோஷம் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், ''பம்பலப்பிட்டிக் கடலில் இடம்பெற்ற இந்தப் படுபாதகமான சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதற்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும்'' (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வன்னிக்கு நேற்று விஜயம்; படையினரின் சம்பள உயர்வை அறிவித்தார்



கொழும்பு, நவ.05

முப்படைகளுக்கான சம்பளத்தை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நேற்று வன்னிப்பகுதிக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி, மன்னாரிலுள்ள மன்னகுளம் படைமுகாமில் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார். அங்கு படையினர் மத்தியில் பேசியபோது சம்பள உயர்வு தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

துயரகரமான தசாப்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தில் படையினர் வழங்கிய ஆதரவுக்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, சமாதான ஒப்பந்த காலத்தில் நாடு பிளவுபடும் நிலையில் இருந்ததையும் நினைவுபடுத்தினார் என்றும் அதிகாரிகள் கூறினர்.

விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சிப் பகுதிக்கும் விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த, அங்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டிருப்போர் பிரச்சினைக்கு முடிவு காண ஆஸிக்குக் காலக்கெடு

கொழும்பு, நவ. 05

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றவேளை இந்தோனேஷியத் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 78 இலங்கையர் தொடர்பாக அவுஸ்திரேலிய அரசு இறுதி முடிவை எடுக்க இந்தோனேஷிய அரசு 24 மணிநேரக் காலக்கெடு விடுத்துள்ளது.

''இது அவுஸ்திரேலியாவின் பிரச்சினை. எனவே நாளை வெள்ளிக்கிழமைக்கு இடையில் அவுஸ்திரேலியா இந்த சட்டவிரோதக்குடியேற்றவாசிகள் குறித்து இறுதி முடிவை எடுக்க வேண்டும்'' என்று இந்தோனேஷியாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறினார். இதேவேளை 'இந்தோனேஷியாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இந்த இலங்கையர்கள் எமது நாட்டிலிருந்து செல்ல வில்லை' என்று இலங்கைக் கடற்படை கூறுகின்றது.(அ-சி)

## இன்றைய அரசியல் நிலை குறித்து தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கூடி ஆராய்வு

கொழும்பு, நவ. 05

இன்றைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளன.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்தக்கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா. முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களும், ரவூப் ஹக்கீம் தலைமையில் முஸ்லீம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் மனோகணேசனும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று ஆராயும்

கொழும்பு, நவ.5

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடையில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இன்று முற்பகல் 10 மணிக்கு இக்கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கட்சிகள், மேலகமக்கள் முன்னணி ஆகியவற்றுடன் இடம்பெற்ற பேச்சுக்களின் முன்னேற்றம்-

புளொட், தமிழர்விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) அணி ஆகியவற்றை கூட்டமைப்புக்குள் உள்வாங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியற்கட்சியாகத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வது எனக் கடந்தவாரம் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய கட்சியின் யாப்பு புதுப்பித்துத் தயாரிப்பது குறித்தும் இன்றைய கூட்டத்தில் ஆராயப்படும் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் (20ஆம் பக்கம் பார்க்க)




இப்போது யாழ்ப்பாணத்திலும் புரோட்பாண்ட் இணையம்

Dialog Homenet இணைப்பு ஊடாக வரையறையற்ற புரோட்பாண்ட் இணையப் பாவனை
- மாதாந்தக் கட்டணம் ரூ. 1,750/- இலிருந்து
- இணைப்புக் கட்டணம் ரூ. 8,000/-
- மோடம் தேவையில்லை
- தொலைபேசி இணைப்பு அவசியமில்லை
- ஆகக்குறைந்தது 3 இ-மெயில் பொதிகள் இலவசம்
- 10MB வரையான வலைத்தளம்

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Broadband

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியரும், நண்பனுமாகிய
ச. யசோதரனின் அன்புத் தந்தை

### பொன்னம்பலம் சபாரத்தினம்

அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.
(90662)

## கண்ணீர் அஞ்சலி



எமதுசக ஆசிரியர் திரு.எஸ்.சிவராம்
அவர்களின் அன்பு மாமியார்
திருமதி பத்மசீலன் உருத்திராதேவி (பவானி)
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த ஆனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

(90663) கொக்குவில் இந்துக்கல்லூரி, ஆசிரியர் கழகம்.

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சபாரட்ணம்

(பிரபல புகையிலை வர்த்தகர்)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் உடையார் லேன், கொக்குவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சபாரத்தினம் நேற்று(04.11.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ராசேஸ்வரியின் அன்புக் கணவரும் சசிகலா (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி), யசோதரன்(ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி,ஊர்காவற்றுறை) அதிரதன்(ஆசிரியர், வவுனியா கோமரசன்குளம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரனின் (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை) அன்பு மாமனும் லிதுகஜன், தர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் சபாநாயகம், காலஞ்சென்ற பாலேஸ் வரி மற்றும் சாந்தமலர், நீலாம்பிகை, புனிதவதி, சூரியகாந்தன் (ஆசிரியர் , கொழும்பு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), சந்தர பாலு(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.11.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.25, உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில். (90664)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேம்படி மகளிரில் கதைசொல்லும் நேரம்

யாழ்ப்பாணம்.நவ.05

ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கான ''கதைசொல்லும் நேரம்'' நிகழ்வு யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சுவாமி சித்ரூபானந்தா கலந்து கொள்வார். (10)

## விதைநெல் விநியோகம்

யாழ்ப்பாணம்.நவ.05

யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரும்போக நெற்செய்கைக்கென விதை நெல்லை விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளது.

சங்கத்தின் உயரதிகாரி ஒருவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த விதை நெல் கமநலசேவை நிலையம் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.மூவாயிரம் புசலுக்கு மேற்பட்ட விதை நெல் இவ்வாறு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. (4-224)

## உறவினர்கள் பொறுப்பேற்கவும்

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் 62 வயது மதிக்கத் தக்க நோயாளர் ஒருவரை அவரது உறவினர்கள் வந்து பொறுப்பேற்குமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் வீதியில் காணப்பட்ட இந்த ஆண் நோயாளர் கடந்த மாதம் 29 ஆம் திகதி அவசர சேவை நோயாளர் காவு வண்டி மூலம் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டு 10 ஆம் இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டார்.

இவருக்கு வேண்டிய சிகிச்சைகள் அளிக்கப்பட்டுவிட்டன. வாய்பேச முடியாத இந்த நோயாளியிடம் இருந்து அவர் பற்றிய எவ்விதத் தகவல்களையும் பெற முடியவில்லை.

எனவே குறித்த நோயாளியின் உறவினர்கள் இவரைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (4-10)


### தேவை

'லக்ஸ் எட் போயில்ஸ்' பயணிகள் விடுதிக்கு அறை உதவியாளர்(room boy) உடன் தேவை.
தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும்.
ஆங்கிலம் பேச்சறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
34, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே.: 021 222 3966


## மரண அறிவித்தல்கள்

### பொன்னுச்சாமி கணேசபிள்ளை



(வியாபாரி, மருதனார்மடம் சந்தை)

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி கணேசபிள்ளை (02.11.2009) திங்கட்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கைலாசபிள்ளை-சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கலைவாணி, கலைச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராஜா(கனடா), இராஜகோபால் (கனடா), மனோரஞ்சிதாதேவி(கொழும்பு), சர்வானந்தம் (உரிமையாளர், ஸ்ரீக்குமரன் ஹாட்வெயார், ஸ்ரான்லி றோட்), யோகானந்தன் (கனடா), மல்லிகாதேவி (கொழும்பு),ஞானசேகரம்(ஜேர்மனி) மகேந்திரம் (கனடா), சுரேஸ்குமார் (கனடா), காலஞ்சென்ற கீர்த்தி ரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் மற்றும் சுமதியின் மாமனாரும், கௌசிகன், காரணன், கஜசரவணன், கஸ்தூரி, கௌதமன், கயல்வண்ணன், கஜீபன், கௌசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (90665)

தகவல்:
குடும்பத்தினர்.

### கோவிந்தர் தருமலிங்கம்



கோப்பாய் வடக்கினைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியினை வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தர் தருமலிங்கம் நேற்று (4.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தர்-லட்சுமி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, றஞ்சன், (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (லண்டன்), றஞ்சினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரத்தினம் (இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி), சுவர்ணலதா (ஜேர்மனி), கிருஷ்ணவேணி(லண்டன்), தங்கவேலு ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராஷ்மோகன், அனித்தா, மதன், றயீபன், றதீசன், விஜிந்தா, சிருஷ்டிகன் ஆகியோரது பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(04.11.2009) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நாவற்குழி பிணமுருங்கை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி,
கைதடி. (90664)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி நாகமணி

### (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ், சொலமன் லேன், சுண்டுக்குளி)



வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், 70/11, சொலமன் லேன், பழையபூங்கா வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகமணி நேற்று (04.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும், தணிகாசலம், பரிமளகாந்தி, கனகமலர், அமிர்தநாயகம் (பிரான்ஸ்), இராசநாயகம் (கணக்காளர், யாழ்.போதனா வைத்திய சாலை), தர்மநாயகம் (லண்டன்), யோகராணி (ஆசிரியை, யா/சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி), டெய்சிராணி (ஆசிரியை, யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்), காலஞ்சென்ற நவநாயகம் மற்றும் பிரபாகரன் (உரிமையாளர், நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலா, வேதநாயகம் (ஓய்வுபெற்ற வ.பி.போ.சபை உத்தியோகத்தர்), ரகுநாதன் (உரிமையாளர், லக்ஸி தச்சுத் தொழிற்சாலை), சித்திரா (பிரான்ஸ்), ஜெயலக்சுமி (விரிவுரையாளர், கல்வியியற்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அமுதா (லண்டன்), விமலாம்பிகைபாகன் (பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), நாகேந்திரன் (பரீட்சைக் கிளை, யாழ்.பல்கலைக்கழகம்) பாமினி ஆகி யோரின் அன்பு மாமனாரும், கஜிதா (லண்டன்), தாரணி, தபேந்திரன் (சமூகசேவைகள் அலுவலர், பிரதேச செயலகம், கோப்பாய்), இளங்கோவன் (சுவீடன்), திருமாறன் (சுவீடன்), வசந்தன் (சுவீடன்), காயத்திரி (சுவீடன்), அர்ச்சனா, தட்ஷாயினி (ஆசிரியை, யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்), பகீரதன் (லண்டன்), டிலக்ஷனா, அபர்ணா (பிரான்ஸ்), அனோஜ் (பிரான்ஸ்), ரவிசங்கரன், ஜெயசுமங்கலா, லாவண்யா, மனோ சங்கரன், நகோமி தெய்வீகா (லண்டன்), திமோத்தி செந்தூரன் (லண்டன்), சாம்சன் அருணோதயன் (லண்டன்), சங்கீதன், திவாகரன், கீர்த்தனா, யசோதரன், அபிலாசனன் ஆகியோரின் அன்புப்பேரனும், இலக்கியன், இந்துயன், ஆரஸ்கன் (சுவீடன்), அபினாஷ் (சுவீடன்), வைஷாலி (லண்டன்), காவ்யா ஆகியோரின் அருமைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70/11, சொலமன் லேன்,
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3450, 021 222 5539 (90670)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## 'பிள்ளையார் கல்யாணம் போல' தள்ளிப்போகும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிப்பு

'பிள்ளையார் கல்யாணம் போல' என்றொரு பேச்சுமொழி நம்மத்தியில் உண்டு. நாளை நடக்கும், நாளை நடக்கும் என்று காத்திருந்தும் நடக்காமல்போகும் விவகாரத்தை இப்படிப் பிள்ளையார் கல்யாணத்துடன் ஒப்பிடுகின்றமை வழமை.

எதிர்க்கட்சிகளின் புதிய கூட்டணி உதயமானதை அடுத்து விடுக்கப்பட்ட அறிவிப்பும் இத்தகைய பிள்ளையார் கல்யாணக் கதை போலவே அமைந்திருக்கின்றது என்பதுதான் கவனிக்கத்தக்க விடயம்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தலைமையாகக் கொண்ட எதிர்க்கட்சிகளின் பொதுக் கூட்டமைப்பான 'ஐக்கிய தேசிய முன்னணி' நேற்றுமுன்தினம் உதயமாகியிருக்கின்றது. அந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் பன்னிரண்டு கட்சிகளும் இது தொடர்பான ஆவணத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

'நிறைவேற்று அதிகாரம்' என்ற தனிநபர் அதிகாரத்தை இல்லாதொழித்து, நாடாளுமன்ற அதிகார முறைமையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது என்ற தீர்மானம் இந்தப் புதிய கூட்டமைப்பின் முக்கிய கடப்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுறுத்தல் என்பது புதிய கூட்டமைப்பின் முக்கிய இலக்காக முன்மொழியப்பட்டிருக்கின்றது.

இப்படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது தொடர்பாக அரசியல்வாதிகள் கூறி வரும் உறுதிமொழிகளைப் பார்த்தால், இதுவும் 'பிள்ளையார் கல்யாணம் போல' ஆகிவிடுமோ என்ற சந்தேகம் தான் பலருக்கும் வந்துவிடுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்போம் என்று இப்போது கங்கணம் கட்டும் இந்த எதிர்க்கட்சிக் கூட்டமைப்பின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்பு அமைச்சராக இடம்பெற்றிருந்த ஐ.தே.க. அரசுதான் 1978 இல் இந்த நிறைவேற்று அதிகார ஆட்சி முறைக்கு வழிசெய்த அரசமைப்பையே கொண்டுவந்தது என்பதும் மறக்கற்பாலதல்ல. இப்போது அந்த முறைமையை ஒழிப்பதற்காகப் போராடவேண்டிய நிலைமை அதே ரணிலுக்கு.

இப்படி நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகச் சூளுரைத்த பின்னர் அதையே கையிலெடுத்துத் தம்மால் அனுபவிக்கக் கூடிய காலம் முழுவதும் அந்த அதிகாரத்தை மகிழ்ச்சியுடன் ஆண்டனுபவித்துச் சென்ற பல அரசியல் தலைகளை இலங்கை கண்டு சலித்துவிட்டது.

1994 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான சந்திரிகா குமாரதுங்க தாம் வெற்றிபெற்றால் அடுத்த ஒருவருட காலத்துக்குள் ஜனாதிபதி முறைமையை ஒழித்துக்கட்டுவார் என அப்போது ஜே.வி.பி. சார்பில் அத்தேர்தலில் போட்டியிட முன்வந்த வேட்பாளரிடம் எழுத்துமூலம் உறுதியளித்தார். அந்த உறுதிமொழியின் பேரில் ஜே.வி.பியின் ஆதரவையும் பெற்று அத்தேர்தலில் வெற்றியீட்டிய சந்திரிகா குமாரதுங்க பிறகு என்ன செய்தார்? ஒரு வருடமல்ல - தாம் ஆட்சியில் நீடிக்கக்கூடிய பதினொரு வருடங்கள் - அந்த அதிகாரத்தை ஆண்டு அனுபவித்துத்தான் வெளியேறினார்.

அதுபோல, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜே.வி.பி யுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார், பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராகக் களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஷ.

தாம் அத்தேர்தலில் வெற்றிபெற்றால் இதுதான் கடைசி ஜனாதிபதித் தேர்தல். அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இந்த நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறைமை ஒழிக்கப்படும் - இப்படியெல்லாம் அந்த ஒப்பந்தத்தில் வாக்குறுதி வழங்கினார் ராஜபக்ஷ.

அத்தேர்தலில் ஜே.வி.பியின் முழு அளவு ஆதரவு மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிட்டாமல் போயிருந்தால் ஜனாதிபதிப் பதவியை அவர் நினைத்தும் கூடப் பார்த்திருக்க முடியாது என்ற உண்மை சகலருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றே.

அப்படி ஜே.வி.பிக்கு வாக்குறுதி அளித்து, அதன் மூலம் ஜே.வி.பியின் ஆதரவைத் திரட்டி, அந்த ஆதரவு மூலமே ஆட்சி அதிகாரத்துக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ இப்போது என்ன செய்கின்றார்?

பழைய ஒப்பந்தத்தையும் உறுதிமொழியையும் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசிவிட்டு, அடுத்த தடவையும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தித் தமது அதிகாரத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு (இல்லையேல் எட்டு ஆண்டுகளுக்கு) உறுதிப்படுத்துவதில் இப்போது குறியாக இருக்கின்றார்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது ஒன்று தெளிவாகத் தெரிகின்றது.

நாளைக்குத் தப்பித்தவறி எதிர்க்கட்சி வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களத்தில் குதிக்கக் கூடியவர் (அது ரணிலாகவும் இருக்கலாம் அல்லது வேறு யாராகவும் இருக்கலாம்) வென்று ஜனாதிபதியாகி விட்டாலும் கூட இதே கதைதான் தொடராது என்பது என்ன நிச்சயம்?

சந்திரிகா செய்ததைத்தான் - மஹிந்த ராஜபக்ஷ இப்போது செய்வதைத்தான் - நாளை எதிரணி சார்பில் வெல்லக்கூடியவரும் செய்யமாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லையே.

நிறைவேற்று அதிகாரத்திற்கு வருபவரை, வந்த பின்னர் அசைப்பது என்பது இயலாத காரியம். அப்படிப்பட்ட நிலைமையை இலங்கைத் தேசத்தின் அரசமைப்பு உருவாக்கி வைத்திருக்கின்றது.

இந்நிலையில், 'பிள்ளையார் கல்யாணம் போல' என்றோ ஒருநாள், நிறைவேற்று அதிகாரம் எனும் சர்வாதிகாரம் ஒழியும் என்று காத்திருப்பதை - பார்த்திருப்பதை - தவிர நாட்டு மக்களுக்கு வேறுமார்க்கம் ஏதும் இல்லை.

# முகாமில் உள்ள மின் கம்பத்தின் கீழ் இருந்துதான் படித்தேன்; இதனால் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்த முடிந்தது

## கிளிநொச்சி மாவட்டத்தில் 164 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடம்பெற்ற தவபாலன் அறிவன் உதயனுக்குச் செவ்வி

யாழ்ப்பாணம், நவ.05

புலமைப் பரிசில் பரீட்சைக்காக நாம் முகாமில் இருந்த மின்கம்பத்தின் கீழ் இருந்துதான் படித்தோம். முகாமில் 50 மீற்றர் தொடக்கம் 100 மீற்றர் இடைவெளிகளில் மின்கம்பங்களில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தன. தொண்டு நிறுவனம் விளக்கு ஒன்றைத் தந்தபோதும் மண்ணெண்ணெயின் விலை 200 ரூபாவாக இருந்தது. ஆகையால் நாம் தொடர்ந்து மின்கம்பங்களை நாடிச் சென்றே படித்தோம்.

இவ்வாறு குறிப்பிட்டார் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 164 புள்ளிகளைப் பெற்று மாவட்டமட்டத்தில் மூன்றாம் இடம் பெற்ற மாணவன் தவபாலன் அறிவன். அண்மையில் வவுனியா நலன்புரி முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த இவரை உதயனுக்காகச் செவ்வி கண்டோம்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாங்கள் இடம்பெயர்ந்து வரும் போது இடையில் அப்பாவைப் பிரிந்து விட்டோம். நாங்கள் முகாமுக்கு வந்த பிறகுதான் அவர் இறந்து விட்டதாக அறிந்தோம். பின்னர் அம்மா தந்த ஊக்கத்தினால்தான் என்னால் இப்பெறுபேற்றைப் பெறமுடிந்தது. எங்களுடைய இடத்தில் சண்டை நடந்ததால் தொடர்ந்து எங்களால் படிக்க முடியவில்லை. அடிக்கடி இடம்பெயர்ந்து கொண்டிருந்தோம். தரம் - 4 வரை நான் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தேன். முகாமில் இவ்வாண்டு ஆறாம் மாதத்துக்குப் பின்னரே நாங்கள் கல்விகற்கக் கூடியதாக இருந்தது.

முகாமில் எங்களுக்கு கல்வி கற்பித்த ரதன் சேரும், விமல்சேரும் தந்த ஊக்கத்தினாலும் எடுத்த முயற்சியினாலும் இந்தப் பெறுபேற்றினைப் பெறமுடிந்தது. என்னுடைய அம்மா கஷ்டத்திலும் முகாமில் 200 ரூபா கொடுத்து ரியூசனுக்கு அனுப்பினார். முகாமிலும் ஆரம்பத்தில் அவர்கள் உணவு தந்தார்கள். அது எங்களுக்கு ஒத்து வர வில்லை. அதனால் வயிற்றோட்டம் ஏற்பட்டது.



எங்களுக்கு முகாமில் கற்பித்த ஆசிரியர்கள் கூறுவது ஒன்றைத்தான் 'உடுத்த உடுப்புடன் வந்த எங் களுக்கு கல்வி ஒன்றுதான் அழியாச் செல்வம்' என்றார்கள். இதுவே எங்களுக்குக்கல்வி கற்க ஊக்கமாக அமைந்தது.

இதனால்தான் கிளிநொச்சி மாவட்டத் தில் இருந்து தோற்றியவர்களில் 164 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றேன்.

இந்நேரத்தில் எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள், அம்மா ஆகியோர்களுக்கு எனது நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்- என்றார்.

(50-06)

# குடாநாட்டில் இரவில் ஏற்படும் அதிஉச்ச மின்பயன்பாட்டை ஈடுசெய்வதற்கு மேலும் 4 மின்பிறப்பாக்கிகள் எடுத்துவரப்படும்

## வடபிராந்திய பொதுமுகாமையாளர் முத்துரட்ணானந்தம் தகவல்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்.மாவட்ட மின்பாவனையாளர்களுக்கு இரவில் 33 மெகாவாற்ஸ் மின்சாரம் தேவையயாக இருக்கிறது. இத்தேவையை நிவர்த்தி செய்து, மின்வெட்டை முற்றாகத் தவிர்க்கும் நோக்குடன் நான்கு புதிய மின்பிறப்பாக்கிளை யாழ்ப்பாணம் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இலங்கை மின்சார சபையின் - வடபிராந்திய பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்ட மின்பாவனையாளர்களின் நுகர்விற்கென தினசரி இரவு 6.30 மணி முதல் 9.30 மணிவரையும் 33 மெகாவாற்ஸ் மின்சாரம் தேவையாக இருக்கிறது. இதேபோன்று பகலில் 20 மெகாவாற்ஸ் தேவையாக உள்ளது.

தற்போது சுன்னாகம் மின்நிலையத்தில் 'நொதேர்ன்பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் நான்கு இயங்கிவருகின்றன.

இவற்றின் மூலம் 33 மெகாவாற்ஸ் மின்சாரத்தை மட்டுமே உற்பத்தி செய்யமுடியும். இந்த இயந்திரங்கள் தொடர்ச்சியாக இயங்குதல் உள்ளிட்ட காரணங்களால் அடிக்கடி அவற்றில் பழுதுகள் ஏற்படுகின்றன.

இதன் காரணமாகத் தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யமுடியாத நிலைமை ஏற்படும்போது, இரவு நேரத்தில் மின்வெட்டை அமுல்ப்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது.

இந்த நிலைமையில், இலங்கை மின்சார சபையின் தலைவர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபோது மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலகத்தில் வைத்து அவரிடம் இந்நிலைமையை தெளிவாகச் சுட்டிக்காட்டினோம்.

இதனைத் தொடர்ந்து, மின்சார சபையின் வடபிராந்திய பொது முகாமையாளர், உயர் அதிகாரிகள், சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சகிதம் சுன்னாகம் மின் நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்ட மின்சாரசபையின் தலைவர் அங்குள்ள நிலைமைகளையும் அறிந்து கொண்டார்.

இதன் விளைவாகவே ஒவ்வொன்றும் ஆயிரத்து 250 கிலோ வாற்ஸ் வலுக்கொண்ட நான்கு மின்பிறப்பாக்கிகளை யாழ்ப்பாணத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக மின்சாரசபையின் தலைவர் உறுதியளித்துள்ளார்.

இவை இந்த வருட இறுதிக்குள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு, தொடர்ச்சியான மின்விநியோகத்தை யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறோம் - என்றார்.

(50-14)

| நாளை | |
|---|---|
| ஐப்பசி 20 | 06.11.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | மு.இ. 07.47 வரை |
| நட்சத்திரம்: | மிருகசீரிடம் |
| | பி.ப.05.27 வரை |
| சுபநேரம்: | 06.05-07.35 வரை |
| ராகுகாலம்: | 10.35-12.05 வரை |

# விடாது தொடர்கின்ற மழை; யாழ்.நகரில் தேங்குகின்றது வெள்ளம்

யாழ்ப்பாணம், நவ.05

நேற்று முன்தினம் தொடக்கம் பெய்துவரும் தொடர் மழை காரண மாக யாழ்.நகரப் பகுதிகளின் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது.

பருவமழை ஆரம்பித்த நிலையில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு தொடக்கம் பெய்து வரும் மழை காரணமாக வீதிகள், தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகின்றது.

இதனால் வீதிகளில் பயணிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது.

யாழ்.நகரப் பகுதியில் கழிவு வாய்க்கால்கள் சீரின்மை காரணமாகவும் மக்கள் வீட்டுக் கழிவுப் பொருள்களை வீதிகளில் கொட்டுவதாலும் மழை நீர் வடிந்தோட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மழை பெய்தால் வெள்ளம் தேங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(04-10-6)

## இருளில் மூழ்கியது நெடுந்தீவு

யாழ்ப்பாணம், நவ.05

நெடுந்தீவுப் பிரதேசம் கடந்த 3 நாள்களாக இருளில் மூழ்கியுள்ளது. இப் பகுதியில் இது நாள்வரையும் மின்விநியோகத்தை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்ட மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதால் நெடுந்தீவுக்கான மின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடும் மழை தொடர்ச்சியாகப் பெய்து வருவதால் தமது அன்றாட அலுவல்களை நிறைவேற்ற முடியாமல் நெடுந்தீவு மக்கள் இருளில் தத்தளித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04-302)

# ஓட்டோவை மதுபோதையில் ஓட்டிச் சென்றவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.05

உரிய ஆவணங்களின்றி மதுபோதையில் 'ஓட்டோ' வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும்வரை ஓட்டோ வாகனத்தை தடுத்துவைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கினை விசாரித்த நீதிவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 5 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கும் முறையே தலா 6 ஆயிரம் ரூபா, 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

ஆவணங்கள் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 6 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டு அபராதம் செலுத்தத் தவறின் முறையே 6 மாதங்கள், 3 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (04-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (04.11.2009) புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற உயர் தொழில் நுட்ப நிறுவ னத்தின்,6வது பட்டமளிப்பு விழாவில்
உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெற்ற

**குணநாயகம் துசியந்தி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்க்கையில் சிறப்புற எல்லாம் வல்ல நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சமேத நல்லைநாயகி அருள்புரிய வேண்டிப் பிராத்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்,
உறவினர்கள்.

(சி/562113)

### விசேட நேர்முகப்பரீட்சை

மகரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல முடியாத ஆங்கில பாட நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு இன்று மு.ப. 10 மணிக்கு கோப்பாய் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் விசேட நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்ட மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(4-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



N.B.கஜீதரன் (பொருளியல் ஆசிரியர்) (HNDA)



K.B.பாகஜன் (கணக்கீட்டு ஆசிரியர்) (HNDA)



S. சுபேன் (ஆங்கில ஆசிரியர்) (HNDE)



ஞானாகரன் (ஆங்கில ஆசிரியர்) (HNDE)

4.11.2009 (நேற்று) நடைபெற்ற உயர்தொழில்நுட்பவியல் நிறுவன த்தின் 6 வது பட்டமளிப்பு விழாவில் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பட்டத்தினைப் பெற்ற எமது கல்வி நிறுவன ஆசிரியர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் உயர மனதார வாழ்த்துகின்றோம்.

(BRAIN POWER INSTITUTE)
(கல்விச் சமூகம்)

குருநகர். (90660)

## கண்ணீர் அஞ்சலி



எமது துறைத்தலைவர்
கலாநிதி திருமதி சுபதினி ரமேஷ்
அவர்களின் தாய்

திருமதி
**கமலகுமாரி செல்வராஜா**

அவர்கள் திடீர் மரணம் அடைந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர் தம் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(90657)

## வீடு,காணி விற்பனைக்கு

இணுவில் காங்கேசந்துறை வீதியில் துரை வீதிக்கு எதிர்பக்கமாக 150 யார் தொலைவில் மேல்மாடி வீடடங்கிய நிலப்பரப்பு 1குழி 5.08 விஸ்தீரணம் கொண்ட ஆதனமும் வீடும் விற்பனைக்குண்டு.

(90546) தொடர்பு: 0774848692, 0775081748

## வேலையாள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்யக்கூடிய வேலையாள்கள் (ஆண் மற்றும் பெண் தேவை) விருப்பமுள்ளோர் நேரில் வரவும்.

வீனஸ் பாம், நல்லூர் AGA Office முன்பாக,
பலாலி வீதி, திருநெல்வேலி.

## மனமார வாழ்த்துகின்றோம்

பாலசுப்பிரமணியம் கஜேந்திரன்



அவர்கள் நேற்று (04.11.2009) புதன்கிழமை H.N.D.A. பட்டம் பெற்றதை மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று வளர இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(90658)

க.எழிலரசி, ச.சிந்துஜா, க.மிரோஜன், த.ரஜித்
(2008 மாணவர்கள் Beacon)

## இதய அஞ்சலி



எமது கல்விநிலைய வணிகக்கல்வி ஆசிரியர் எஸ்.யசோதிரன் (யசோ) அவர்களின் தந்தையார்
அமரர் **பொன்னம்பலம் சபாரட்ணம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/562124)


Navalar Education Centre (NEO)
Clock Tower Road, Jaffna.

இயக்குநர்,
ஆசிரியர், மாணவர்கள்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை பவாசண்முகம்

(கிளிநொச்சி சரவணாஸ் உரிமையாளர், தலைவர் இராமநாதபுரம் வயலூர் முருகன் ஆலயம்)



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, இராமநாதபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பவாசண்முகம் கடந்த (3.11.2009) செவ்வாய்க் கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மக னும், கால ஞ்சென்றவர்களான பாணந்துறை வர்த் தகர் ஐயாத்துரை -மகேஸ்வரி தம்பதியினரின் மருமகனும், தனலெட்சுமியின் அன்புக் கணவரும், நிதர்சினி, கோபிகாந் (கனடா), நித்தியாசினி, மயூராசினி, மனோ ஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திராவின் மாம னும், பபிசனின் பாசமிகு பேரனும் , கமலாசினி (பிரான்ஸ்), சந்திரராஜா (ஜேர்மனி), புவ னேந்திரராஜா (லண்டன்), சௌந்தரராஜா (கனடா), யோகராஜா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரரும், மகேந்திரலெட்சுமி (கனடா), புஸ்பராணி, தனபாக்கியலட்சுமி, கோமளாதேவி (கனடா), செல்வராணி (ஆசிரியை), சத்தியபாமா (ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் மைத்துனரும் இலகநாதன் (கனடா), திருலோகநாதன் (ஸ்ரீ சக்தி ஸ்ரோர்ஸ்), சோமசுந்தரம் (வரத்தகர் - வவுனியா), சிவபாலன் (கனடா), கருணைதாஸ் (வர்த்தகர்), தனபாலசிங்கம் (கிராம சேவையாளர், (ஜே/15, வேலணை) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு இல 245, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.திருலோகநாதன்,
சு.சோமசுந்தரம், எஸ்.கருணைதாஸ்,
ந.தனபாலசிங்கம்
(சகலன்மார்).

245, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(90654)

### திருமதி சிவலிங்கராசா சிவகாமிப்பிள்ளை



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கராசா சிவகாமிப்பிள்ளை கடந்த 31.10.2009 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சிவலிங்கராசா (ஆமி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் அமரர்களான தம்பையா, கதிராசிப்பிள்ளை, சீனிக்குட்டி மற்றும் கந்தசாமி, நாகம்மா ஆகியோரின் அன்புத் தங்கையும் கனடாவில் வசிக்கும் சிவகுமார், உமாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி மற்றும் யோகசக்தி (உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் யசோதா, சசீதரன், சற்குணசிங்கம், யோகலிங்கம் (கனடா) மற்றும் ரிசீகரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், அவன்காட்) ஆகியோரின் அன்பு மாமியும் மதுஷாந், நிதுஷன், லக்ஷி, துஷ்யந்தன், கிருஷாந்தன், கடோற்கஜன், அஸ்வினி, டினோஜா, சனோஜன், காயத்திரி, பாரத் (கனடா), சர்விக்கா, சர்வதன், துவாரகன், சாரங்கன், சோபிகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்திற்கு பி.ப 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கோயில் வளவு"
உரும்பிராய் வடக்கு,
T.P: 0775290524

(சி/562114)

தகவல்:
சிவகுமார் (மகன்)

## நாவற்குழி மகாவித்தியாலயத்தின் 'மனச்சிற்பங்கள்' இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.5

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் 'மனச் சிற்பங்கள்' என்னும் இறுவட்டு வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி வ.மேகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினிவரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரியின் துணைமுதல்வர் அருட்திரு. ஜெராட் சவரிமுத்து, யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பா ளர் கு.பிறேமகாந்தன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் ஆகியோர் உட் பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் இறுவட்டிற்கான வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதியும் சட்டத்தரணியுமான திருநாவுக்கரசு (விகடகவி)வும் மதிப்பீட்டுரையினை சிரேஷ்ட உள வளத் துணையாளரும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இசை ஆசிரியை யுமான திருமதி பகீ ரதி கணேசதுரையும் நிகழ்த்துவர்.

## விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென் மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள ஜீ.சி.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களிடம் கல்வியமைச்சால் வழங்கப்பட்ட விசேட விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று உடனடியாக வல யக்கல்வி அலுவலகத் தில் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

அத்துடன் இரண்டாவது தடவை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், கடந்த பரீட் சையில் கணித பாடம் சித்தி பெறாத மாண வர்கள் ஆகியோருக்குத் தனித் தனியாக விண்ணப் பப்படிவங்களைப் பூரணப்படுத்தியபின்னர் உடனடியாக [illegible] கையளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலகுமாரி செல்வராசா

நொத்தாரிசு வளவு, துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலகுமாரி செல்வராசா 03.11.2009 செவ்வாய்க்கிழமை அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மகளும், நாகநாதர்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நாகநாதன் செல்வராசாவின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சுபதினி ரமேஷ் (மகள்)
(தலைவர்,மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

160, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### பக்கிரிச்சாமி ஜெயராமன்

நாவற்குழி சந்தி, கைதடியைச் சேர்ந்த பக்கிரிச்சாமி ஜெயராமன் (யாக்கோபு) கடந்த (03.11.2009) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், தேவராசா (ESP & Co.), விமலாதேவி, காலஞ் சென்ற நடனராஜா மற்றும் சிங்கராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம்),தங்கராஜா (இந்தியா), தருமராஜா (நீர்ப்பாசனத் திணைக்களம்), கமலராஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசமணி, இராமநாதன், லீலா, மலர்விழி, பாமா, சயந்தினி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற செல்லப்பா, மற்றும் குணரட்ணம், நாகம்மா, சண்முகநாதன் தம்பிராசா (உப்புக்கூட்டுத் தாபனம்), ஆகியோரின் மைத்துனரும், யசோதா, (Ygro நிறுவனம், உடுவில்), மணிவண்ணன் (ZOA நிறுவனம், வவுனியா), சாந்தினி (CPR நிறுவனம்), யோகேஸ்வரன், மணிமாறன், மணிபல்லவன், ஸ்ரீ காந்தன் (மலேசியா), ஸ்ரீசத்தியா (CPR நிறுவனம்), சுகிர்தா, தட்ஷிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), டக்ஷன், சரவணன், கிரிதரன், துவாரகன் (பரியோவான் கல்லூரி), சாரா, ஏஞ்சல் (இந்தியா) ஆகி யோரின் பேரனு மாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (06.11.2009) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லதில் நடை பெற்று பூதவுடல் கைதடி ஊரியான் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டிவீதி,
நாவற்குழி சந்தி,
கைதடி

(90659)

தகவல்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப்பெற்று பாடசாலைச் சமூகத்திற்குப் பெருமை தேடிய மாணவச் செல்வங்கள்

**அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்தந்தப் பாடசாலை மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைச் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தமது சொந்த ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்த மாணவச் செல்வங்களின் கருத்துக்களைத் தொகுத்து 'உதயன்' வாசகர்களுக்காகத் தருகின்றோம். தொடர்ந்து படியுங்கள்.**



## ஜெயபாலன் தனஜெயன்
### கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
### புள்ளிகள் - 155

நான் தினமும் காலையில் 4.30 தொடக்கம் 6 மணிவரை படிப்பேன். காலையில் படிப்பதே ஞாபகத்தில் இருக்கும் என்பதால் தினமும் காலையில் எழுந்து படிக்க ஆரம்பித்து விடுவேன். பாடசாலை யிலும் காலையில் வகுப்பு வைப்பார்கள். அங்கு பத்திரிகைக ளில் வெளிவரும் கேள்விப்பத்திரங்களை ஆசிரியர்கள் சொல்லித்தருவார்கள். இதனால் பரீட்சைக்குத் தயாராவது எனக்கு இலகுவாக இருந்தது. வீட்டிலும் என்னுடைய அம்மாவும் அப்பாவும் எனக்குக் கற்பித்தனர்.

எனக்கு சிறுவயது முதலே வைத்தியராக வரவேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

நான் இப்போதே 'ஸ்டெதஸ்கோப்' வாங்கி வைத்திருக்கிறேன். இதனால் எனது இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற வேட்கை என்னுள் உள்ளது. எனக்குக் கல்வி போதித்த திருமதி கலாநிதி செல்வராஜா, அன்பழகன் சேர், சுஜீவன் சேர், எனது பெற்றோர் ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



## அருணாசலம் பிரசாந்தினி
### கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
### புள்ளிகள் - 153

என்னுடைய அப்பா செ...யில் மூடை சுமக்கும் வேலை செய்கிறார். ஆனால் நான் படி...ப்பதற்கு என்ன தேவையோ அவற்றையெல்லாம் செய்து தந்து எனக்கு ஊக்கமளித்தார். உதயனில் வெளியான கல்விச்சுடர் பகுதியும் எனது வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

நாங்கள் அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து இங்கு வந்து (2006) கல்விகற்கிறேன் இங்கு எனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் ஊக்கமெடுத்துக் கற்பித்தார்கள். நான் பாடசாலை முடிந்த பின்னர் மாலையில் அன்பழகன் ஆசிரியரிடம் சென்று கல்வி கற்றேன். வீட்டிலும் இரவு 7மணி தொடக்கம் 9 மணி வரை அம்மாவிடம் கற்றுவந்தேன்.

அண்ணா தனது பாடசாலை முடிவடைந்ததும் என்னை ரியூசனுக்கு ஏற்றிச் சென்று விடுவார். பாடசாலையில் எனது ஆசிரியர்களான கலாநிதி ஆசிரியையும் சுஜீவன் ஆசிரியரும் தனிப்பட்ட கவனமெடுத்துக் கற்பித்தார்கள்.

ஆசிரியராக வருவதே எனது இலட்சியம். ஆசிரியராகி என்னைப்போல் வறுமையில் உள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

எனக்குக் கல்வி கற்பித்த அதிபர், கலாநிதி ரீச்சர், அன்பழகன் சேர், சுஜீவன் சேர் எனது அம்மா ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சந்திப்பு : தமிழரசன்

# அரசாங்கப் பாடசாலை மாணவர்களுக்கான இலவசச் சீருடை விநியோகம் நாளை ஆரம்பம்

## முதலில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப நடவடிக்கை

கொழும்பு, நவ.05

அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குரிய 2010 ஆம் ஆண்டுக்கான இலவச பாடசாலை சீருடை விநியோகம் நாளை வெள்ளிக்கிழமைமுதல் ஆரம்பமாகின்றது. இதன் முதல் தொகுதி ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:

கடந்த மாதங்களில் நாடு முழுவதும் உள்ள ஏறக் குறைய நாற்பது லட்சம் மாணவர்களுக்கு 3000 மில்லியன் ரூபா செலவில் இலவச பாடநூல்களை விநியோகிக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது நாற்பது லட்சம் மாணவர்களுக்கு 1200 மில்லியன் ரூபா செலவில் நான்கு வகையான, 65 லட்சம் சீருடைகளை விநியோகிக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நாடு முழுவதிலுள்ள ஒன்பது மாகாணங்களில் அமைந்துள்ள 92 வலயக் கல்வி காரியாலயங்களுக்குச் சீருடைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

நாளை 6 ஆம் திகதி 7 லட்சம் ரூபா போக்குவரத்துச் செலவில், இரண்டு லட்சம் சீருடைகள் அடங்கிய முதல் தொகுதி ஏ-9 வீதியூடாக யாழ். வலயக் கல்விக் காரியாலயத்துக்கு வைபவ ரீதியாக அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்நிகழ்வு கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தலைமையில் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

சீருடைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மொத்த துணியின் அளவு பத்து மில்லியன் மீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு பாடப்புத்தகங்களை உத்தியோகபூர்வமாக விநியோகிக்கும் ஆரம்ப வைபவத்தை இம்முறை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் டிசெம்பர்7 ஆம் திகதி நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அன்றைய தினத்திலேயே சீருடைகளும் மாணவர்களுக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளன.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# வவுனியா நிவாரணக் கிராமங்களில் இப்போது எந்தவித தொற்று நோய்களும் இல்லை

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் சொல்கிறார்

வவுனியா, நவ.05

நிவாரணக் கிராமங்களில் எந்தவித தொற்று நோய்களும் இல்லையெனவும் நோய் பரவாமல் தடுக்க சகல முன் னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் வவுனியா அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார். நலன்புரி நிலையங்களுக்கு வரும் போதே பல்வேறு தொற்று நோய்களுடன் வந்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்த மக்களிடையே மஞ்சட்காமாலை, தோல் நோய் மற்றும் பொக்குளிப்பான் போன்ற நோய்கள் இருந்தன. இவற்றைக் குணப்படுத்தும் வகையில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நோய்களைக் கொண்டோர் வேறாக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அதே நேரம் இத்தகைய தொற்றுக்கள் ஏனையோருக்கு பரவாமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மழை காலங்களில் நோய்கள் பரவாமலிருப்பதற்காக சுற்றுச் சூழல்கள் துப்புரவு செய்யப்பட்டதுடன் நீர்தேங்கி நிற்பதைத் தடுக்கும் வகையில் வடிகாள்கள் புனரமைக்கப்பட்டன. அத்துடன் மக்கள் தங்கியுள்ள கூடாரங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தொற்று நோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் நோய் பரவுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டனுக்கான புதிய விசா விண்ணப்பங்கள் 13 - 23 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா

கொழும்பு, நவ.05

பிரிட்டனுக்கான புதிய விசா விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

விசா வழங்கும் செயன்முறையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளமையால் புதிய விசா விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய விசா விண்ணப்பங்கள் எதிர்வரும் 18 ஆம் புதன்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அதன் பின்னர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே ஆரம்பமாகும் என்றும் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (50)

# இன்றைய ஆட்டம்

வலி வடக்கு, நவ.05

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்டத் தாச்சிச் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை சுதுமலை யுவ சக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

அளவெட்டி கணேசா விளையாட்டுக் கழகம் எதிர் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகம். (50-86)

# யாழ். எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதியளவு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.5

யாழ். குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு நேற்று முன்தினம் முதல் போதிய அளவு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கும் 6ஆயிரத்து 600 லீற்றர் வீதம் மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மக்கள் தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.


கடந்த ஓரிரு தினங்களாக யாழ்ப்பாணத் தில் மண்ணெண்ணெய்க்கு நிலவி வந்த தட்டுப்பாடு தற்போது முற்றாக நீங்கியுள்ளது. நுகர்வோர் தமக்குத் தேவையான அளவு மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-224)



சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு நெடுந்தீவில் சிறுவர், முதியோருக்கான அபிவிருத்தி நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சிறுவன் ஒருவன் மாலை அணிவித்து வரவேற்பதையும், அமைச்சர் நிலையத்தை திறந்து வைப்பதையும், நெடுந்தீவு [illegible] அருகில் நிற்பதையும் முதல் இரண்டு படங்களில் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டோரை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள் - லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள திடீர் தட்டுப்பாட்டை அடுத்து நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் மக்கள் முண்டியடித்தவாறு மண்ணெண்ணெய்யைப் பெறுவதற்கு நேற்றுக் காத்திருந்தபோது.....
(224)

## துயர் பகிர்கின்றோம்



மொறட்டுவப் பல்கலைக்கழக
3ஆம் வருட தகவல்
தொழில்நுட்ப மாணவன்
பத்மசீலன் சஜீவன்
அவர்களின் அன்புத் தாய்
அமரர் பத்மசீலன்
உருத்திராதேவி (பவானி)
அவர்களுக்கு எமது கண்ணீர்
அஞ்சலிகளைக்
காணிக்கையாக்குவதுடன்,
அவர்தம் குடும்பத்தினர் துயரில் நாமும்
பங்கேற்கின்றோம்.

(90598)

தகவல் தொழில்நுட்ப பீட மாணவர்கள்,
மொறட்டுவப் பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்



### அரியகுட்டி மேரிப்பிள்ளை (மேரி)

காங்கேசன்துறை, மாம்பிராயை நிரந்தர வசிப்பிடமாகவும் மல்லாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அரியகுட்டி மேரிப்பிள்ளை (மேரி) நேற்று (04.11.2009) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணை அரியகுட்டியின் அன்பு மனைவியும் பிரான்சிஸ் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், யாழ்.மாநகர சபை), அமிர்தராசா (பற்றிக் - முன்னாள் தலைவர், சிற்றூர்திச் சங்கம், தெல்லிப்பழை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிறிஸ்த்தீனம்மா, சரோஜினிதேவி ஆகியோரின் மாமியும் பேர்னாட் (பிரான்ஸ்), மேரிலக்சனா (கனடா), றெஜினோல்ட் (ஜேர்மனி), மேரிசுபக்சனா (பிரான்ஸ்), நீகன் ஜெனாட் (சவுதிஅரேபியா), டெனின் லெனாட் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.11.2009) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சோடாக் கொம்பனி ஒழுங்கை, மல்லாகம். (சி/562114)
தகவல்: பிள்ளைகள், மருமக்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.04.1930

மறைவு 06.10.2009

### திருமதி தங்கம் வேலுப்பிள்ளை

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 06.10.2009 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளி விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

சாவகச்சேரி வீதி,
மந்திகை, புலோலி.
வே[illegible] (மகன்).

## வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு குளியல்
அறைகளுடன் சகல
வசதிகளும் கொண்ட வீடு
யாழ்ப்பாணத்தில்
எந்தப் பகுதியிலும்தேவை.
T.P.: 0770711074
(90595)

## வீடு உடன் விற்பனைக்கு

நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து 100m தூரத்தில் சகல வசதிகளும் உடைய பெரிய வீடு விற்பனைக்குண்டு. கரவெட்டி கன்பொல்லை வீதியில் (சயன்ஸ் சென்ரர் வீதி).

தொடர்பு: 0779008431

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.5

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது எனக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204-72)

## யாழ்.மாநகர சபை வெற்றிடங்கள் நிரப்புவதற்கு விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பப் படிவங்கள், யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைத்து நேற்று முற்பகல் தொடக்கம் விநியோகிக்கப்படடு வருகின்றன.

இவ்விண்ணப்பப் படிவத்தினை பெறுவதற்கு என தேசிய அடையாள அட்டை சகிதம் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் யாழ்.மாநகர சபை முதல்வர் அலுவலகத்தில் திரண்டிருந்ததனை அவதானிக்கமுடிந்தது.

சிற்றூழியர்கள், மெக்கானிக், வாகன சாரதிகள், சுகாதாரத் தொண்டர்கள், வீதி வேலைத் தொழிலாளர்கள் உட்பட பல வெற்றிடங்கள் மாநகரசபை அலுவலகத்தில் நிலவுவதாகவும் அவற்றினை விரைவில் நிரப்புவதற்கே விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுவருவதாகவும் யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(203-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது மொழியியல், ஆங்கிலத்துறைத் தலைவர்
கலாநிதி திருமதி சுபதினி ரமேஷ் அவர்களின் அன்புத் தாய்
திருமதி கமலகுமாரி செல்வராஜா

03.11.2009 அன்று லண்டனில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம். (90599)
மொழியியல், ஆங்கிலத்துறை மாணவர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதர் குமாரசுவாமி



செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் குமாரசுவாமி நேற்று (04.11.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்குலராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் குமாரதாஸன் (ஏச்.என்.பி. அஷ்சூரன்ஸ், யாழ்ப்பாணம்), மைதிலி (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரதாஸ் (கணக்காளர், லண்டன்), சாரதா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு மாமனும் சிவதாரணியின் (யாழ்.பல்கலைக்கழகம்) பெரிய தந்தையும் கதிரவண்ணசாமியின் சகலனும் கீர்த்தனன், கிருஷாணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (04.11.2009) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் வெளிச்சவீட்டு இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாரதா நிலைய வீதி, (சி/562107)
புலோலி வடக்கு, பருத்தித்துறை.
தகவல்: கே.கே.தாஸன் (மகன்).

### முருகப்பர் சுவாமிநாதன்



மண்கும்பான், வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், 88, கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகப்பர் சுவாமிநாதன் 03.11.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி சுவாமிநாதன் ரேவதியின் அன்புக் கணவரும் சுவாமிநாதன் கிருசாந்தன், சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.11.2009) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வண்ணை கோம்பையன் மணல் மயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

88, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (90594)
தகவல்:
சுவாமிநாதன் கிருசாந்தன்
சுவாமிநாதன் பிரகலாதன்.


## ஏலவிற்பனை அறிவித்தல்

**சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில்**
**மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை**

தேசிய சேமிப்பு வங்கி, சாவகச்சேரிக் கிளையில் 30.09.2008 வரை அடகுவைத்து 30.09.2009 வரைக்கும் மீட்கப்படாத அல்லது வட்டி செலுத்தப்படாத அடகுநகைகள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏலவிற்பனைத் திகதி: **05.12.2009 சனிக்கிழமை காலை 9.30 மணி**
இடம்: **141, V.M.K. கட்டடம், கண்டி வீதி, சாவகச்சேரி (கிளையில்).**

**ஏலவிற்பனையை இரத்துச் செய்யும், ஒத்திவைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது**

உதவிப் பொதுமுகாமையாளர் (கடன்) - கொழும்பு - 3
சார்பாக முகாமையாளர், சாவகச்சேரி.

NSB

(சி/562110)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டி.எம்.ஐ. கணனிக் கல்வி நிறுவனத்தின் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட 'யூனியன் அஷ்யூரன்ஸ்' நிறுவனத்தின் வடக்கு மாகாண வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன் உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம்.
நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினர் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவி ஒருவருக்கு விருது வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் ஏனைய படங்களில் காணலாம். *(படங்கள்: உமா, ஓங்காரன்)*

## விஞ்ஞான மதிப்பீட்டு வினாத்தாள் வலயப் பணிமனையில்

யாழ்ப்பாணம்,நவ.5

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான பாட மதிப்பீட்டு வினாத்தாள்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

அதிபர்கள் அவற்றினைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## வீரமணி ஐயா நினைவுப் பேருரை இன்று கல்வியியற் கல்லூரியில்

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒன்பதாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இயல் இசை வாரிதி ந.வீரமணி ஐயா நினைவுப் பேருரை இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்குப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறும.

''தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்ட தமிழர் அழகியல்'' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என். கிருஸ்ணவேணி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (1)

## தென்மராட்சி கிழக்கில் சட்டவிரோத மின்பெற்றோர் வசமாக மாட்டிக்கொண்டனர்

யாழ்ப்பாணம்,நவ.5

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பல குடியிருப்பாளர்கள் வசமாக மாட்டிக்கொண்டனர்.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தினர் மிருசுவில் வடக்கு, தவசிகுளம், இயற்றாலை ஆகிய இடங்களில் அண்மையில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற பலர் அகப்பட்டனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பெருமளவு மின் உபகரணங்கள் மின்சார சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிககப்பட்டது. (203-207)

## நெடுந்தீவு உதவி அரச அதிபர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம்; நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்பாடு

நல்லூர் நவ.5

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஜனவரிக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் என்று சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவில் வைத்துத் தெரிவித்தார்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் என். திருலிங்கநாதன், நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனை மிகவும் பழைமையான கட்டடத்தில் உள்ளதாகவும் தற்போது பணிமனை உள்ள கட்டடம் ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தது எனவும் வசதிகள் கொண்ட புதிய கட்டடம் அமைக்கப்பட வேண்டியது குறித்தும் அமைச்சரிடம் விளக்கிக் கூறினார்.

உதவி அரச அதிபரின் கோரிக்கையை அடுத்து இதற்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி புதிய கட்டடத்திற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார். (203-111)

## வைத்தியசாலைகளின் திறப்பு விழாக்கள் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,நவ.5

நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவிருந்த சாவகச்சேரி வைத்தியசாலைத் திறப்பு விழாவும், மறுநாள் சனிக்கிழமை இடம்பெறவிருந்த கரவெட்டி வைத்தியசாலைத் திறப்பு விழாவும், ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த இளவாலை வைத்தியசாலைத் திறப்பு விழாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

இவ்வைத்தியசாலைகளுக்கான திறப்பு விழாவிற்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

சுகாதாரத்துறைப் பணியாளர்களுக்கான நடமாடும் சேவை இன்று காலை 9 மணிக்கும், நிறுவனத் தலைவர்களுக்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் பி.ப. 2 மணிக்கும் திட்டமிடப்பட்டபடி நடைபெறும்.

இவற்றில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும் மாகாண சுகாதாரப் பணிப்பாளரும் மாகாணச் சுகாதார அமைச்சினதும் மாகாண சுகாதார பணிமனையினதும் உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக இணைப்பில் உள்ள ஊழியர்களும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் தங்களுக்குரிய பிரச்சினைகள் தீர்த்துக் கொள்ளலாம் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (203)

## ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட
# அமைச்சர்கள் எவரும் இதுவரையில் பிரதேச செயலகங்களில் பொறுப்பேற்கவில்லை!

பண்டத்தரிப்பு,நவ.5

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதகதியில் நிறைவேற்ற ஜனாதிபதியினால் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபோதும் இதுவரை அவர்களில் எவரும் கடமையேற்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கடந்த மாதம் யாழ்.குடாவில் உள்ள 10 பிரதேச செயலகங்களுக்கு 10 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பிரதேச செயலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றால் வடக்கின் வசந்தம், மஹிந்த சிந்தனை என்பன துரிதகதியில் பூர்த்தியாக்கப்பட்டு பிரதேசம் அபிவிருத்தியடையுமென பிரதேச செயலர்கள் தெரிவித்துள்ளார்கள். (4-130)

## குடாநாட்டில் கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்கு மணலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மக்கள்

யாழ்ப்பாணம்,நவ.5

குடாநாட்டில் சிமெந்து போதியளவு இருந்தும் மணலைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமப்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மணல் பற்றாக்குறையால் கட்டடப் பணிகள் மந்தகதியிலேயே இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராமசேவையாளர் மற்றும் பிரதேச செயலர் போன்றோரின் சிபார்சுக் கடிதங்களுடன் மணல் பெறுவதற்காக மக்கள் யாழ்.செயலகம் சென்று அதற்கான அனுமதிகளைப் பெறுவதற்கும் சிரமப்பட்டு வருகின்றனர்.

ஒரு வகையாக அனுமதியைப் பெற்றாலும் கூட குறித்த நேரத்தில் மணலைப் பெறமுடியவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் வெளியிடங்களில் கூடிய விலைக்கு மணலைப் பெறவேண் டிய நிலை ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கோரியுள்ளனர். (203-224)

## வாராந்த நிகழ்வு

வடமராட்சி,நவ.5

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு, இசைக்கலைமாணி க.ரஜீவனின் இன்னிசை பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (203-236)

## கைதடியில் காவலரண் அகற்றப்பட்டது

வண்ணை,நவ.5

கைதடி அஷ்டலக்ஷ்மி அச்சகத்தின் மொட்டை மாடியில் நிறுவப்பட்டிருந்த பாதுகாப்புப் படையினரின் காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

அதேவேளை நாவற்குழிச் சந்திக்கும் தபாற்கட்டைச் சந்திக்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியில் படையினர் பழைய காவலரண்களைப் புனரமைப்புச் செய்வதுடன் புதிதாகவும் பனைமரக்குற்றிகளை நிறுத்தி ஓரிரு காவலரண்களை அமைத்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (2?3-160)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## குறிகாட்டுவானில் குடிதண்ணீரில்லை; அமைச்சரிடம் முறைப்பாடு

நல்லூர்,நவ.5

குறிகாட்டுவான் துறைமுகத்தில் பொதுமக்களின் பாவனைக்கென வைக்கப்பட்டுள்ள தண்ணீர்த்தொட்டியில் நீண்டநாள்களாகக் குடிதண்ணீர் விடப்படவில்லை.

இதனால் துறைமுகத்தினூடாகப் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் புங்குடுதீவு கடற்படை அதிகாரி சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவுக்குச் சென்றசமயம் இந்த விடயம் கடற்படை அதிகாரியால் அமைச்சருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார். (203-111)

# நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உலகின் தேவைக்கேற்ப எம்மைத் தயார் செய்யமுடியும்

## யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,நவ.5

நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நவீன உலகத்தின் தேவைக்கு ஏற்ப எம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற டி.எம்.ஐ.கணனிக் கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

மனிதன் சமூகத்தில் மனிதனாக வாழ வேண்டும் எனின் [illegible] நுட்ப அறிவைப் [illegible] அவசியமானது.

தற்போது அனைத்து நிறுவனங்களும் கணனி அறிவுடையவர்களையே எதிர்பார்க்கின்றன.

தவறின் அவர்களால் வினைத்திறனான முறையில் தமது நிறுவனத்திற்குப் பங்களிக்கமுடியாதவர்களாக இருப்பார்கள்.

கணனி அறவில்லாதவர்கள் கண் அற்றவர்களாகவே வாழவேண்டியுள்ளது.

சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏணிப்படியாக இருக்கும் ஆசிரியர்கள் கணனி தொடர்பான அறிவினைப் பெற்றிருத்தல் மிக அவசியமானது.

அதுமட்டுமன்றி அவர்கள் கணனி உபகரணங்கள் கையாள்வதில் பரீட்சயமானவர்களாகவும் இருக்கவேண்டும்.

தென்பகுதியை விட இங்குள்ளவர்கள் [illegible] குறைந்த நிலையில் [illegible]. தென்பகுதியில் சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரையும் கணனி அறிவினைப் பெற்று வருகின்றனர். நாமும் அவ்வாறு ஆர்வமாக கணனித் துறையில் ஈடுபட வேண்டும்.




காலத்தின் தேவைக்கேற்ப எமது அறிவைப் பெற்றுக்கொள்வதன் ஊடாகவே இனி வரும் நவீன உலகத்தினை நாம் காண வேண்டியதாக இருக்கும் - என்றார்.

டி.எம்.ஐ. கணனி கற்கை நிறுவன இயக்குநர் ஆர்.நிரோஷன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 'யூனியன் அஷ்யூரன்ஸ்' நிறுவனத்தின் வடமாகாண வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். (203-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஏற்பாட்டில் உலக விஞ்ஞானதின நிகழ்வுகள் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதி நாளன்று மாலை, உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் புத்தாக்கப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும். கண்காட்சிகளில் தமது உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்திய நிறுவனங்களுக்கும் பரிசு வழங்கல் நிகழ்வு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உலக விஞ்ஞானதினம் 2009 இன் குழுவின் தலைவர் எஸ்.சுதர்சன் தலைமை உரையாற்றுவதனையும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கௌரவ விருந்தினர் உரையாற்றுவதனையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

சிறப்புரைகளை, யாழ் அரச அதிபர் கே.கணேஷ், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல். ஓங்காரமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சின் வடமாகாணப் பணிப்பாளர் மஜீத் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் இறுதி இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்:.உமா)*

# மனித குலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்லக் கூடிய கண்டு பிடிப்புக்களையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்த வேண்டும்

## சமூக நலத்துறை அமைச்சர் உரை

யாழ்ப்பாணம்,நவ.5

மனித குலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடியதான உள்ளூர் கண்டுபிடிப்புக்களையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்த இளம் சமுதாயம் முன்வருதல் வேண்டும்.

இவ்வாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்தறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

உலக விஞ்ஞான தினத்தை முன்னிட்டு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற கண்காட்சி நிகழ்வின் இறுதியில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் உரையாற்றும்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

இக் கண்காட்சி மூலம் உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்புக் கிடைக்கும் நிலைமை ஏற்படும்

ஏ-9 வீதி மூடப்பட்டிருந்த வேளை உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த அதிக தடைகளை சந்திக்க வேண்டியிருந்தது.

கடந்த காலங்களில் வாய்ப்புக்கள் பல காத்திருந்தன. ஆனால் அத்தகைய வாய்ப்புக்களைப் பயன்படுத்த அரசியல் தலைமைகள் மறுத்துவந்தன. அவர்கள் இளம் சமூகத்தை அழிவை நோக்கிய புதிய கண்டு பிடிப்புக்களுக்கே ஆர்வப்படுத்தியிருந்தனர்.

ஜனாதிபதியின் நடவடிக்கையால் தற்போது அவ்வாறான எல்லாத் தடைகளும் நீங்கியுள்ளன.

வடபகுதிக்கும் தென்பகுதிக்கும் இடையே உற்பத்திப் பொருள்கள் சந்தைவாய்ப்புக்காக வருகின்றன. உள்ளூர் உற்பத்தியாளர்கள் அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

நுகர்வோரைக் கவர்ந்திழுக்கக் கூடிய உற்பத்திகளை, உள்ளூர் உற்பத்தியாளர்கள் படைக்க வேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் வேண்டிக் கொள்கிறேன். இதை ஆலோசனையாகக்கூடக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் மூலம் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை புதிய கண்டு பிடிப்பாளர்களும், உற்பத்தியாளர்களும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (203-14)

# நாவலர் குருபூசை தினத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சுப் போட்டிகள் மாணவர்களிடையே நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.5

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசைத் தின விழாவையொட்டி கட்டுரை, பேச்சு போட்டிகள் நடைபெறவுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் பாடசாலை மாணவர்கள் அனைவரும் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை சைவசமய அருள்நெறி மன்றம், வீரபத்திர கோயிலடி, கோப்பாய் தெற்கு என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (203-204)

# நேற்றுக் காலை வரை 544.5 மில்லிமீற்றர் மழை

நல்லூர்,நவ.5

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிமுதல் நேற்று புதன் கிழமை காலை 8.30 மணிவரை குடாநாட்டில் 35.2 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை ஆராய்ச்சி மையப் பொறுப்பதிகாரி எஸ்.புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை வரை குடாநாட்டில் 544.5 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (203-111)

# சண்டிலிப்பாய்க் கோட்டப் பாடசாலைகளின் சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், நவ.5

சண்டிலிப்பாய் கல்விப் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சர்வதேச சிறுவர் தினப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம் கீழே தரப்படுகின்றது.

**பேச்சு பிரிவு -1**

நவநீதா சிவநேசநாதன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி, அரியநாயகம் அகல்யன் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ச.சோபா - பிரான்பற்று கலைமகள் வித்தி.

**பேச்சு பிரிவு - 2**

கிருஜிகா கணபதிப்பிள்ளை - மானிப்பாய் மகளிர் கல்லூரி, யசாந்தினி ரவீந்திரன் - ஆனைக்கோட்டை றோ.க., யோகராஜன் கபில்டன் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**பேச்சு பிரிவு - 3**

பாமினி டலஸ் - நவாலி மகா வித்தியாலயம், இ.சுபீசன் - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, து.வசீகரன் - மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**கவிதை பிரிவு - 1**

ஸயந்தினி அமிர்தலிங்கம் - சுதுமலை சிந்மயபாரதி வித்தி., அன்ரனியூட் சுபிட்சன் - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க., மிதிலாலினி இராஜதுரை - மானிப்பாய் மெமோறியல்.

**கவிதை பிரிவு - 2**

பிரியங்கா பாஸ்கரன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி, காஞ்சனகரி கனகசபாபதி - சுதுமலை சிந்மயபாரதி வித்தி., ட.சுகன்யா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

**கவிதை பிரிவு - 3**

சதாசிவம் ஜெயராணி - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பா.மோகன்ராஜ் - மானிப்பாய் இந்துக் கல்லூரி, துர்மிலா இலட்சுமிகாந்தன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

**கட்டுரை பிரிவு - 1**

தனஞ்சிகா சின்னராசா - மானிப்பாய் மகளிர் கல்லூரி, டிலக்ஷணா செபமாலை - பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ. க.த.க., த.தேவதர்சினி - சண்டி லிப்பாய் இந்துக் கல் லூரி.

**கட்டுரை பிரிவு - 2**

வி.பானுஜா - மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க., நா. கஜந்தினி - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, வே.நிந்துஜா - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

**கட்டுரை பிரிவு - 3**

செ.தர்சிகா - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ம.நிலானி - மானிப்பாய் மகளிர் கல்லூரி, க.கஜிதன் - மானிப்பாய் இந்துக் கல்லூரி. (203-38)

# பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்தால் மட்டுமே ஏ - 9 வீதி ஊடாக முழு அளவிலான போக்குவரத்து

## அமைச்சர் லஸந்த அழகியவன்ன தெரிவிப்பு

கொழும்பு, நவ.5

பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினால் மட்டுமே ஏ - 9 நெடுஞ்சாலையின் ஊடாக முழு அளவிலான போக்குவரத்தை மேற்கொள்ளமுடியும் - என்று பயணிகள் போக்குவரத்து அமைச்சர் லஸந்த அழகியவன்ன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான நேரத்தின்போது ஜே.வி.பி. கட்சியின் உறுப்பினரான ஆர். பி. ரணவீரபத்திரான கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் றியவை வருமாறு:-

வடக்கிற்கான ரயில் சேவையை விரிவுபடுத்துவதற்காக மேலும் ரயில் பெட்டிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. தற்போது வவுனியாவில் இருந்த தாண்டிக்குளம் வரை ரயில் சேவை இடம் பெறுகிறது.

2010ஆம் ஆண்டு இறுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும். யாழ்ப்பாணத்தின் கடைசி ரயில் நிலையம் வரை ரயில் செல்ல ஏற்பாடு செய்யப்படும். - என்றார்.

ஏ - 9 ஊடான போக்குவரத்துச் சேவையை அரசு ஏன் இன்னும் முழுமையாக ஆரம்பிக்கவில்லை என்று ஜே.வி.பி. எம்.பி.ஆர். பி. ரணவீரபத்திரன அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட சிலர் மாத்திரமே அப்பாதையின் ஊடாகப் பயணிக்க அமைதி வழங்கப்படுகிறது என்றும் அவர் சொன்னார். பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கினால் மாத்திரமே முழுமையான அளவில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியும் என்று அமைச்சர் லஸந்த அழகியவன்ன பதிலளித்தார்.

(அ-சி)


## வேலைக்கு ஆள்கள் தேவை

தையல் வேலை தெரிந்த ஆண்கள் மற்றும் உதவியாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உடன் சமுகமளிக்கவும்.

*தொடர்பு:* ஆகாஸ் ரெக்ஸ் ரைல்ஸ் அன் ரெயிலரிங்

No:*19, கண்டி வீதி, சாவகச்சேரி.*

T.P.: *077 6701495* (90588)

## காணவில்லை

கறுப்பு. கட்டையான (டாசோன்) பெண் நாய்க்குட்டி (1வயது), மூர்த்தனார் கோயிலுக்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் காணாமல் போய்விட்டது. பிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

[illegible]

[illegible] T.P.0777 [illegible] 021 222 8601


## மரண அறிவித்தல்



### முத்தையா கனகலிங்கம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கனகலிங்கம் நேற்று முன்தினம் (03.11.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம், காலஞ்சென்ற சிவஞானபூரணி, ஆனந்தராணி ஆகியோரின் சகோதரனும் நந்தகுமார், காலஞ்சென்ற சிவகுமார், உஷாநந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கேதீஸ்வரன், சிவதர்ஷினி ஆகியோரின் மாமனும் சுவேதா, மதுமிதா, பிரணவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று (04.11.2009) புதன் கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சந்தையடி லேன்,*
*மானிப்பாய்.*

(90589)

தகவல்:
*நந்தகுமார் (மகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு

'உதயனி'ல் வாரந்தோறும் வெளிவரும் 'கேள்விக்கு என்ன பதில்' போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசினை உதயன் நூலகரும் ஆசிரியர்பீடப் பிரதிநிதியுமான வி.எஸ்.தங்கராஜா வழங்குவதை முதல் இரு படங்களிலும் உதயன் நிறுவனக் கணக்காளர் ஆ.கனக சபை வழங்குவதை ஏனைய படங்களிலும் காணலாம்.


கதிர்றல் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யே.லிமோஜன் பரிசு பெறுகின்றார்.


காட்டுக்கந்தோர் வீதி, சுண்டிக்குழியைச் சேர்ந்த கோ.அபிலாஷினி பரிசு பெறுகின்றார்.


ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த இ.துர்க்காயினி பரிசு பெறுகின்றார்.


மூளாய் வீதி, வட்டுக்கோட்டையச் சேர்ந்த ஸ்ரீ.சொரூபிகா பரிசு பெறுகின்றார்.

## மரத்தில் பூக்காத பூக்கள்

* மனிதன் புகழும் பூ - சிறப்பு
* மலர்ச்சியில் வரும் பூ - சிரிப்பு
* காலையில் வரும் பூ - விழிப்பு
* கோபத்தில் வரும் பூ- வெறுப்பு
* பாதங்களை காக்கும் பூ - செருப்பு
* மனிதன் பேண வேண்டிய பூ - மதிப்பு
* மானம் காக்கும் பூ - உடுப்பு
* பயத்தினால் வரும் பூ - படபடப்பு
* வயலில் உள்ள பூ - வரம்பு
* படகோட்டியிடம் உள்ள பூ - துடுப்பு
* மனிதனிடையே காணவேண்டிய பூ - பண்பு
* எல்லோருக்கும் தேவையான பூ - அன்பு
* இதயத்தில் உள்ள பூ - துடிப்பு
* பதவியில் இருக்கும் பூ - பொறுப்பு
* கட்டாயத்தைக் கூறும் பூ - திணிப்பு
* புத்திசாலியான பூ - வியப்பு
* உயர்ச்சிக்கு உதவும் பூ - உழைப்பு

தர்ஷனா சுப்பிரமணியம், தரம் - 13, கலைப்பிரிவு, பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை.




க. சிந்துஜன், "பாலாவோடை", உடுவில் தெற்கு, மானிப்பாய்.

புன்னகை காட்டும் நிலவே
புதுமுகம் கொண்ட நிலவே
புதுமைக் கவி பாரதி
ஏற்றிப் பாடிய நிலவே
கண்களில் குளிர் தரும்
ஒளியதாய்
பெண்களின் அழகினை வென்றிடும்
நிலவே
விண்ணரசியாகி வளர்ந்திடும்
வளர்மதி நிலவே
வானவர் கண்ணென
வாழ்ந்திடும் நிலவே
ஏழைகள் வீட்டில் அணையாத
ஒளி விளக்காய் நிலவே
ஒளி எனும் உணர்வை
தினம் உணர்த்திடும் நிலவே
குழந்தைக்கு அமுதூட்டும்
அன்னைக்குதவும் நிலவே
கவிதைகள் பல எழுதிடத் தூண்டும்
கவிமதி நிலவே
கலங்கிடும் நெஞ்சின்
துன்பம் துடைத்திடும் நிலவே
தினம் தினம் இனிமைகள்
தர வா நிலவே!

## கேள்விக்கு என்ன பதில் ? 45இல் பரிசு பெறுவோர்

01) சா.பபிசன், வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு.
02) ச.கோபிதன், 66/4, பழம் றோட், கந்தர்மடம்.
03) ப.கதிர்தர்சினி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

## சிந்திக்க சில துளிகள்

★ வயதில் இளையவனாகவும் அறிவில் மூத்தவனாகவும் இருக்க பழகிக்கொள்.
★ வரட்டுக் கௌரவம் வாழ்க்கைக்கு உதவாது. வரட்டுப் பிடிவாதம் முயற்சிக்கு உதவாது.
★ தன் கையை பணத்தால் நிரப்பவேண்டும். தன் மனதை குணத்தால் நிரப்பவேண்டும்.
★ உன் உழைப்பை நம்பு. ஆனால் கடவுளையும் உன் தாயையும் மறந்துவிடாதே.
★ உன்னால் நண்பர்களை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும். உன் பெற்றோர்களைத் தேர்ந்தெடுக்க முடியாது.
★ பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாது. பணம் இருந்துவிட்டால் உன்னையே உனக்குத் தெரியாது.



சீ.ஐங்கரன், தரம் -11B, பரியோவான் கல்லூரி.

## பலன் தராத பதினெட்டு



★ அன்பு இல்லாத தாய்
★ மென்மை இல்லாத பெண்மை
★ கனவுகள் இல்லாத வாழ்க்கை
★ சிதைவுகள் இல்லாத வரலாறு
★ பண்பு இல்லாத அறிவு
★ பக்குவம் இல்லாத முதுமை
★ இனிமை இல்லாத இளமை
★ உழைப்பு இல்லாத செல்வம்
★ மனச்சாட்சி இல்லாத இன்பம்
★ விக்கிரகம் இல்லாத கோயில்
★ நேர்மை இல்லாத உழைப்பாளி
★ ஆராய்வு இல்லாத விஞ்ஞானம்.
★ தியாகம் இல்லாத வாழ்க்கை
★ அடிப்படை இல்லாத அரசியல்
★ வாசனை இல்லாத மலர்கள்
★ உண்மைகள் இல்லாத உழைப்பு
★ புன்னகை இல்லாத பூவையர்
★ இலட்சியம் இல்லாத மனிதன்.

ஜெ.சஞ்சீவ், தரம் - 9சி, யூனியன் கல்லூரி.




சிதைந்து போகும் - என் கனவுகள்
சில்லறையாய்ச் சிரிக்கிறது
இலட்சியம் நிறைந்த என் வாழ்வு
நிழலை நிஜமாக்க முயன்று
தினம் தினம் தோற்றுப் போகிறது

வசந்தம் வாசல் வரை வந்து
சுகம் விசாரித்துச் செல்கிறது
தடுமாறும் என் விதி வலுவான தடத்தில்
பயணிக்காதோ? சொந்தமும்
என் உறவும் மீளவும் என்னிடம் திரும்பாதோ?

யூ.மேரி கொன்சியா, தரம் - 11, சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை.

## கேள்விக்கு என்ன பதில்?-45இன் சரியான விடை

**பென்குயின்**

## கேள்விக்கு என்ன பதில்? - 47

ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என்று அழைக்கப்படும் நாடு எது?

(சரியான விடையை 11.11.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................
முகவரி :-........................................
:-........................................
........................ ........................................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

**ஒக்ரோபர் 30**



1918ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி தன்னை ஒரு குடியரசு நாடாக 'செக்கோஸ் லாவோக்கியா' பிரகடனப் படுத்திக் கொண்டது.

**ஒக்ரோபர் 31**

புகழ்பெற்ற இத்தாலிய திரைப்பட இயக்குநரும் திரைக்கதை ஆசிரியருமான 'பெடரிக்கோ பெலினி' என்பவர் 1993ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி காலமானார்.



**நவம்பர் 1**



லிஸ்பன் நகரத்தில் 1755ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி ஏற்பட்ட மிகப்பெரிய புவி அதிர்ச்சியினால் ஏறக்குறைய 60ஆயிரம் பேர் மாணிக்கனர்.

**நவம்பர் 2**

அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாக 'ஜேம்ஸ் ஏர்ல் ஹார்ட்டர்' 1976ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.



**நவம்பர் 3**



நாடு தேடி பயணித்த கிறிஸ்தோப்பர் கொலம்பஸ் தன்னுடைய இரண்டாவது பயணத்தில் 1493ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி மேற்கிந்திய தீவான 'டொமினிக்கா'வில் காலடி வைத்தார்.

**நவம்பர் 4**

1922ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி எகிப்திய மன்னன் 'பாரோ துட்டாங்கமன்' என்பவரின் பிரமிட்டை பிரித்தானிய அகழ்வாய்வாளரான 'ஹாவார்ட் ஹார்ட்டர்' கண்டுபிடித்தார்.



**நவம்பர் 5**



ஐஸ்லாந்தின் தென்கிழக்கே பனிப்பாறை ஒன்றின் கீழ் எரிமலை 1996ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி வெடித்துச் சிதறியது. இதனால் அப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாக மாறியது. மனிதர்கள் அப்பகுதியில் இல்லாததால் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - மன்னார்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## கணிதம் - I (புதிய பாடத்திட்டம்) 32-T-I

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

### பகுதி - A

01. ஐந்து இனிப்பின் விலை ஒரு ரூபா எனின், ஒரு இனிப்பின் விலையை ரூபாவில் காணுங்கள்.


02. O வை மையமாகக்கொண்ட வட்டத்தில் முக்கோணி ABCஇன் சிறப்பு பெயர் என்ன எனக்கூறுங்கள்.




03. தீர்த்து × இன் பெறுமதியைக் காணுங்கள் n + 6 = 5

04. 0.00345 என்னும் எண்ணை விஞ்ஞான முறை குறியீட்டில் தருக.

05. வென் உருவில் நிழற்றிய பிரதேசத்தை தொடைக்குறியீட்டில் காணுங்கள்




06. சதுரம் ஒன்றின் மூலை விட்டம் நீளம் 20cm எனின், அதன் பரப்பளவைக் காணுங்கள்.

07. A = {2, 4, 6, 8} என்ற தொடையின் முதலிமை காணுங்கள்.


08. $2\sqrt{5}$ இன் வர்க்கத்தின் பெறுமானத்தைக் காண்க.

09. $1111_{\text{இரண்டு}}$ என்ற எண்ணின் அடுத்த இரண்டு அடியுள்ள எண் என்ன எனக்காணுங்கள்.

10. முதலாவது முதன்மை எண்ணுக்கும் முதலாவது சேர்த்தியெண்ணுக்கும் இடையில் உள்ள விகிதம் யாது?

11. பொருள் ஒன்று குறித்த விலையின் 10% கழிவு கொடுத்து விற்கப்பட்டது. கொடுக்கப்பட்ட கழிவு ரூபா 200 எனின்,
 1) குறித்த விலை காணுங்கள்.
 2) விற்ற விலை காணுங்கள்.

12. தரப்பட்டுள்ள எண் கோட்டில் குறித்து காட்டப்பட்டுள்ளதை எழுதுங்கள்.




13. சதுர வடிவ அடியுள்ள கூம்பகம் ஒன்றின் உயரம் 6cm. அதன் கனவளவு $98cm^3$ ஆகும் கூம்பகத்தின் அடியின் பக்கமொன்றின் நீளத்தைக் காணுங்கள்.

14. ≡ (-1,3) > Q ≡ (2,-1), R ≡ (-5, 3) எனும் புள்ளிகளில் எப்புள்ளிகள் நேர்கோடு 2n + 3y = 1 எனும் சமன்பாட்டைத் தீர்க்கப்பயன்படுகின்றது.


15. உருவில் O வட்டத்தின் மையம் AOB விட்டம் OP// BQ, $AOP = 40^0$எனின்,
 1) $O\hat{B}Q$
 2) $O\hat{P}Q$ இன் பெறுமானத்தைக் காணுங்கள்.




16. குறித்த ஒரு வேலையை குறிப்பிட்ட காலத்தில் 3 ஆண்கள் செய்யும் வேலையை 4 பெண்கள் செய்து முடிப்பர். 12 ஆண்கள் 16 நாட்களில் செய்யும் வேலையை 5 பெண்கள் எத்தனை நாட்களில் முடிப்பர் என்பதைக் காணுங்கள்.

17. 1) $x^2 - 6x + a = (x+b)^2$ எனின், a>b என்பவற்றின் பெறுமானங்களைக்காணுங்கள்.
 2) $x^2 - 6x + a$ என்ற இருபடிச் சமன்பாட்டின் ஒரு மூலம் 3 எனின், மற்றைய மூலகத்தைக் காண்க.

18. உருவில் AB// DC, AB = 4cm, DC = 5cm, AO=2cm, DO=3cm. OB,OC என்பவற்றின் நீளங்களைக் காணுங்கள்.





19. மடக்கை அட்டவணை பயன்படுத்தாமல் சுருக்குக.
 $lg\sqrt{5}$ 1/2lg 80 - lg

20. x = 4at, $y = 2at^2$ என அமையும்போது t ஐ நீக்கி yஐ a, x என்பவற்றில் தாருங்கள்.

21. ரூபா 14 பங்குகளை ரூபா 20 படி வாங்குவதற்கு குமணன் ரூபா 80,000ஐ கம்பனி ஒன்றில் முதலீடு செய்தார் எனின்,
 1) குமணன் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காணுங்கள்.
 2) மொத்தப்பங்குகளின் பெயர் மாத்திரை பெறுமதியைக் காணுங்கள்.

22. படத்தில் ABC ஒரு சமபக்க முக்கோணி ஆகும். Bx = cy எனின்,
 1) ஒருங்கிசையும் முக்கோணச் சோடி ஒன்றைப் பெயரிடுக.
 2) அவை ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தைத் தருக.





23. $(x^2 - 1), (x^2 + 2x + 1)$ இன் கோவைகளின் பொது மடங்கின் சிறியதைக் காணுங்கள்.

24. அமீயாஸ் தம்மிடமிருந்த பணத்தில் 1/6ஐத் தனது மனைவிக்கும் மிகுதியைச் சமமாகத் தனது மூன்று புத்திரர்களுக்கு பிரித்து கொடுக்கிறான். ஒரு புத்திரனுக்குக் கிடைத்த பங்கைக் காணுங்கள்.


25. -5, a, b, c, d ............. 15, 17 என்பன கூட்டல் விருத்தியில் உள்ள உறுப்புகள் ஆகும். (a + b + c + d) இன் பெறுமதியைக் காணுங்கள்.

26. இவ் வட்டத்தின் மையம் Oஆகும். Ax = 8cm, xB = 2cm எனின், நாண் PQ இன் நீளத்தைக் காணுங்கள்.





27. ஒரு மட்டமான தரையில் வண்டி மூலம் இரண்டு மணித்தியாலங்களில் 18km செல்வானாயின்,
 1) வண்டியின் கதியை $ms^{-1}$இல் காணுங்கள்.
 2) வண்டி சக்கரத்தின் அச்சின் ஒழுக்கு பற்றி யாது கூறுவீ?


28. உருவில் ABCDE எனும் ஐங்கோணி ஒன்றின் உச்சிக் கோணங்கள் காட்டப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் x இன் பெறுமதியைக் காணுங்கள்.




29. AB என்பது 10m நீளமான உயர்த்தி. அது A பற்றிச் சுழலுகின்றது. BP எப்போதும் கிடைத்தளத்திற்கு நிலைக்குத்தாக இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது. P ஆனது தரையைத் தொட்டுக்கொண்டு அசையுமாயின்,
 1) P இன் ஒழுக்கு பற்றி யாது கூறுவீர்? காரணம் தருக.
 2) பரு மட்டைப் படம் வரைக.




30. உருவில் சீரான பாதையொன்றில் முனை Aஇல் இருந்து 4.4m தூரத்திலுள்ள மறு முனை Bயை நோக்கி 7cm ஆரையுடைய ஒரு வட்ட வளையம் 11cm51 எனும் சீரான கதியுடன் சுழல்கின்றது. இவ்வளையம் முனை A இல் இருந்து முனை B யை அடையும்போது,
 1) ஒரு முறை சுழல்கின்றபோது சென்ற தூரத்தை cm இல் காணுங்கள்.
 2) Bயை அடையும்போது சுழற்றிகளின் எண்ணிக்கையும் A அடைய எடுத்த நேரத்தையும் காண்க.




### பகுதி B

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.


01. தரவுகளைத் தொகுப்பு கணிப்பீட்டில் தொகுக்கப்பட்ட தகவல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | பங்குலாப விகிதம் | பங்கு ஒன்றின் பெயர் மாத்திரைப் பெறுமானம் | பங்கு ஒன்றின் விற்.விலை |
|---|---|---|---|
| முருகவேல் அன் கம்பனி | 14% | ரூபா 12.00 | ரூபா 12.00 |
| ஜேசு என்டர் பிரைஸ் | 10% | ரூபா 10.00 | ரூபா 8.00 |
| பெனஸ்சின் லிமிடெட் | 20% | ரூபா 20.00 | ரூபா 25.00 |

a) அட்டவணையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
 1. எந்த நிறுவனத்தில் சமத்திலும் குறைவாக விற்கப்படுகின்றன?
 2. எந்த கம்பனியில் சமத்தில் விற்பனை நடைபெற்றுள்ளது?
 3. ஜேசு என்டபிரைஸ் நிறுவனத்தில் 300 பங்குகளை வாங்கி ஒருவனுக்கு வருடாந்தம் கிடைக்கும் பங்குலாபம் எவ்வளவு?
 4. பெனஸ்சின் லிமிடெட் ரூபா 400.00ஐ வருடாந்தம் பங்குலாபம் பெறுவதற்கு முதலீடு செய்யவேண்டிய தொகை யாது?

b) r% பங்குலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் ரூபா x பெயர்மாத்திரைப் பெறுமானம் கொண்ட பங்குகளை ரூபா y படி வாங்குவதன் மூலம் வருடாந்தம் ரூபா p ஐ பங்குலாபமாகக் பெறுவதற்கு முதலீடு செய்யவேண்டிய பணம் ரூபா A சார்பில் r, x, y, p என்பவற்றில் எழுதுக.

02. 7/8cm உள் ஆரையுள்ள குழாயொன்றினூடாக $8cms^{-1}$ என்ற வேகத்தில் நீர் பாய்கிறது. இந்நீரானது 11cm நீளமும், 7cm அகலமும், 8cm உயரமும் உள்ள கனவடிவத்தொட்டி ஒன்றில் நிரப்பப்படுகின்றது.
 1) குழாயின் குறுக்கு வெட்டுப் பரப்பளவைக் காண்க.
 2) குழாயினூடாக ஒரு செக்கனில் வெளிவரும் நீரின் கனவளவைக் காணுங்கள்.
 3) தொட்டியின் கனவளவைக் காணுங்கள்.
 4) தொட்டி முற்றாக நிரம்ப எவ்வளவு நேரம் எடுக்கும் எனக் காணுங்கள்.
 5) தொட்டியின் அடிப்பகுதியில் கிடையாக 7/16cm ஆரையுடைய குழாயினூடாக $16cms^{-1}$ வேகத்தில் நீர் பாய்கின்றது எனின், தொட்டியில் உள்ள நீர் முற்றாக வெளியே எடுக்கும் நேரத்தைக் காணுங்கள்.



03. ஆஞ்சனேயர் என்ற நிறுவனம் கடன்தொகைக்கு 12% ஆண்டு வட்டி அறவிடப்படுகின்றது. சப்ராஸ் என்ற நிறுவனத்தில் கடன்தொகைக்கு செல்லும் மீதிக்கு மாதாந்தம் வட்டி அறவிடப்படுகின்றது. ஆண்டுக்கு 12% அறவிடப்படும். சுஜீந்தன் என்பவர் ஆஞ்சனேயர் நிறுவனத்திலிருந்து ரூபா 25,000ஐக் கடனாகப் பெறுகின்றார். முபாஸ் என்பவர் சப்ராஸ் என்ற நிறுவனத்திலிருந்து அதே தொகையை கடனாகப் பெறுகின்றார். எனின்,
 1) சுஜீந்தன் இரண்டு வருடங்களில் செலுத்தவேண்டிய மொத்த வட்டியைக் காணுங்கள்.
 2) முபாஸ் 24 மாதங்களில் செலுத்த வேண்டிய மொத்த வட்டியைக் காணுங்கள்.
 3) எந்த நிறுவனத்தில் கடன்பெறுவது இலாபகரமானது.

மறுபக்கம் பார்க்க....

இன்றைய கணித பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரனை வழங்குவது
NSP ®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்
எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்
★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ எழுதத்தூணடுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்
இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்
Sanghamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிதம் I இன் தொடர்ச்சி.......

04. சம அளவான நான்கு அட்டைகளில் கீழே காட்டப்பட்டுள்ளவாறு இலக்கமிடப் பட்டிருந்தன. [1] [2] [3] [4]

இவற்றிலிருந்து ஓர் அட்டை எழுமாறாக எடுக்கப்பட்டு அதிலுள்ள இலக்கம் குறித்துக்கொள்ளப்பட்ட பின்னர் திரும்பவும் வைக்கப்பட்டது. இரண்டாவது முறையும் ஓர் அட்டை எழுமாறாக எடுக்கப்பட்டு அதிலுள்ள இலக்கம் குறிக்கப்பட்ட பின்னர் திரும்பவும் வைக்கப்பட்டது.

1) மாதிரி வெளியை புள்ளிவரைபு ஒன்றில் எடுத்துக் காட்டுக.



2) எடுக்கப்பட்ட இரு அட்டைகளில்,
   a. ஒன்றில் மட்டும் இலக்கம் 4 குறிக்கப்பட்டு இருக்க நிகழ்தகவு யாது?
   b. ஒன்றிலேனும் இலக்கம் 4 குறிக்கப்பட்டு இருக்க நிகழ்தகவு யாது?
3) எடுக்கப்பட்ட இரு அட்டைகளிலும் ஒரே இலக்கம் குறிக்கப்பட்டிருக்க நிகழ் தகவு யாது?
4) எடுக்கப்பட்ட இரு அட்டைகளிலும் உள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 6 ஆக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

05. கடையொன்றில் முதல் 40 நாட்களில் விற்கப்பட்ட சீனியின் அளவுகள் தொடர்பாக மீடிறன் பரம்பல் பின்வருமாறு:-

| நிறை | 31-35 | 36-40 | 41-45 | 46-50 | 51-55 | 56-60 |
|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 03 | 07 | 09 | 12 | 05 | 04 |

1) மேலே உள்ள அட்டவணையின் கீழ் எல்லைப் புள்ளிகள், மேல் எல்லைப் புள்ளி களைக் காணுங்கள்.
2) திறன் மீடிறன் அட்டவணையைத் தயாரித்து பூரணப்படுத்துக.
3) திறள் மீடிறன் வரைபை வரைபுத்தாளில் வரைக.
4) திறன் மீடிறன் வரைபைப் பயன்படுத்தி,
   1. முதலாம் காலணை.
   2. இடையம்.
   3. மூன்றாம் காலணை.
   4. காலணை இடைவீச்சு என்பவற்றைக் காணுங்கள்.

# கணிதம் - II (புதிய பாடத்திட்டம்) 32-T-II

* பகுதி Aயிலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி Bயிலிருந்து ஐந்து வினாக் களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு விடை தருக.
* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

## பகுதி - A

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.


01. பொருட்களை உற்பத்தி செய்வோன் ஒருவன் தன் விலைப்பட்டியில் பொருளுக்கு குறித்த விலையிலிருந்து 25% கழிவு கொடுத்து ஒரு மொத்த வியாபாரிக்கு பொருளை விற்றான். அப்படி கழிவு கொடுத்தும் விற்றும் அவன் பொருளை உற் பத்தி செய்ய செலவு செய்த பணத்தில் 12 1/2% இலாபம் பெறுகிறான். மொத்த வியாபாரி பொருளை ரூபா 292.50இற்கு விற்பதனால் 30% இலாபமடைகிறான். உற்பத்தியாளன்.
   1) மொத்த வியாபாரிக்கு பொருளை விற்ற விலை என்ன?
   2) விலைப்பட்டியில் பொருளுக்கு குறித்திருந்த விலை யாது?
   3) பொருளை உற்பத்தி செய்ய செலவிட்ட தொகையைக் காணுங்கள்.


02. சார்பு $y = 2(x + 1)^2-9$இன் வரைபை வரைவதற்குப் பொருத்தமான x, y ஆகிய வற்றின் பெறுமானங்களைக்கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 9 | -1 | -7 | | | -1 | 9 |

a) 1. மேலே உள்ள அட்டவணையின் வெற்றிடத்தை நிரப்புக.
   2. தரப்பட்ட வரைபுத்தாளில் x அச்சு வழியே 10 சிறு சதுரங்களினால் ஓர் அலகையும் y அச்சு வழியே 10 சிறு சதுரங்களினால் இரு அலகுகளையும் குறிக்குமாறு அளவிடையை எடுத்து வரைபை வரைக.
b) உமது வரைபைப் பயன்படுத்தி,
   1. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   2. திரும்பற் புள்ளியின் ஆள்கூற்றை எழுதுக.
   3. $Y - 3 = 2 (x+1)^2-9$ என்னும் சார்பின் இழிவுப் பெறுமானத்தைக் காண்க.
   4. சார்பு மறையாக குறைந்து செல்லும் xஇன் பெறுமான வீச்சைக் காணுங்கள்.
   5. $y = 1/2x$ என்னும் சமன்பாட்டின் வரைபை வரைக.
   6. $(n+1)^2 + 1/2x + 9$ என்னும் சமன்பாட்டின் தீர்வுகளைக் காணுங்கள்.

03. a) காரணிப்படுத்துக. $a^3 b^3 + 27$
   b) தரப்பட்ட இரு செவ்வகங்களினதும் பரப்பளவுகள் சமனாகும். அவற்றின் அளவுகள் cmஇல் தரப்பட்டுள்ளன.




   1. a இல் ஓர் இருபடிச் சமன்பாட்டை அமைக்குக.
   2. a இன் பெறுமானத்தைக் காணுங்கள்.
   3. அச் செவ்வகங்களினது சுற்றளவுகளின் வித்தியாசத்தைக் காணுங்கள்.

04. a) தாயம் என்றால் என்ன எனக் கூறுங்கள்
   b) $A = \begin{bmatrix} 2 & 1 & -3 \\ 3 & - & 0 \\ 4 & 3 & -1 \end{bmatrix}$ $B = \begin{bmatrix} 1 & 0 & 0 \\ 0 & 1 & 0 \\ 0 & 0 & 1 \end{bmatrix}$
   1. A என்ற தாயங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   2. B என்ற தாயங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   3. A என்ற தாயத்தின் எத்தனை மூலகங்கள் காணப்படுகின்றன?
   4. B என்ற தாயத்தின் தாய வரிசையை எழுதுங்கள்.
   5. தாயம் A இல் 2, -2, -1 மூலகங்களை இணைக்கும்போது உருவாகும் நேர் கோடு எவ்வாறு அழைக்கப்படும்.
   6. (A + 2B)இன் பெறுமதியைக் காணுங்கள்.
   7. $C = \begin{bmatrix} x & 1 & -3 \\ y & -2 & 0 \\ z & y & -1 \end{bmatrix}$ என்ற தாயம் A என்ற தாயத்திற்கு சமன் ஆயின், x, y, z ஐக் காண்க.

05. 200m இடைத்தூரத்தில் ஒரு பனைமரமும், ஒரு கமுக மரமும் உள்ளன. பனை மரத்தின் உச்சியிலிருந்து கமுக மரத்தின் உச்சியின் இறக்கக் கோணம் $30^0 26'$ ஆகும். கமுக மரத்தின் உச்சியிலிருந்து பனையின் அடியின் இறக்கக்கோணம் $54^0 18'$ ஆகும்.
   a) 1. பரும்படியான படம் வரைந்து தரவுகளைக் குறித்துக் காட்டுக.
      2. திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி.
         1) கமுக மரத்தின் உயரத்தைக் காண்க.
         2) பனை மரத்தின் உயரத்தைக் காண்க.
         3) இரு மரங்களினதும் உச்சிகளை இணைக்கும் கோட்டின் நீளம் யாது?

06. 40 நாட்களாக உண்டியலில் போட்ட பணம் பற்றி விவரத்தைக் கீழே மீடிறன் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| போட்ட பணத்தின் அளவு ரூபா | 00-21 | 22-43 | 44-65 | 66-87 | 88-109 |
|---|---|---|---|---|---|
| நாட்களின் எண்ணிக்கை | 5 | 10 | 14 | 9 | 2 |

a) மேற்படி பரப்பலின்
   1. ஆகார வகுப்பைக் காணுங்கள்.
   2. இடை வகுப்பைக் காணுங்கள்.
b)

| வகுப்பாயிடை | ந.பெறுமானம் | விலகல் (d) | மீடிறன் (f) | fd |
|---|---|---|---|---|
| 00 - 21 | .................... | ................ | 5 | .............. |
| 22 - 43 | .................... | ................ | 10 | .............. |
| 44 - 65 | .................... | 0 | 14 | .............. |
| 66 - 87 | 76:5 | 22 | 9 | 198 |
| 88 - 109 | 98.5 | 44 | 2 | 88 |
| | | | εf = ........... | εf = ............ |

   1. மேலே உள்ள அட்டவணையை நிரப்புக.
   2. குமுதினி சராசரியாக ஒரு நாளில் போட்ட பணத்தின் அளவைக் காணுங் கள்.
   3. அவள் 40 நாட்களிலும் சேர்த்த மொத்த பணம் எவ்வளவு ரூபா எனக் காணுங்கள்.


## பகுதி - B

* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.


07. a) ஒரு கூட்டல் விருத்தியின் n உறுப்புக்களின் கூட்டுத்தொகை $n(n+2)/2$ எனின்,
      1. முதல் மூன்று உறுப்புக்களைக் காணுங்கள்.
      2. பொது வித்தியாசத்தைக் காணுங்கள்.
      3. முதல் 20 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
   b) பெருக்கல் விருத்தி ஒன்றின் முதலாம், மூன்றாம் உறுப்புக்களின் கூட்டுத் தொகை 10, இரண்டாம், நான்காம் உறுப்புக்களின் கூட்டுத்தொகை 5 ஆகும்.
      1. பொது விகிதத்தைக் காணுங்கள்.
      2. முதலாம் உறுப்பைக் காணுங்கள்.

08. cm/mm அளவிடை உள்ள ஒரு நேர் விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி அமைப்பு கோடுகளைத் தெளிவாகத் காட்டி,
   1) BC = 7.5cm, AD = 5.2cm, DC = 8.8cm, $D\hat{A}B = 90^0$, AB = 6.3cm ஆகுமாறு நாற்பக்கல் ABCD ஐ வரைக.
   2) A, B, D எனும் புள்ளிகளினது செல்லும் வட்டத்தை வரைக.
   3) BC, DC என்பவற்றிலிருந்து சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை வரைக.
   4) அவ் ஒழுக்கு வட்டத்தை வெட்டும் புள்ளிகளை x, y எனப் பெயரிடுக.
   5) xyஐ அளந்தெழுதுக.
   6) நீர் வரைந்த வட்டத்திற்கு B இல் தொடலி ஒன்றை அமைக்குக.


09. Oவை மையமாகவுடைய வட்டத்தில் OB செங்குத்து AC ஆகும், AC = 12cm, OC = 5cm, $A\hat{O}B = 60^0$ எனின்,
   1) வட்டத்தின் ஆரையைக் காணுங்கள்.
   2) வட்டத்தின் பரப்பளவைக் காணுங்கள்.
   3) ஆரைச்சிறை OABஆனது முழு வட்டத்தின் என்ன பின்னமாகும்?
   4) ஆரைச்சிறை AOB இன் பரப்பளவைக் காணுங்கள்.
   5) முக்கோணி AOC இன் பரப்பளவைக் காணுங்கள்.
   6) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காணுங்கள்.





10. யாதாயினும் இரு முக்கோணிகள் ஒருங்கிசைவதற்கான விதிகளைப் படங்களுடன் விளக்குக.
   1) ABC எனும் முக்கோணியின் பக்கம் ABஇல் BX = AY ஆகுமாறு x, y எனும் புள்ளிகள் உள்ளன. XN//AC ஆகவும், ym//BC ஆகவும் N.M எனும் புள்ளிகள் அமைகின்றன.
   2) உருவை பிரதி செய்து தரவுகளை அதிற் குறித்துக் காட்டுங்கள்.
   3) $\Delta AYM = \Delta BXN$ என நிறுவுங்கள்.
   4) BNMY என்பது ஓர் இணைகரம் என நிறுவுக.




11. a) ஒரு வட்டத்திற்கு வெளியேயுள்ள புள்ளியொன்றிலிருந்து அவ்வட்டத்திற்கு இரு தொடலிகள் வரையப்பட்டால் அத்தொடலிகள்
      1. நீளத்தில் சமனாகும்.
      2. வட்ட மையத்தில் சமகோணங்கள் எதிரிமைக்கும்.
      3. வெளிப்புள்ளியையும் மையம் இணைக்கும் கோட்டுடன் சமகோணங்களை அமைக்கும் என நிறுவுக.
   b) உருவில் தரவுகளைக்கொண்டு பின்வருவனவற்றை நிறுவுங்கள்.
      1. TP = TR = TQ        2. $P\hat{R}Q = 90^0$




12. அருகேயுள்ள வென்னுருவத்தில் குறிக்கப்பட்டுள்ள எண்கள் அவ்வப்பிரதேசத் திலுள்ள மூலகங்களின் எண்ணிக்கையை வகை குறிக்கின்றன.
$n(A \cap B) = 8$, $n(A' \cap B) = 20$, $n(A \cup B)' \cap C = 18$, $n(A) = 19$, $n(A \cup B \cup C)' = 17$, $n(C' \cap (A \cup B) = 24$ எனின்,
   1) வென்னுருவை மீள வரைந்து அதிலே மேற்போந்த தரவுகளைக் குறிக்குக.
   2) n(B') யைக் காணுங்கள்.
   3) $(A \cup B) \cap C$ ஐ நிழற்படுத்திக் காட்டுக.




-நிறைவுற்றது-

ஆசிரியர்: துரைராஜா ஜோன்சன்,
மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி,
மன்னார். தொ.பே.இல: 0718618701

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் சிறுவர் தினவிழா சுன்னாகம் ஐயன்னா சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் உள்ளூராட்சி உதவியாளர் திருமதி ஜனனி ஆனந்தாண்டேஸ்வரர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், கூட்டத்தில் கலந்து கொண்டோரை அடுத்த படத்திலும், அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுன்னாகம் செய்தியாளர்)

# அரசின் கணக்கறிக்கைக்கு ஐ.தே.கட்சி கடும் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 5

அரசு 2010ஆம் ஆண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையை நேற்று முன்தினம் நாடாளுமன்றில் சமர்ப்பித்தமைக்கு ஐ.தே.க்ட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்து கூச்சல், குழப்பங்களை விளைவித்தனர்.

தங்களது மேசைகள் மீதிருந்த புத்தகங்கள், பைல்கள் போன்றவற்றை மேசைகளில் தட்டியும், கூச்சல்களை எழுப்பியும் அவர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் ஐ.தே.கவிற்கும் அரசுக்குமிடையில் சுமார் 40 நிமிடங்கள் வாக்குவாதம் இடம்பெற்றது. இந்தக் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் அமைச்சர் சரத் அமுனுகம கணக்கறிக்கையை சபையில் சமர்ப்பித்து விவாதத்தைத் தொடக்கி வைத்தார். இந்த அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக அமைச்சர் சரத் அமுனுகம் எழுந்தபோது, எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோஸப் மைக்கல் பெரேரா ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி ''இந்த அறிக்கை எந்தச் சட்டத்தின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்றது'' என்று கேட்டார். இந்த அறிக்கை சட்டத்திற்கு முரணா னது அல்ல. இதற்குமுன் 10 தடவைகள் இவ்வாறு இடைக்கால கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சரத் அமுனுகம பதிலளித்தார். கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து அனைவரதும் அமைதியைப் பெற்றே இந்த சபைக்கு கொண்டுவரப்படுகின்றது என்றும் அமைச்சர் சொன்னார்.

இந்த அறிக்கையை அரசியல் யாப்புக்கும், நிதி முகாமைத்துவ சட்டத்திற்கும் உட்பட்டுத்தான் கொண்டு வரமுடியும் என்றும் யாப்பின் 150 ஆவது சரத்தை மாத்திரம் அடிப்படையாக வைத்து இதைக் கொண்டுவர முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

இந்த அறிக்கை பிரேரணையாக இந்தச் சபைக்குக் கொண்டுவரப்படுகின்றது என்றும் அரசியல் யாப்பின் 26 ஆவது சரத்தின் முதலாம் பிரிவின்படி அவசர வேளைகளில் இவ்வாறு கொண்டுவர முடியும் என்றும் சபாநாயகர் கூறினார். சபாநாயகர் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து சரத் அமுனுகம அறிக்கையை சபையில் சமர்ப்பித்து விவாதத்தைத் தொடங்கினார். அப்போது ஐ.தே.கட்சி எம்.பிக்கள் அனை வரும் எழுந்து நின்று மேசைகளில் தட்டி கூச்சல், குழப்பங்களை ஏற்படுத்தினர். இந்நிலை 15 நிமிடங்கள் தொடர்ந்தன. சுமார் 40 நிமிடங்கள் கூச்சல், குழப்பம் மற்றும் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்று ஓய்ந்தன. (சி)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அரசின் அடுத்த வரவு செலவுத் திட்டம்

## அமைச்சர் அமுனுகம சவால்

கொழும்பு, நவ.5

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தை எமது அரசு 2010 இல் சமர்ப்பிக்கும் என்று அமைச்சர் சரத் அமுனுகம செவ்வாயன்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் 2010 ஆம் ஆண்டுக்கான இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு;-

2010 ஆம் ஆண்டு ஒரு நம்பிக்கை மிக்க ஆண்டாகும். முழு உலகுமே பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த நிலையில் எமது நாடு மட்டும் அதிலிருந்து தப்பியிருந்தது.

கடந்த வருடங்களில் எம்மால் நான்கு வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடிந்தது. அடுத்த வருடத்தில் அது ஏழு விதமாக மாறும்.

எம்மால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால கணக்கறிக்கை நடைமுறைக்கு முரணானது என்று எதிர்க்கட்சி கூறுகின்றது. ஆனால், வரலாற்றில் எத்தனையோ தடவைகள் இவ்வாறு இடைக்கால கணக்கறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில்கூட இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், ஐ.தே.கட்சி ஏற்க மறுக்கின்றது. இப்படிப்பட்ட கட்சியை இந்நாட்டு மக்கள் எப்படி ஏற்பர்?

அடுத்த வருடம் ஏப்ரலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வரவு - செலவுத் திட்டத்தை நாம் சபையில் சமர்ப்பிப்போம். அப்போது ஐ.தே.கட்சி எம்.பிக்கள் இந்தச் சபையில் இருக்கமாட்டார்கள். அவர்கள் தேர்தலில் தோற்றுவிடுவர்.

யுத்தக் காலத்தில் எமது நாட்டுப் பொருளாதாரம் பாதிப்படையத் தொடங்கியது. யுத்தம் முடிந்ததும் பொருளாதாரம் வளர்ச்சியடைத் தொடங்கியுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் அரசால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால கணக்கறிக்கை நான்கு மாதங்களுக்கு மாத்திரம்தான். அதனைத் தொடர்ந்து நல்லதொரு வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். - என்றார். (சி)

# இராணுவ முகாமில் குண்டு வெடித்துச் சிப்பாய் மரணம்

கொழும்பு, நவ.5

மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவமொன்றில் இராணுவக் குண்டு செயலிழக்கும் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், அப்பிரிவைச் சேர்ந்த இராணுவ லெப்டினன் தர அதிகாரி ஒருவர், இருபொலிஸ்கான்ஸ்டபிள்கள் ஆகிய மூவர் காயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்துள்ள மூவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் லான்ஸ் கோப்ரல் தரத்தைச் சேர்ந்த லலித் குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அண்மைக் காலங்களில் தேடுதல் நடவடிக்கைகளின்போது கண்டுபிடிக்கப்பட்ட கிளேமோர் உட்பட வெடிப் பொருள்களை முகாம் பகுதியில் உள்ள பயிற்சி மைதானத்தில் வழமைபோல் செயலிழக்கச் செய்யும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)


21ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 02 . 01 . 1965

உதிர்வு 16 . 10 . 2009



அமரர் சிறீபதி அருள்தாஸ்

(உரிமையாளர், நியூசண் நகை மாளிகை, நெல்லியடி)

கடந்த (16.10.2009) அன்று சிவபதமடைந்த எங்களின் குடும்ப விளக்கு சிறீபதி அருள்தாஸ் அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டோருக்கும், உதவிகள் புரிந்தோருக்கும், மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இரங்கல் உரை ஆற்றியோருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.11.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப் பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மில் லேன்,
இமையாணன், உடுப்பிட்டி. (90569)

தகவல்:
குடும்பத்தினர்.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.

PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



27ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர் நாகமணி பிள்ளையான்

அன்னை மடியில் 08.03.1943

ஆண்டவன் அடியில் 10.10.2009


கடந்த (10.10.2009) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (05.11.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (90563) பி.நித்தியபாலன் (லண்டன்), பி.ஜீவபாலன் (லண்டன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் பழத்தை 'பணம்' பழமாக மாற்றிய பெண்கள்

குடாநாட்டின் குறியீடாகக் கொள்ளப்படுவது பனை. பனம் பொருள்களுக்கு எப்போதுமே மவுசு குறைவதில்லை. ஆயினும் பனம்பொருள்களை உற்பத்தி செய்பவர்களின் எண்ணிக்கைதான் குறைந்துகொண்டே வருகின்றது. நவீனத்துவத்தின் பரவுகை காரணமாகப்



பனம்பொருள் சார்ந்த உற்பத்திகளில் ஈடுபடுவது கௌரவக் குறைச்சலான விடயமாக எண்ணப்பட்டு மெல்லமெல்ல அவை கைவிடப்படுகின்றன. இதனால் இப்போதுள்ள பனம்பொருள் தயாரிப்பு முறைகள் எம்முடைய சந்ததியோடு அழிந்துவிடும் அபாயமும், எதிர்கால சந்ததியினர் அவற்றினை அறியமுடியாத அவலநிலையும் ஏற்பட்டு விடலாம். புழுக்கொடியல், ஒடியல், பனாட்டு என்பன எல்லோருக்குமே நாவிலே நீரை

## இவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் உள்ளூர் வளத்தைப் பெருக்கலாம்

ஊறப்பண்ணுகின்ற உணவுப் பண்டங்கள். இவற்றுக்கு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் பலத்த கிராக்கி நிலவுகின்றது. ஆயினும் அவற்றைப் போதியளவு உற்பத்தி செய்யாத காரணத்தினால் ஏற்றுமதி செய்யும்



வாய்ப்பை இழந்து நிற்கின்றோம்.

இந்த நிலையில் மரங்களிலிருந்து வீழ்ந்து இதுநாள் வரையும் வீணாகிப்போன பனம்பழங்களை 'பனாட்டாக', பதப்படுத்தப்பட்ட பனங்களிகளாக மாற்றிவருகின்றார்கள் கைதடி தெற்கு சனசமூக நிலையத்துக்கூடான சமூக முன்னெடுத்தல் குழுவினர்.

இக்குழுவிலுள்ள பெண்கள் அதிகாலையிலேயே தமக்கு அருகிலுள்ள பனைமரங்கள் நிறைந்துள்ள வளவுக்குச் சென்று - முதல்நாளே சுத்தப்படுத்தப்பட்ட அந்த வளவுகளில் வீழ்ந்து கிடக்கும் பனம்பழங்களை சேகரித்து வருவர். அதன்பின்னர் அவற்றினைக் கொதிநீரிலிட்டு நன்கு கழுவுவார்கள். இதனால் பனம்பழத்திலுள்ள கிருமிகள் அழிக்கப்படுவதோடு, அதனுடைய வெளித்தோலையும் இலகுவாக உரித்தெடுக்க முடியும். அதன்பின்னர் அவற்றிலிருந்து பனங்களிகளைப் பெற்று நிலத்திலிருந்து ஏழெட்டு அடிகள் உயரமாக அமைக்கப்பட்ட பந்தலில் விரிக்கப்பட்டுள்ள 'தடுக்கில்' (பனாட்டைக் காயவைக்கும் சிறியவகைப் பாய், தடுக்கு என்று சொல்லப்படும்) அவற்றினை ஊற்றுவார்கள். இவ்வாறு ஏழுநாள் பனங்களிகளைத் தடுக்கில் வார்ப்பார்கள். ஏறக்குறைய 13 நாள்கள் நல்ல வெயில் எறித்தால் பனாட்டு சரியான பதத்துக்குத் தயாராகிவிடும். அதன்பின்னர் தடுக்கிலிருந்து துண்டம்துண்டமாக பனாட்டை வெட்டியெடுத்து விற்பனைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

பனாட்டினைச் செய்வதற்காக காலநிலை இல்லாதபோது - வெயில் எறிக்காமல் மழை பெய்தால்- பனங்களியைக் கொதிக்கும் வரை சூடாக்கி அதனுள் அனுமதிக்கப்பட்ட அளவு பொருளைப் பாதுகாத்து வைக்கும் இரசாயனக் கலவையைச் சேர்ப்பதனூடாக பதப்படுத்தப்பட்ட பனங்களியினைப் பெற்றுக்கொள்கிறார்கள். அத்துடன் அந்தப் பனங்களியின் சூடு ஆறியவுடன் சுத்திகரிக்கப்பட்ட கொள்கலன் ஒன்றில் ஊற்றி அதன் மூடியை காற்றுப்புகாவண்ணம் இறுக அடைப்பதனூடாக மிக நீண்டகாலத்துக்குப் பழுதாகாதவண்ணம் பனங்களியைப் பாதுகாக்க முடியுமென்று இதனைத் தயாரிக்கும் பெண்கள் தெரிவிக்கின்றார்கள். பதனிடப்பட்ட பனங்களியினைப் பிறிதொரு நாளில்- பனாட்டுத் தட்டுப்பாடு ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றினைத் தடுக்கில் வார்த்துச் சுவை மிகுந்த பனாட்டைப் பெற்றுக்கொள்ளலாம். அதுதவிர பனங்களியிலிருந்து செய்யப்படும் பனம்பழக் குளிர்பான உற்பத்திக்கும் இதனைப் பயன்படுத்தலாம். ஏ-9 வீதி மீளத் திறக்கப்பட்டுள்ள நிலையில் உல்லாசப் பயணிகளும் புலம்பெயர் மக்களும் மீண்டும் குடாநாட்டிற்குள் திரள் திரளாக வரத்தொடங்கியுள்ளனர். அவர்களெல்லாம் உடலுக்கு பலம் சேர்க்கும் உள்ளூர்த் தயாரிப்பான பனம்பழக் குளிர்பானத்தை விரும்பி அருந்துகிறார்கள். எனவே, பனங்களியைப் பதப்படுத்தி வைப்பதனூடாக சிறப்பான சந்தை வாய்ப்பினை [illegible] பெற்றுக்கொ[illegible]ாக இருக்கும்.

- ஒளஸியன்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்துக்கூடாக சமூக முன்னெடுத்தல் குழுவினருக்கு இத்தகைய நெறிப்படுத்தலை 'கெயார்' தொண்டு நிறுவனம் வழங்கியிருந்தது. ஏனைய தொண்டு நிறுவனங்களின் உதவித்திட்டங்களை விடவும் இந்நிறுவனத்தின் இத்தகைய செயற்பாடு சமூகப் பயனுள்ளதாக அமைந்துள்ளதாகவும் கருத ஏதுவாகின்றது. ஏனெனில் பொருள்களை வழங்குதல், நிவாரணம் வழங்குதல் என்பன போன்ற தொண்டு நிறுவனச் செயற்பாடுகளில் தங்கி வாழும் நிலையையே சமூகத்தில் தோற்றுவிக்கும். எதிர்காலச் சோம்பேறிகளாக எமது சமூகத்தவர்கள் மாறக்கூடிய நிலையும் இதனால் ஏற்படலாம். ஆயினும் தமது சொந்தக்காலில் நின்றுகொண்டே தமது பொருளாதாரப் பலத்தையும் சமூக அபிவிருத்தியையும் முன்னெடுக்கும் தூண்டல்களை உருவாக்கும் செயற்றிட்டங்களே சமூகப் பொருத்தப்பாடுடையவை. இதனூடாக உள்ளூர் வளங்களைக்கொண்டு உச்சப் பயன்பாட்டையடைவதோடு சமூக அபிவிருத்தியும் இயல்பாகவே ஏற்பட்டுவிடும். இதனை இலக்காகக் கொண்டே பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கத்தினரின் உதவியுடன் இத்திட்டத்தைக் 'கெயார்' நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. பனம்பழத்தைப் பணம்பெறும் பழமாக இக்குழுவின் உறுப்பினர்கள் மாற்றியுள்ளமை ஒரு முன்மாதிரியான செயற்பாடாகவே கொள்ளவேண்டும்.

இச்சமூக முன்னெடுத்தல் குழுவினர் பல்வேறு சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். மாதத்திற்கொருமுறை தமக்கிடையே கூடிக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதோடு குழு உறுப்பினர்களுக்கு சுயதொழில் கடனையும் வழங்கி வருகின்றனர். அதனைவிட சமூகப் பணிகளிலும் தாமாகவே முன்வந்து தோள் கொடுக்கிறார்கள். அண்மையில் வன்னியிலிருந்து அழைத்துவரப்பட்டு நலன்புரி நிலையங்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டபோது சமூக முன்னெடுத்தல் குழுவினர் அம் முகாம்களுக்குச் சென்று சேவையடிப்படையில் நலன்புரி நிலைய மக்களுக்கான உணவு சமைக்கும் பணியினைச் சில நாள்களுக்குப் பொறுப்பெடுத்துச் செய்வார்கள். இதனைவிட கைதடி தெற்குப் பகுதியிலுள்ள மிக நீளமான வெள்ள வாய்க்காலையும் புனரமைத்து வருகிறார்கள். 36 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சமூக முன்னெடுத்தல் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கிடையேயான உறவுநிலை இப்போது முன்னரைக்காட்டிலும் இறுக்கமடைந்திருப்பதாகக் கூறுகின்றனர். குழுவாக இணைவதற்கு முன்னர் வீடுகள் தூரத்தூர இருப்பதாலும் அடிக்கடி சந்தித்துக்கொள்ள முடியாததாலும் ஓரளவுக்கு விலகல் நிலையிலேயே இவர்களுக்கிடையேயான உறவுநிலை காணப்பட்டது. ஆயினும் 36 பேர்கொண்ட சமூக முன்னெடுத்தல் குழுவில் இணைந்துகொண்டதன் பின்னர் அந்த நிலைமை மாறி இப்போது ஒவ்வொருவரினதும் சுக துக்கங்களில் தோள்கொடுக்கும் பங்காளிகளாக மாறியுள்ளனர். [illegible], சுயதொழில் [illegible] கிராம அபிவிருத்தி என்னும் இலக்குகளை முன்வைத்து இவர்களின் செயற்பாடு தொடர்கிறது.

அச்செயற்பாடுகளில் ஒன்றாகவே இப்போது பனம் பழத்திலிருந்து பனாட்டு, பதப்படுத்தப்பட்ட பனங்களி என்பவற்றைத் தம்முடைய வீட்டிலேயே உற்பத்தி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். ஆயினும்



தென்மராட்சிப் பனாட்டுக்குப் பொதுவாகச் சந்தைகளில் வரவேற்புக்குறைவு. முன்னர் சுத்தமற்ற முறையில் தயாரித்தல், பனாட்டைக் கீழேயே காயவைப்பதால் பனாட்டினுள் மணல் கலத்தல் என்பன காரணமாகவே யாழ்.மக்கள் தென்மராட்சிப் பனாட்டினை விரும்புவதில்லை.

ஆயினும் இப்போது அவையெல்லாம் நிவர்த்திக்கப்பட்டு சுத்தத்துக்கு முதன்மை கொடுத்து, ஒருதுளி மணற்றுகளேனும் கலக்காத வகையில் உயரமான இடத்தில் காயவைத்தே இப்போது இவர்கள் பனாட்டினைத் தயாரித்து வருகிறார்கள். இதனால் குடாநாட்டின் ஏனைய பாகங்களில் தயாரிக்கப்படும் பனாட்டுக்கு எவ்வகையிலும் தரத்திலும் சுவையிலும் குறையில்லாதவண்ணம் தென்மராட்சிப் பனாட்டும் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வெகு விரைவில் தமது உற்பத்திகளை விற்பனை செய்வதற்கான நிலையமொன்றையும் திறக்க இருக்கிறார்கள். எனவே



கொள்கலனில் அடைக்கப்பட்டுள்ள பதப்படுத்தப்பட்டுள்ள பனங்களி.

இவர்களுக்கான சந்தை வாய்ப்புகளை ஆர்வமுள்ளவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதனூடாக நமது உள்ளூர் வளத்தின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்வதனூடாக ஒரு முன்மாதிரியான இவர்களின் செயற்பாட்டையும் ஊக்குவிக்க முடியும். இதனால் காலப்போக்கில் நமது சமூகம் தன்னிறைவான பொருளாதார நிலையை நோக்கி நகரமுடியும்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறைபடிந்த கரங்களை குலுக்கியவர்கள்....!


2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதி விடுதலைப் புலிகளை முற்றிலுமாக முறியடித்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. போரின் இறுதி மூன்று நாள்களில் ஏறத்தாழ 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள். நான்காம் கட்ட ஈழப்போரில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிரிழந்தார்கள். போர்ப் பகுதியில் இருந்து உயிர் தப்பிய 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை நலன்புரி முகாம்கள் என்ற பெயரில் முள்வேலி முகாம்களில் ராணுவப் பாதுகாப்போடு சிங்கள அரசு அடைத்தது.

போர் முடிந்து ஐந்து மாத காலத்துக்கு மேலாகியும் அந்த மக்கள் விடுவிக்கப்பட்டு. தங்கள் ஊர்களுக்கும், வீடுகளுக்கும் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. முகாம்களில் போதுமான தங்குமிடம், சுகாதார வசதிகள், உணவு, மருந்து ஆகிய எல்லாமே பற்றாக்குறையாக இருந்தது. இதன் விளைவாக தினமும் 200 முதல் 300 பேர் வரை மடிந்து கொண்டிருக்கின்றனர்.

இரண்டாம் உலகப்போரின்போது யூதர்களை வதைக்க ஹிட்லர் அமைத்த முகாம்களைவிட ராஜபக்ஷ அமைத்த முகாம்கள் மிகமோசமானவை என உலக நாடுகள் குற்றஞ்சாட்டின. இந்த முகாமில் இருந்த மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகள், இடப்பெயர்வு, வாழ்வாதாரம், கூடிப்பேசும் உரிமை, குறைகளை முறையிடும் உரிமை ஆகிய எல்லாமே மறுக்கப்பட்டன.

ஐ.நா. அமைப்புகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், பிற தொண்டு நிறுவனங்கள் ஆகியவையும் இந்த மக்களுக்கு உதவுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தியா உட்பட உலக நாடுகள் அளித்த உதவியில் ஒரு சிறு பங்குகூட இந்த மக்களுக்குக் கிடைக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் உட்பட பல்வேறு நாடுகள் இந்த முகாம்களில் உள்ள சீர்கேடான நிலைமை குறித்து மிகுந்த கவலையுடன் எச்சரித்தன.

அந்த மக்களை விடுவித்து அவர்களது ஊர்களுக்குத் திரும்ப அனுமதிக்கும்படி வலியுறுத்தின. ஆனால் ராஜபக்ஷவின் கேளாக் காதுக்கு இந்தக் குரல் எட்டவில்லை. இந்த நிலைமையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அனைத்துக் கட்சிக் குழு ஒன்று முகாம்களை பார்வையிட அனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கை எதிர்க்கட்சிகளால் எழுப்பப்பட்டது.



இந்தக் கோரிக்கையைத் திசை திருப்பவும், இலங்கை முகாம்களில் நடக்கும் கொடுமைகளை மறைக்கவும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி தந்திரத் திட்டம் வகுத்தார். அதற்கிணங்க காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அனுப்புவதாக அறிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஏன் சேர்க்கவில்லை என்ற கேள்வி எழுந்தபோது, இலங்கை அதிபர் ராஜபக்ஷவிடமிருந்து தனக்கு வந்த அழைப்பின் அடிப்படையிலேயே இந்தக் குழுவை அனுப்புவதாக முதலமைச்சர் கூறினார். வேண்டுமானால் எதிர்க்கட்சிகள் இந்திய அரசை அணுகி அனுமதி பெற்று அவர்கள் போகட்டும் என எகத்தாளம் செய்தார்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற முறையில் ராஜபக்ஷ, தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அழைப்பு அனுப்பவில்லை. இலங்கை அரசின் அதிபர் என்ற முறையில் தமிழக முதலமைச்சருக்கு அவர் அழைப்பு அனுப்பினார். இது தனிப்பட்ட அழைப்பு அல்ல. அரசின் அதிகாரபூர்வமான அழைப்பாகும்.

முதலமைச்சர் என்ற முறையில் தனக்கு அனுப்பப்பட்ட அழைப்புக் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி முதலமைச்சர் கலந்து ஆலோசித்து அனைத்துக்கட்சிக் குழுவை அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அதற்கு ஆழமான உள்நோக்கம் உள்ளது.

இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ இந்த முகாம்களைப் பார்வையிட இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

சர்வதேசப் பத்திரிகையாளர்களோ அல்லது உள்நாட்டுப் பத்திரிகையாளர்களோ கூட அனுமதிக்கப்படவில்லை. தனது நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களையோ பத்திரிகையாளர்களையோகூட முகாம்களைப் பார்வையிட அனுமதிக்காத ராஜபக்ஷ, கருணாநிதிக்கு மட்டும் அழைப்பு அனுப்பி அவர் அனுப்பிய தூதுக்குழுவை ராசோபச்சாரத்துடன் வரவேற்று விருந்தளித்து, பரிசுகள் தந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட முகாம்களைப் பார்வையிட அனுமதித்ததன் நோக்கம் என்ன?

முகாம்களில் உள்ள மக்களை உடனே விடுவிக்காவிட்டால், இலங்கைக்கு அளிக்கப்படும் பொருளாதார உதவிகள் நிறுத்தப்படும் என பிரிட்டன் உட்பட பல நாடுகள் எச்சரித்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் அந்நாடுகளிடம் காட்டுவதற்கு ராஜபக்ஷவுக்கு ஒரு நற்சான்றிதழ் தேவை. அதை வழங்குவதற்கு அவர் தேர்ந்தெடுத்த நபர்தான் கருணாநிதி ஆவார்.

ராஜபக்ஷ விரும்பியதும் எதிர்பார்த்ததும் நடந்தது. காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிங்கள அரசு அழைத்துச் சென்ற இடங்களுக்கு மட்டுமே சென்றார்கள். அவர்கள் காட்டியவற்றை மட்டுமே கண்டார்கள். தாங்கள் விரும்பிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட வேண்டும் என ஒரு போதும் கேட்கவில்லை.

இக்குழுவினர் சென்ற இடமெல்லாம், மக்கள் அவர்களிடம் எவ்வாறு தங்களுடைய குமுறல்களையெல்லாம் கொட்டியழுதார்கள் என்பது குறித்து இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி, உதயன் ஆகிய நாளேடுகள் பக்கம் பக்கமாகச் செய்திகளை வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளன. மலையகப் பகுதிக்கு இந்தக் குழுவினரின் வருகை ஏமாற்றத்தையே அளித்தது என மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையகத் தமிழர்களின் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் குழுவில் சென்ற காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் அளித்த நேர்காணலில் "சர்வதேச நியமங்களுக்கு உட்பட்டே இலங்கையில் அகதி முகாம்கள் அமைக் கப்பட்டுள்ளன. அங்கு மக்களின் பாதுகாப்புக்காகவே முள் கம்பிகள் போடப்பட்டுள்ளன'' என்று கூறியிருக்கிறார்.

இன்னொரு காங்கிரஸ் உறுப்பினரான ஜே.எம்.ஆரூண் இலங்கை செய்தியாளர்களிடம் பேசும்போது, "இந்திய ஊடகங்களில் தெரிவிப்பதைப் போன்று இடம்பெயர்ந்த மக்கள் அவலங்களை எதிர்நோக்கவில்லை' என்றும் கூறியிருக்கிறார்.

இந்தக் குழுவினர் இலங்கை அதிபர் ராஜபக்ஷ அவருடைய சகோதரர்கள் பஸில் ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைச் சந்தித்து அளவளாவியுள்ளனர்.

ராஜபக்ஷவுக்கு பொன்னாடை போர்த்தியும் பரிசுகள் வழங்கியும் தங்களின் பக்தியை வெளிப்படுத்தியுள்ளனர். அவரும் இவர்களின் விசுவாசத்தை மெச்சி, பரிசுகள் கொடுத்து மகிழ்வித்திருக்கிறார். லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களின் ரத்தக் கறைபடிந்துள்ள ராஜபக்ஷவின் கரங்களை தமிழர்களே குலுக்கி மகிழ்ந்த அவலம் வரலாறு காணாததாகும்.

இக்குழுவினரை இலங்கைக்கு அனுப்புவதற்கு 20 நாட்களுக்கு முன்னதாகவே 22-9-2009இல் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் கருணாநிதி, பின்வருமாறு அறிவித்தமையை இப்பொழுது நினைவுகூர விரும்புகிறேன்:

"இலங்கையில் தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து வெளிவரும் தகவல்கள் நமக்குத் திருப்தியை அளிக்கின்றன. தமிழக அரசும், இந்திய அரசும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக இலங்கை அரசின் மூத்த அதிகாரிகளும், அமைச்சர்களும் அவசரமாகக் கூடி தமிழர்களின் மறுவாழ்வு தொடர்பான நடவடிக்கைகள் எந்த நிலையில் இருக்கின்றன என ஆய்வு செய்துள்ளனர் என நாளேடுகளில் செய்திகள் வெளிவந்துள்ளன. இவையெல்லாம் திருப்தியளிக்கின்றன'' எனக் கூறியுள்ளார்.

20 நாட்களுக்கு முன்னால், முதலமைச்சர் இவ்வாறு அறிவித்த பிறகு இலங்கைக்கு இவரால் அனுப்பப்பட்ட தூதுக்குழுவினர் இந்த அறிவிப்புக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட அறிக்கையை முதலமைச்சரிடம் அளித்திருக்கிறார்கள்.

இக்குழுவினர் சென்னை திரும்பியதும் முதலமைச்சர் கருணாநிதி மூலம் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்:

"முள்வேலி முகாம்களில் இருக்கிற மக்களின் துன்பங்கள் குறித்து அதிபர் ராஜபக்ஷவை நாங்கள் சந்தித்தபோது, அவரிடம் தொகுத்துக் கூறியுள்ளோம். இதனை மனிதாபிமான உணர்வோடு அணுகி, ஆவன செய்வதாக அவர் எங்களுக்கு வாக் களித்திருக்கிறார். முகாம்களில் உள்ள தமிழர் களை மீள்குடியமர்த்தும் கோரிக்கையை முன்வைத் தோம். மொத்தத்தில் முகாம்களில் உள்ள தமிழர் களை இலங்கை அரசு மீண்டும் அவரவர் ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் நம்பிக்கையை இன்னும் இரண்டு வாரகாலத்தில் இலங்கை அரசு ஏற்படுத்தும் என்று தோன்றுகிறது.''

இந்த அறிக்கையை வெளியிட்ட முதலமைச்சர் கருணாநிதி, செய்தியாளர்களிடம் அறிவித்ததில் முக்கியமானவை பின்வருமாறு:

1. 15-10-2009 முதல் 15 நாள்களில் 58 ஆயிரம் மக்கள், முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்படுவார்கள்.

2. அநாதைக் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் தொண்டு நிறுவனங்களின் பராமரிப்பில் ஒப்படைக்கப்படுவார்கள்.

3. இந்திய அரசு மேலும் உதவினால் நிலக் கண்ணிவெடிகள் விரைவில் அகற்றப்படும்.

4. முகாம்களில் உள்ள தமிழ் இளைஞர்கள் யாரும் கடத்தப்படுவதில்லை. கொலைசெய்யப்படுவதும் இல்லை.

5. தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து, இலங்கை அரசுக்கு விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தத் துன்பநிலை தொடராமல் பார்த்துக்கொள்ள இலங்கை அரசு ஒப்புக்கொண்டு அதற்கான ஒத்துழைப்பு இந்தியாவிலிருந்தும் கிடைக்கவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பட்டியலிடாத ஒரு சாதனையை குழுவின் தலைவர் டி.ஆர்.பாலு கூறியிருக்கிறார். அவர் செய்தியாளர்களிடம் கூறியபோது, "இலங்கையும் - தமிழகமும் தொழில் கண்காட்சி நடத்தி இருநாடுகளிடையேயும் தொழில் வணிகம் பெருகவும், தமிழகம் இலங்கையில் முதலீடு செய்யவும் வழிவகை இதன்மூலம் ஏற்படும் என்று கூறி புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்.

இலங்கையில் நடைபெற்ற போரில் சிங்களப் படையினர் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டது உறுதியாகியிருப்பதைத் தொடர்ந்து, அந்நாட்டின் மீது வணிகத் தடைவிதிக்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது. ஆனால் இலங்கையோடு தொழில் வணிகத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளை முதலமைச்சரின் குழு ஆராய்ந்து கூறியுள்ள வெட்கக்கேடு நிகழ்ந்துள்ளது.

தான் அனுப்பிய தூதுக்குழுவினர் ராஜபக்ஷ விடமிருந்து பெற்ற வாக்குறுதிகளை பட்டியலிட்டிருக்கிறார் முதலமைச்சர். ஆனால், அவருடைய அறிவிப்பை மாபெரும் சாதனையாகச் சித்திரித்து, சுவரொட்டிகள் அச்சடித்து தி.மு.க.வினர் சென்னையெங்கும் ஒட்டியுள்ளனர். சுவரொட்டியில் உள்ள பசை உலர்வதற்கு முன்னாலேயே முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அனுப்பப்பட்ட 2 ஆயிரத்து 500 தமிழர்கள் நடுவழியில் மறிக்கப்பட்டு மற்றொரு முகாமில் அடைக்கப்பட்டுவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளன.

செப்டம்பர் 15 ஆம் திகதியன்று வவுனியா முகாம்களிலிருந்து 2 ஆயிரம் தமிழ் அகதிகள் அனுப்பிவைக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் இப்போது வேறு எங்கோ சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

செப்டம்பர் 11 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் முகாமில் இருந்து 568 தமிழ் அகதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாமல் கைதடி என்ற இடத்தில் மீண்டும் சிறைவைக்கப்பட்டுள்ளனர். அம்பாறை, திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்ட ஆயிரத்து 706 அகதிகளும் அவரவர் வீடுகளுக்குப் போய்ச் சேராமல் வழியில் எங்கேயோ தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த விவரங்களை மனிதநேய நடவடிக்கைகளுக்கான ஐ.நா.சபையின் ஒருங்கிணைப்பு அலுவலகம் கூறியுள்ளது.

தமிழக மீனவர்களின் துன்பநிலை தொடராமல் பார்த்துக்கொள்ள இலங்கை அரசு ஒப்புக்கொண்டுள்ளது என முதல்வர் கூறிய இரு நாட்களிலேயே அதாவது ஒக்டோபர் 18 ஆம் திகதியன்று ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்தெறிந்து படகுகளையும் சேதப்படுத்தி விரட்டியடித்த செய்தி வெளியாகியுள்ளது.

இலங்கை சென்ற தூதுக்குழு தனி முகாமில் அடைக்கப்பட்டுள்ள 12 ஆயரத்து 500 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம்பெண்கள் குறித்து எதுவும் விசாரித்தறியவில்லை என்பது அதிர்ச்சி தருகிறது. புலிகள் எனக் குற்றஞ்சாட்டி இவர்கள் பிரித்தெடுக்கப்பட்டு தனி முகாமில் அடைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் எத்தனை பேர் உயிருடன் இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. ஐ.நா.வுக்கான இலங்கைத் தூதுவர் பலித கோஹண, ஒக்டோபர் 15 ஆம் திகதி பின்வருமாறு கொழும்பில் அறிவித்தார்:

தனி முகாம்களில் உள்ள 12 ஆயிரத்து 500 பேர் புலிகளாவர். மேலும் மற்ற முகாம்களில் 10 ஆயிரம் புலிகள் இருக்கக்கூடும். இவர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு அழிப்பதே எங்கள் நோக்கம் என்று வெளிப்படையாகக் கூறியிருக்கிறார்.

பிரிட்டனின் வெளியுறவுத்துறை அமைச்சரான டேவிட் மிலிபண்ட் பின்வருமாறு கூறியுள்ளார்:

"இலங்கைப்போரில் பாதிக்கப்பட்டு முகாம்களில் வாழும் 12 ஆயரத்து 500 பேரை விடுதலைப் புலிகள் என்று கூறி, தனி முகாம்களில் சிங்கள அரசு அடைத்து வைத்துள்ளது. ராணுவம் ஆய்வு நடத்திய முறை வெளிப்படையாக இல்லை என்பதால் இவர்கள் உண்மையிலேயே விடுதலைப் புலிகளா என்ற ஐயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களைச் சந்திக்க ஐ.நா. அமைப்புக்கோ அல்லது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கோ இன்று வரை அனுமதியளிக்கப்படவில்லை என்பதும் கவலையளிக்கிறது'' என்று கூறியுள்ளார்.

உலக நாடுகளிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ள இந்த முகாமை தமிழகத் தூதுக்குழு எட்டிப்பார்க்கவில்லை என்பது மட்டுமல்ல. அதுபற்றிய உண்மையைக் கூட விசாரித்தறிய முற்படவில்லை. எங்கேயோ பிரிட்டனில் இருக்கக்கூடிய வெளியுறவுத்துறை அமைச்சர், இந்த இளைஞர்கள் குறித்துக் கவலைப்படுகிறார். ஆனால், இலங்கைக்கு சென்ற தூதுக்குழுவினர் இதைப் பற்றிக் கொஞ்சமும் கவலையோ பொறுப்புணர்வோ இல்லாமல் நடந்துகொண்டுள்ளனர்.

முகாம்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தும் அங்கவீனமாகியும் உள்ளனர். இயலாத முதியவர்களும், குழந்தைகளும் உள்ளனர். இவர்களுக்கு மருத்துவ வசதிகள் போதுமான அளவுக்கு அளிக்கப்படுகிறதா என்பது குறித்து இக்குழுவினர் விசாரித்து அறிந்ததாகத் தெரியவில்லை.

குடும்பங்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு முகாம்களில் பிரித்து அடைக்கப்பட்டுள்ளவர்களை ஒன்றாக வைக்கவேண்டும் என இக்குழுவினர் வலியுறுத்தியதாகவும் தெரியவில்லை.

கடற்கரை மாவட்டங்களில் வாழும் மக்கள் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி அந்த மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கவேண்டும் என இக்குழுவினர் கேட்டனர் எனவும் தெரியவில்லை.

முகாம்களில் உள்ளவர்களின் முழுமையான பட்டியல் இருக்கிறதா என்று கேட்டு அதைப் பார்வையிட்டு சிலரையாவது அழைத்துப் பேசி உண்மை அறிந்தார்களா என்பதற்கும் சான்று இல்லை. போரின் கடைசிக் கட்டத்தில் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் விவரப் பட்டியலை குழுவினர் கேட்டதாகவும் தெரியவில்லை.

இந்தியா உட்பட உலக நாடுகள் அளித்த உதவி முறையாக செலவிடப்பட்டதா என்பது குறித்து விசாரித்து அறியவோ அல்லது அதைக் கண்காணிக்க சர்வதேசக் குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தவோ இக்குழுவினர் எந்த முயற்சியும் செய்தார்களா எனத் தெரியவில்லை.

தமிழகக் குழுவின் பயணம் ராஜபக்ஷவுக்குச் சாதகமான அறிக்கை அளிப்பதற்காகவே சென்றுள்ளது என்ற சந்தேகம் வலுப்படுகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே தனக்கு நற்சான்றிதழ் அளித்துவிட்டார்கள் என அவரைக் குறை சொல்லும் நாடுகளுக்கும், ஐ.நா. அமைப்புக்கும் கூற இந்த அறிக்கை ராஜபக்ஷவால் பயன்படுத்தப்படுமே தவிர முகாம்களில் உள்ள மக்களின் துயரைப் போக்குவதற்கு எள்முனை அளவு கூட உதவாது. போரின் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் சிக்கிக் கொண்ட லட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்ற இந்திய அரசு தவறிவிட்டது. இங்கிருந்து கப்பல்களை அனுப்பி அந்த மக்களைப் பத்திரமாக இந்தியாவுக்குக் கொண்டுவந்திருக்கலாம்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் கொழும்பு நகரில் தமிழர்களுக்கு எதிரான இனவெறிப் படுகொலை தாண்டவமாடியபோது, இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இரண்டு கப்பல்களை அனுப்பி கொழும்பு நகரில் சிக்கிக்கொண்ட தமிழர்களை மீட்டெடுத்து யாழ்ப்பாணத்தில் கொண்டு சேர்க்க உதவினார். ஆனால், மன்மோகன் சிங் அரசு அந்த மனிதநேய கடமையைக் கூட செய்யத் தவறிவிட்டது. [16ஆம் பக்கம் பார்க்க]

- பழ. நெடுமாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் பொலிஸாரும் இணைந்து அண்மையில் சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு முன்பாக வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான செய்முறைப் பயிற்சிகளை நடத்தினர். பொலிஸார் வீதிப் போக்குவரத்து தொடர்பாக அறிவுறுத்துவதையும் வீதிப் போக்குவரத்து தொடர்பாக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: தென்னவன்)*

## முதுகலைமாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,நவ.5

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்டுவரும் முதுகலைமாணி கற்கை நெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டை, நேர்சூசி ஆகியவற்றை நாளை வெ ாவ்ிக்கிழமையில் இருந்து பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(204)

## நலன்புரி நிலையங்களிலிருந்து மீள்குடியேறியவர்களில் வீடற்றவர்களுக்கு விரைவில் வீடமைக்கும் பணி

வடமராட்சி,நவ.5

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து யாழ்.மாவட்டத்தில் மீளக் குடியேறியோர்களில் வீடற்றவர்களுக்கு அரை நிரந்தர வீடுகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளது.

இத்திட்டத்திற்கமைய வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியோர்களில் சுமார் 400 குடும்பங்களுக்கு வீடுகள் இல்லையென அடையாளம் காணப்பட்டுள்ளது.

இப்பிரிவில் கிராம சேவையாளர் பிரிவு தோறும் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின்படி சுமார் 400 குடும்பங்களுக்கு வீடுகள் எதுவும் இல்லையென கண்டு பிடிக்கப்பட்டது.

12 x 16 சதுர அடி நீள அகலத்தைக் கொண்டதாக இத்தற்காலிக வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்தோருக்கான தற்காலிக நிரந்தர அரை வீடுகளை அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் மந்திகையில் உள்ள அரச உணவு விடுதியில் சேகரித்து சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வீடுகள் அமைக்கும்பணி விரைவில் ஆரம்பமாகும் என வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203-236)

## கரவெட்டி, பருத்தித்துறை பிரதேசங்களில் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், நவ.5

நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் காலம் கடந்த பதிவுகளை மேற்கொள்வதற்கு நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள இந்த நடமாடும் பதிவுச் சேவையில் பதிவாளர் நாயகம் பி.குணசேகர உள்ளிட்ட குழுவினரும், நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள், தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சமூகசேவைகள் அமைச்சினால் வழங்கப்படுகின்ற முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல், மனித உரிமை மீறல் தொடர்பான ஆலோசனைகள் இந்த நடமாடும் சேவையில் இடம்பெறவுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவிப் பதிவாளர் ப.பிரபாகர் தெரிவித்தார். (203-9-236)

## நலன்புரி நிலையங்களிலிருந்து வந்த ஆசிரியர்கள் தற்காலிக இணைப்புக் கோரி விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,நவ.5

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 300 ஆசிரியர்கள் தற்காலிக நியமனத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.

இத்தகவலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்கள் தற்போது கட்டம் கட்டமாக மீள் குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு குடியமர்த்தப்படுகின்றவர்களில் 300 ஆசிரியர்கள் இதுவரைக்கும் தற்காலிக இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

அவ்வாறு தற்காலிக இணைப்புக் கோருகின்ற ஆசிரியர்களுக்கு தற்காலிக இணைப்புகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆசிரியர்கள் வசிக்கின்ற கிராமத்தின் அயல் பாடசாலைகளிலே இந்த நியமனம் வழங்கப்பட்டு வருகின்றது - என்றார் அவர். (9)

## எது மாறாதிருக்கிறதோ அதுவே சத்யம்

*இறைவனே சத்யம்! அந்த சத்யமே படைப்புக்குப் பொறுப்பேற்கிறது. அவ்வாறு சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டியனைத்தும் மீண்டும் சத்தியத்திலே ஐக்கியமாகிறது. எந்த விதக் கலப்புமற்ற, தூய சத்யம் என்றும் நிரந்தரமாகவே இருந்து வந்திருக்கின்றது, தொடர்ந்தும் இருந்து வருகிறது. எல்லாவளமும், செல்வமும், சௌக்கியங்களும் எல்லாமே சத்தியத்திலிருந்தேதான் உருவாகி வருகின்றன. அவற்றை நாம் அனுபவித்து மகிழ்கின்றோம். அந்த சத்தியம் தெய்வீகமானது. ஆனால் மனிதன் இதனை உணருவதில்லை. மாயையில் ஆழ்த்தும் உலகியல் பொருள்களையே விரும்பி, அவற்றைப் பின் தொடருகிறான்.*



*நீங்கள் நினைப்பதெல்லாம், சத்யம் என்பது, நீங்கள் காண்பதும், கேட்பதும், நினைப்பதும் என்பவற்றைத்தான். அவற்றை உண்மையாக அப்படியே வெளிப்படுத்தினால் சத்தியம் என்கிற வரையறைக்குட்படுவதாக நீங்கள் கருதுகிறீர்கள். இதெல்லாம் தற்காலிக சத்யம். முக்காலத்திலும் (கடந்த, நிகழ், எதிர்காலங்கவில்) எது மாறாதிருக்கிறதோ அதுதான் நிரந்தர சத்யம். அதுதான் என்றும் மாறாத சத்யம்.*

சாயி சிந்தனை



உலக கைகழுவுதல் தினம் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடை பெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புலோலி பொது சுகாதாரப் பரிசோதகர் பி.பாலதேவா மங்கள விளக்கேற்றுவதையும் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் உரையாற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கைகழுவுதல் தொடர்பாக மாணவன் ஒருவன் விளக்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:கா...)

## வாசகர் திருமுகம்

### அனைவரும் கூட்டாக செயல்பட்டு இடம்பெயர்ந்த மாணவர்களின் இடர்களைத் தீர்ப்போம்

கல்வி இடைவிலகல் அதிகரிப்பு இடப்பெயர்வுடன் காணப்படுவதும் அதனால் சமூகப் பாதிப்பு ஏற்படுவதும் அனுபவரீதியாக வெளிப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு, 1990ஆம் ஆண்டு, 1995ஆம் ஆண்டு, 1997ஆம் ஆண்டு, 2000ஆம் ஆண்டு யுத்தச் சம்பவங்கள் இதற்குச் சான்றாக உள்ளன.

அதேபோல் தற்போது வன்னியில் இடம்பெயர்ந்து உள்ள மக்களில் சுமார் 30ஆயிரம் பேர் வரை மாணவர்கள். இவர்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழல் இன்னும் இரண்டு வருடங்களில் ஏற்படுமோ என்பது ஐயம். இக் காலப்பகுதியில் இவர்கள் கல்வியைக் கைவிடும் நிகழ்வுகள் அதிகரிக்கக்கூடும். மேலும் தற்போது இடம்பெயர்ந்து யாழ். வந்துள்ள மக்களும் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்ப்பதற்குப் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

உண்மையில் ஆசிரியர்கள் ஏணி போன்றவர்கள். அவர்களே கல்வி அறிவை மாணவர்களுக்கு புகட்டி அவர்களை சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்பவர்கள். அவர்களது சேவையே சமூகத்தின் அசைவியக்கம் எனலாம். அத்தகைய ஆசிரியர்கள் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு இரட்டை ஏணியாகச் செயற்பட வேண்டிய சூழல் தற்போது ஏற்பட்டு உள்ளது.

அதாவது இடம்பெயர்ந்த மாணவர்கள் சமூகத்தின் பாதாளத்தில் உள்ளனர். அவர்களை அதில் இருந்து வெளிக்கொண்டு வந்து சமூகத்தின் உயர்நிலைக்கு உயர்த்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு உள்ளது. கல்வியே எமது கலங்கரை விளக்கு என்பதை நடைமுறையில் ஒளிர வைக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது.

#### காலக் கடமை

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சமூக ஆரோக்கியத்திற்கான கல்விக்கு, கல்விக்கான சமூக ஆரோக்கியம் எமது சூழலில் உருவாக்கப்படல் வேண்டும். குறைந்தது ஒரு வருடத்திற்காவது இம் மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். இதனை வேலைப்பளுவாகக் கருதாது காலக்கடமையாகவே கருதவேண்டும். ஒவ்வொரு மனிதனதும் உடலும் உள்ளமும் குடும்பத்திற்கும் தமது சுயத்திற்கும் உதவுவதாக இருந்தாலும் ஆத்மா சமூகத்திற்கும் இறைவனுக்கும் சேவை செய்வதாக அமைய வேண்டும். ஆத்மாஉடலில் நான்கு நிலைகளில் தொழிற்படுகின்றது. முதலாவது இடுப்பு மட்டத்தில் இத்தகைய நிலையில் ஆத்மா உள்ளவர்கள் தமது இச்சைகளை எவ்வித பாவபுண்ணியம் பாராது நிறைவேற்றுவார்கள். அடுத்து *இதய மட்டத்தில் ஆத்மா உடையவர்கள்*. இவர்கள் தமது செயல்களை இலாப நட்டம் பார்த்துச் செயற்படுவார்கள். அடுத்து கழுத்து மட்டத்தில் ஆத்மா செயற்படுவார்கள். இவர்கள் நீதியாகச் செயற்படுவார்கள். அடுத்து மூளையில் ஆத்மா செயற்படுபவர்கள். இவர்கள் தவறு செய்யமாட்டார்கள். இறைவன் ஆசியுடனேயே செயல்களைச் செய்பவர்கள்.

ஒருவரில் ஆத்மா செயற்படும் தன்மை அவர்களது முற்பிறப்பு வினையே. ஆனால் சமூகத்தினை இயக்கும் பெரியவர்களில் ஆத்மா தொழிற்படும் தன்மை அச் சமூகத்தினை முழுதாகவே பாதிக்கின்றது. அந்த வகையில் தற்போது பாடசாலை அதிபர்களும் எமது சமூகத்திற்குப் பிரயோசனமானவர்களாகச் சிறப்பாகச் செயற்படல் வேண்டும்.

உதாரணமாக மறைந்த யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு.பி.எஸ்.குமாரசாமி அதிபராகவும் தெய்வமாகவுமே செயற்பட்டார். அவரின் சேவை அவரது மாணாக்கர்களால் என்றென்றும் நினைவு கொள்ளத்தக்கது. அவ்வாறே ஏனைய ஆசிரியர்களும் அதிபர்களும் எமது மாணவர்களுக்குச் சேவை செய்தல் வேண்டும். இதன் மூலம் காலத்தால் அழியாத புகழுடன் மாணவர் மத்தியில் வாழலாம்.

இடம்பெயர் மாணவர்களுக்கு கல்வியூட்டலில் பல வசதி இன்மைகள் பாடசாலைகளில் காணப்படலாம். உதாரணமாக:- தளபாட வசதி, இடவசதி, விடுதி வசதி, கணனி வசதி, ஆசிரியர் வசதி போன்றன. இவற்றினை நாம் பாடசாலைக் குழுக்கள் மூலம் நிவர்த்தி செய்யலாம். ஆலயங்கள், பொது நிறுவனங்கள், இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பான IOM, சிறுவர்களுக்கான அமைப்பான UNICEF, SCF என்பவற்றின் ஆலோசனையையும் பெறலாம்.

இடம்பெயர்ந்த மாணவர்கள் முறிந்த மரக்கொப்புகளுக்கு ஒப்பானவர்கள். அவற்றினை சீர்படுத்தித் தழைக்க விட வேண்டியது எமது சமூகப்பொறுப்பு. இக் கைங்கரியத்திற்கு நாம் எல்லோரும் கூட்டாகச் செயற்பட்டால் எமது சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாரிய எதிர்காலப் பாதிப்புக்களைக் குறைக்கலாம். மேலும் துன்பத்தில் வாடியுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு புத்துணர்வினைக் கொடுக்கலாம்.

வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைக்கு ஆள்கள் தேவை**

மாபிள் பெட்டிகள் ஏற்றி இறக்கக் கூடிய வேலைக்கு ஆள்கள் தேவை. நேரில் வரவும்.
07.11.2009 காலை 8.30 மணிக்கு.
**ஸ்ரீமாலி,** 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

1136 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மகரம் 13 16 18 32

03-11-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 2,906,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 202,788 | 20/- | 4,055,760/- |
| 2 இலக்கங்கள் | 18,620 | 40/- | 744,800/- |
| 1 இல. + லக்கினம் | 18,432 | 60/- | 1,105,920/- |
| 2 இல. + லக்கினம் | 1,657 | 200/- | 331,400/- |
| 3 இலக்கங்கள் | 503 | 1000/- | 503,000/- |
| 3 இல. + லக்கினம் | 47 | 10,000/- | 470,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,906,550/- | - |
| மொத்தம் | | | 7,610,880/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 242,054 | | 8,110,880/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,811,950/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : எஸ்.ஏ.அமரதாச ஹொப்புத்தளை

கைத்தொலைபேசி வெற்றியாளர்: டீ.ஜீ.ஜயந்த பிரதீப் பண்டாரவளை

2009 நொவெம்பர் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 400661596-9-11 |
| நுவரெலியா | 400655386-8-29 |
| மாத்தளை | 400659024-3-21 |
| திருகோணமலை | 400657244-8-15 |
| மாத்தறை | 400659998-3-12 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

# செயலமர்வு

வடமராட்சி, நவ.05

வடமராட்சி கல்வி வலயத்தினால் தரம் - 12 மாணவர்களுக்கு வணிகக்கல்வி புதிய பாடத்திட்டத்தை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத்திலும் தரம் 12, 13 இல் கற்பிக்கும் தமிழ் புள்ளித்திட்ட பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (04-236)

# கல்விக் கண்காட்சி

வடமராட்சி, நவ.05

பருத்தித்துறை, தம்பசிட்டி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்தக் கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் கா.இராமஜெயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வலயக் கணக்காளர் எஸ்.கிரிதரன் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகு நாதன் சிறப்பு விருந் தினராகவும்கலந்துகொள்வர். (203-236)


# F.Jeewajee & Bros

**No.50, New Moor Street, Colombo-12**

அச்சகத் தேவைகளுக்கான சகல விதமான பேப்பர் மற்றும் போர்ட் வகைகள் ரொக்கமாகவும் சில்லறையாகவும் தரமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

- Art Board
- Box Board
- Chip Board
- Bristol Board
- Liner Board
- File Cover etc...
- A4 Papers

- Demy Paper
- Poster Paper
- Art Paper
- Bank Paper
- Ronio Paper
- Brown Paper
- Oil Paper
- NCR Paper
- Ledger Paper
- Wrapping Paper

தொடர்புகளுக்கு:
S.E.Mariathas, 'Globe'
0112638391/ 0777624316



# STUDY IN UK

Colombo நகரில் UK VISA க்களை பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருக்கும் எமது நிறுவனம் யாழ் மாணவர்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க யாழ் நகரில் கிளைக் காரியாலயம் ஒன்றை ஆரம்பித்துள்ளது

- UK பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்கு உடனடியாக அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்
- UK VISA சம்பந்தமான இலவச ஆலோசனைகள்
- Sponsor வசதிகள் செய்து கொடுக்கப்படும்
- நான்கு வாரத்தில் London பயணமாக அரிய வாய்ப்பு

நீங்கள் ஏன் எமது நிறுவனத்தை தெரிவுசெய்யவேண்டும்

- ஆகக் கூடுதலான விசாக்களைப்பெற்றுக்கொடுத்து சாதனை படைத்துக்கொண்டிருப்பதால்
- UK யில் உள்ள பிரபல சட்டத்தரணிகளால் உங்கள் Visa Document தயாரிக்கப்படுகின்றன.
- Free IELTS Classes
- UK இல் பகுதிநேர வேலைவாய்ப்பு
- Admission within 12 hours
- Degree முடிவில் 2 வருட Work permit பெற்றுத்தரப்படும்.
- யாழ்.மாணவர்களுக்கு விசேட விசா ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படுகின்றன.

எமது நிறுவனம் ஊடாக UK VISA க்களை பெற்றுக் கொண்ட யாழ் மாணவர்கள் சிலர்.......



University of Portsmouth | University of Hertfordshire | University of Plymouth | The City College | College of Technology London

Jaffna Office:No.102 2/2, Navalar Road, Jaffna.
Web : www.expogroup.lk
T.P : 0117555511, 0714150995

EXPONET Overseas Consultants

Colombo Office : No.379,1/2 Galle Road, Colombo - 06
T.P : 0117555511,12,13,14
London Office : No.56, The Gardens, Harrow Middlesex Ha 1 4EY UK.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென் ஈரானில் நேற்றுப் பெரும் பூகம்பம்

# 700 பேர் காயம்; மின் துண்டிப்பு!

தெஹ்ரான், நவ. 05

தென் ஈரானின் கேந்திரத் துறைமுக நகரை நேற்று புதன்கிழமை காலை பாரிய பூகம்பம் தாக்கியது. இதில் 700 பேர் காயமடைந்தனர். மின்சாரத் தொடர்புகளும், தொலைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன என அரச ஊடகம் தெரிவித்தது.

100 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என அரச ஊடகமான இர்னா குறிப்பிட்டது.

உள்ளூர் நேரப்படி, புதன்கிழமை 'அதிகாலை 2.56 மணிக்கு இந்தப் பூகம்பம் பண்டார் அப்பாஸ் என்னுமிடத்தைத் தாக்கியது. இதன் தாக்கத்தால் கட்டடங்கள் குலுங்கின. குடியிருப்பாளர்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் குழுமியிருந்தார்கள் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பண்டார் அப்பாஸில் பாரிய எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிறுவனம் உள்ளது. உள்ளூர்ச் சந்தைக்குத் தேவையான எரிபொருளில் பெரும் பகுதியை இந்நிறுவனமே நிறைவு செய்கிறது. நேற்று உலுக்கிய பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.9 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என்றும் அதிகாரிகள் விவரித்தார்கள்.

பூகம்பம் தாக்கிய பகுதி, தலைநகரான தெஹ்ரானின் தெற்கே 850 மைல் (1,367 கிலோ மீற்றர்) தொலைவில் அமைந்துள்ளது. உயிரிழப்புகள் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என அரச வானொலிச் சேவை குறிப்பிட்டது.

ஈரானின் தலைநகராக தெஹ்ரான் இருந்து வருகிறது. எனினும், பூகம்ப அனர்த்த அபாயத்தால் தலைநகரை இடமாற்றம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ள இத்தருணத்தில் இந்தப் பூகம்பம் தென் பகுதியைப் பயங்கரமாக உலுக்கியுள்ளது.

2003 ஆம் ஆண்டு இதே பிராந்தியத்திலுள்ள தென் கிழக்கு நகரான பாமை பயங்கரமாகப் பூகம்பம் தாக்கியுள்ளது. இதன் தாக்கம் 6.6 புள்ளிகளாகப் பதிவாகியிருந்தது. அந்தப் பூகம்ப அனர்த்தத்தில் 26 ஆயிரம் பேர் வரை பலியாகியிருந்தனர்.

## நேபாளத்தில் நகரசபையை மாவோக்கள் கைப்பற்றினர்

காத்மண்டு, நவ. 05

நேபாளத்தில் தன்குடா என்ற நகரசபையை மாவோவாதிகள் கைப்பற்றியுள்ளார்கள். இதையடுத்து, நகரசபை விவகாரம் முழுவதையும் மாவோயிஸ்டுகள் கவனித்துக் கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நகரசபையைக் கைப்பற்றியுள்ள மாவோவாதிகள் கணேஷ் பிஸ்தாவை நகர பிதாவாகவும், கபிதாராயைத் துணை நகர பிதாவாகவும் நியமித்துள்ளார்கள்.

மாவோவாதிகள் நகரசபை நிர்வாகத்தை கைப்பற்றியிருப்பது இதுதான் முதல் தடவையாகும். இராணுவத் தளபதி ரூக்மாங்குட் கட்டாவாலை பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்ற தங்களின் முடிவை அமுல்படுத்தாதற்காக மாவோவாதிகள் எதிர்ப்புத் தெரிவித்து இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

# ஏமனில் அல்-குவைதா தாக்குதல்: 5 பாதுகாப்புப் படையினர் மரணம்

சனா, நவ. 05

வட ஏமனில் அல்-குவைதா தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். இவர்களில் மூவர் சிரேஷ்ட அதிகாரிகளாவர். கிழக்கு மாகாணமான ஹட் ராமட்டில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சவூதி அரேபியாவுடன் ஒட்டிய எல்லையிலுள்ள சோதனைச் சாவடியிலிருந்து வாகனமொன்றில் இவர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அச்சமயம் தீவிரவாதிகள் பதுங்கியிருந்து சரமாரியாக வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் எனப் பாதுகாப்புப் படைப்பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

''அல்-குவைதாவுடன் தொடர்புள்ள தீய சக்திகள் இத்தாக்குதலை நடத்தியுள்ளன. இந்தப் பிராந்தியத்தில் அல்-குவைதா இயக்கம் தீவிரமாக இயங்கி வருகிறது. அதேவேளை, ஏமனிலும், சவூதியிலும் செயற்படும் அல்-குவைதா கிளைகள் 2009 ஜனவரி முதல் விஸ்தரிக்கப்படும் என ஏற்கனவே அல்- குவைதாவும் தெரிவித்திருந்தது'' என உள்ளூர் அதிகாரியொருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் சிரேஷ்ட அதிகாரிகளான பிரிகேடியர் ஜெனரல் அலி சலீம் அல்அமெரியும், பாதுகாப்பு அதிகாரி அஹ்மத் பவாஹீரும் அடங்குவர். ஜெனரல் அலி சலீம், பிராந்தியப் பிரதம பாதுகாப்பு அதிகாரியாவார்'' என உள்ளூர் வட்டாரம் தெரிவித்துள்ளது.

2004 ஆம் ஆண்டு முதல் ஏமனின் வடக்கில் ஹூத்தி தீவிரவாதிகளுக்கு எதிராக ஏமன் அரச படைகள் போராடி வருகின்றன. எனினும், 2009 ஆம் வருட ஓகஸ்ட் முதல் இராணுவம் இத்தாக்குதலை முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. ஹூத்தி தீவிரவாதிகளும் அல்-குவைதா தீவிரவாதிகளும் இணைந்தே ஏமனில் அரசுக்கு எதிராகப் போராடி வருகிறார்கள் என்றும் இவ்வட்டாரம் விவரித்துள்ளது.

அதேவேளை, ஏமனின் தெற்கு தீவிரவாதிகளால் தலைநகரான சனாவும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இந்தத் தீவிரவாத அமைப்பும் அரசுக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. ஏமன் அரசு தங்கள் மீது தாக்குதலை மேற்கொள்ள சவூதி அரசே உதவி வருகிறது என ஹூத்தி தீவிரவாதிகள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

சமீபத்தில் ஹூத்தி தீவிரவாதிகளுக்கும் சவூதிப் பாதுகாப்புப் படைகளுக்குமிடையே எல்லைக்கருகில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது அதேவேளை, தேடப்பட்டுவரும் அநேக தீவிரவாதிகள் ஏமனில்தான் தலைமறைவாகியுள்ளார்கள் என சவூதி அரேபியா தெரிவித்து வருகின்றது.

## உலக அரங்கில்

# அமெ.தீவிரவாதிகள் கண்காணிப்பு பட்டியலில் 4 லட்சம் பெயர்கள்

வாஷிங்டன், நவ. 05

அமெரிக்காவின் தீவிரவாதிகள் கண்காணிப்புப் பட்டியலில் 4 இலட்சம் பெயர்கள் உள்ளன எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 12 மாதங்களில் தினந்தோறும் இந்தப் பட்டியலில் சராசரியாக ஆயிரத்து 600 பேரை அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏவும், எவ்.பி.ஐயும் சேர்த்துள்ளன என வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

''இவர்களை உளவுப் பிரிவினர் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். அதே நேரத்தில் உரிய விசாரணைக்குப் பின்னர் தினந்தோறும் சராசரியாக 600 பெயர்கள் வரை இந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டும் வருகின்றன'' என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''ஒரு கட்டத்தில் இந்தப் பட்டியலில் உள்ளவர்களின் எண்ணிக்கை 9 இலட்சத்தைக் கூட தாண்டியுள்ளது. இவர்களில் 5 இலட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டு இப்போது 4 இலட்சம் பெயர்கள் வரை உள்ளன'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இந்தப் பட்டியலில் அமெரிக்காவில் வசிப்பவர்களில் 5 சதவீதத்துக்கும் குறைவானவர்களே உள்ளனர். ஏனையோர் பிற நாடுகளில் வசிப்பவர்களாவர்'' என்றும் அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் ரயில் விபத்தில் 10 பேர் பலி; 15 பேர் காயம்

இஸ்லாமாபாத், நவ. 05

தென் பாகிஸ்தானில் அலமா இக்பால் கடுகதி ரயிலும், சரக்கு,ரயிலும் மோதிக்கொண்டதில் 10 பேர் உயிரிழந்தனர். 15 பேர் படுகாயமடைந்தனர். அலமா இக்பால் கடுகதியின் இரு பெட்டிகள் படுமோசமாகச் சேதமடைந்தன.

கராச்சி நகருக்கருகிலுள்ள ரயில்வே நிலையத்தில் சரக்கு ரயில் நின்றுகொண்டிருந்தது. அதே தண்டவாளத்தில் விரைந்துவந்த பயணிகள் ரயிலான அலாமா இக்பால், சரக்கு ரயிலின் பின்புறத்தில் பலமாக மோதி விபத்துக்குள்ளானது என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

அலாமா இக்பால் கடுகதியின் இரு பெட்டிகள் தடம்புரண்டு கவிழ்ந்துவிட்டன. இவற்றில் சிக்குண்ட பயணிகள் மீட்புக் குழுவினராலும், பொதுமக்களாலும் மீட்கப்பட்டார்கள். காயமடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

ரயில்வே சமிஞ்ஞையில் ஏற்பட்ட தவறினாலேயே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது. இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

2005 ஆம் வருட ஜூலையில் சிந்து மாகாணத்தில் மூன்று ரயில்கள் மோதுண்டு விபத்துக்குள்ளாயின. இவ்விபத்தில் 130 இற்கு மேற்பட்டோர் பலியாகினர். பாகிஸ்தானின் ரயில் விபத்துகளில் இது ஒரு மோசமான விபத்து எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜூன் துல்லா சுனி தீவிரவாதி ஈரானில் தூக்கிலிடப்பட்டார்

தெஹ்ரான், நவ. 05

ஈரானின் சிஸ்தான் - பலுசிஸ்தான் மாகாணத்தில் இடம்பெற்று வந்துள்ள அநேக தீவிரவாத தாக்குதல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட அப்டொல் ஹமீத் ரிஷி என்பவர் ஜாஹிதான் என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டார் என பார்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது. அப்டொல் ஹமீத் ரிஷி, ஜூன் துல்லா சுனி தீவிரவாத அமைப்பில் ஓர் உறுப்பினராவார்.

ஜஹிதானில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 6 புரட்சிகர பாதுகாப்புப் படைத்தளபதிகள் உட்பட 42 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 23 பேர் காயமடைந்துள்ளனர். பழங்குடியின மக்களின் தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றில் இக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது.

புரட்சிகர பாதுகாப்புப் படையின் தரைப்பிரிவு உப தளபதி ஜெனரல் நூர் அலி சூ சட்டாரி, இப்படையின் மாகாண பிரதம தளபதி ரஜாப் அலி மொஹம்மத் ஷடாஹ் ஆகியோரும் இக்குண்டுத்தாக்குதலில் மரணித்தவர்களில் அடங்குவர்.

இந்தத் தாக்குதல் உட்பட அநேக தாக்குதல்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட அப்டொல் ஹமீத் ரிஷி, ஜஹிதான் சிறைக்கூடத்தில் திங்கட்கிழமை தூக்கிலிடப்பட்டார் என பார்ஸ் செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்தது.

இவர் ஜூன் துல்லா தலைவர் அப்டொல் மாலிக் ரிஷியுடன் சேர்ந்து படுபாதகமான காரியங்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என மாகாண பொலிஸ் கொமாண்டர் கொலாம் அலி நெகுய் குறிப்பிட்டார்.

சிஸ்தான் - பலுசிஸ்தானில் பலுசிஸ் இன மக்களே அதிகளவில் வசிக்கிறார்கள். இவர்கள் சிறுபான்மையினரான சுனி முஸ்லிம்களாவர். ஈரானில் பெரும்பான்மையினரானஷியாக்களின் ஆட்சியே நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# விவாகரத்துகளைக் குறைக்க வாசனைத்திரவியப் பாவனை

## மலேஷியாவில் புதிய திட்டம்

கோலாம்பூர், நவ. 05

மலேஷிய தெரங்கான் மாநிலத்தில் அதிகரித்துவரும் விவாகரத்துகளைக் குறைப்பதற்கான நடவடிக்கையில் மாநில அரசு ஈடுபட்டுள்ளது. இதற்காக பாலியல் ஆசைகளைத் தூண்டக்கூடிய வாசனைத்திரவியங்களை அபரிமிதமாகத் தயாரிக்குமாறு இத் திரவியங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு அரசு அவசரக் கோரிக்கை விடுத்துள்ளது.

இம்மாநிலத்தில் விவாகரத்துக் கோரும் சம்பவங்கள் துரிதமாக அதிகரித்து வருகின்றன. கணவரின் உடலில் கசியும் வியர்வையின் துர்நெடியைத் தாங்கமுடியவில்லை என்றும், அழுக்குப் படிந்த பைஜாமாவோடு திரிகிறார் என்றும் உப்புச் சப்பில்லாத காரணங்களை விவாகரத்துக் கோரும் பெண்கள் முன்வைக்கிறார்கள்.

அதனால் திருமண வாழ்க்கை நீடிப்பதற்காக பல நடவடிக்கைகளை மாநில அரசு எடுத்துள்ளது. அவற்றிலோர் அம்சம்தான் வாசனைத்திரவியப் பாவனை அறிமுகத்திட்டம். அரசின் கோரிக்கையை அடுத்து, வாசனைத்திரவியத் தயாரிப்பு நிறுவனங்கள் உற்சாகமடைந்துள்ளன.

அதேவேளை, கணவனையும் மனைவியையும் ஒன்றாகச் சேர்ந்து குளிக்குமாறும் பொது வைபவங்களுக்கு இணைந்து செல்லுமாறும் தம்பதியினருக்கு அரசு வேண்டுகோள்களை விடுத்துள்ளது. இத்தகைய பரஸ்பர காரியங்களால் விவாகரத்துகளின் எண்ணிக்கை துரிதமாக வீழ்ச்சியடைந்துவிடும் என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.

# இமயமலையின் பாதுகாப்புக் குறித்து ஆராய அதன் அடிவாரத்தில் அமைச்சரவைக் கூட்டம்

காத்மண்டு, நவ. 05

இமயமலையின் பாதுகாப்புத் தொடர்பான நேபாள அமைச்சரவையின் ஆலோசனை கூட்டமொன்று அம்மலையின் அடிவாரத்தில் 5 ஆயிரத்து 360 மீற்றர் உயரத்தில் நடைபெறவுள்ளது. இமயமலையின் பனிச்சிகா[illegible]லிருந்து வரும் தண் ணீரை நம்பி 1[illegible]நாட்டு மக்கள் இருக்கிறார் கள்.

உலக[illegible]வெப்பமயமாவதன் காரணமாக இமயமலையின் பனிச்சிகரங்கள் உருகத் தொடங்[illegible]னால் பாரிய ஆபத்து ஏற்படும். இந்தச் சூழ்நிலையில் உலகம் வெப்பமயமாவது தொடர்பான ஆலோசனை மாநாடொன்று அடுத்த மாதம் கோபன்ஹெகன் நகரில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 'இமயமலையைக் காப்பாற்றுங்கள்' என்ற பெயரில் உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்கான நடவடிக்கையில் நேபாளம் ஈடுபட்டுள்ளது. அந்நடவடிக்கையில் ஓரம்சமாகவே நேபாள அரசு இமயமலை அடிவாரத்தில் இந்த ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்

## துணை முதல்வர் நேரில் உறுதி

சென்னை, நவ. 05

தமிழக முகாம்களிலுள்ள இலங்கை அகதிகள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். அதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் - என்று தமிழக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் கருணாநிதியின் உத்தரவின்படி, புழல் அகதிகள் முகாமிற்கு நேற்றுமுன்னம் மாலை சுமார் 4.45 மணிக்கு துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்று, அங்குள்ள அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

அகதிகள் தங்களுக்கு வீடுகள் கட்டித் தரவும், குடிதண்ணீர் வசதி செய்து தரவும், கழிப்பிட வசதி செய்து தரவும் கோரிக்கைகளை வைத்தனர். மேலும் குழந்தைகள் படிப்பதற்குத் தனியாகப் பாடசாலை அமைக்க வேண்டும், பிறப்புச் சான்றிதழ் இங்கேயே பெற வசதி செய்ய வேண்டும், முகாமிலேயே தனியாக ரேஷன் கடை அமைத்து ரேஷன் பொருள்களை வழங்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை அவரிடம் தெரிவித்தனர்.

முகாமில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தால் சொந்த நாட்டுக்குச் செல்லாமல் இங்கேயே நிரந்தரமாக வாழ்வோம் என்றும் துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் இலங்கை அகதிகள் தெரிவித்தனர். அவர்கள் கோரிய அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்று மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார்.

பின்னர் செய்தி யாளர்களிடம் பேசிய மு.க.ஸ்டாலின்,

தமிழகத்தில் 26 மாவட்டங்களில் 115 முகாம்களில் 73 ஆயிரத்து 401 அகதிகள் தங்கி உள்ளனர். அவர்களுக்கு அரசின் சார்பில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாதந்தோறும் பணக்கொடையும், உணவுப்பொருள்களும் வழங்கப்படுகின்றன. அகதிகளின் அடிப்படை வசதிகளுக்காக மத்திய அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு ரூபா 16 கோடியே 18 லட்சத்திற்கு மதிப்பீடு வழங்கப்பட்டு இருக்கிறது.

முகாமிலுள்ள மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். இவைகள் அனைத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.



தமிழகத்திலுள்ள முகாம்களுக்குச் சென்ற துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், அகதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்த போது...

## டில்லியருகே ரயில் விபத்துகள்; 12 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

டில்லியருகே தண்டவாளத்தைக் கடக்க முயன்ற 6 பேர் ரயில் மோதி பரிதாபமாக அந்த இடத்திலேயே நசுங்கிப் பலியானார்கள்.

டில்லி புறநகர் பகுதியான குர்கான் அருகேயுள்ள பட்டோடி நகரின் மத்தியிலுள்ள ரயில் தண்டவாளத்தை நேற்றுமுன்தினம் சிலர் கடக்க முயன்றனர். அப்போது தண்டவாளம் வழியாக டில்லி ஆஜ்மீர் சதாப்தி எக்ஸ்பிரஸ் ரயில் வேகமாக வந்து கொண்டிருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை. இதையடுத்து, தண்டவாளத்தைக் கடந்து கொண்டிருந்தவர்கள் மீது எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கரமாக மோதியது. இதில் 6 பேர் அந்த இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் இறந்தனர்.

அதேவேளை, அரியானா ஆஸ்பட்டி பல்லப்கார்க் ரயில் தடத்தில் தண்டவாளங்களைச் சரிபார்க்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். பணிகளை முடித்து, பல்லப்கார்க் ரயில் நிலையத்துக்கு ஊழியர்கள் 6 பேர், தண்டவாளத்திலேயே நடந்து வந்து கொண்டிருந்தனர். அப்போது, டில்லியிலிருந்து பல்வால் நோக்கி வந்த ரயில் ஊழியர்கள் 6 பேர் மீதும் மோதியது. 6 பேரும் அதே இடத்தில் உடல் நசுங்கி இறந்தனர்.

## 10 இலங்கை மீனவர் கைது

சென்னை, நவ. 05

இந்தியக் கடல் எல்லைப் பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 10 பேரை கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர்.

இந்தியக் கடல் பகுதியில் கடலோர காவல் படையின் கப்பலான கங்காதேவி மற்றும் விமானம் ஆகியவை கடந்த திங்களன்று ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தன. அதன்போது 2 படகுகளில் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்தமை தெரியவந்தது.

உடனே அங்கு விரைந்து சென்ற கடலோர காவல் படையினர் படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 10 பேரையும் கைதுசெய்தனர். அவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரும் நேற்றுமுன்தினம் மாலை சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் இலங்கையில் மாத்தறை, புத்தளம் மாவட் டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

# இந்தியச் செய்திகள்

## வெகு விரைவில் இலங்கை செல்லவுள்ளார் சரத்குமார்

சென்னை, நவ. 05

பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் என்ற முறையில் நானும் விரைவில் இலங்கை செல்ல இருக்கிறேன்.

-இவ்வாறு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும், நடிகருமான சரத்குமார தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடந்த அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டதத்தில் கலந்து கொண்ட அவர், செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக தமிழக அரசு 12 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. அமைச்சர்கள் முகாம்களை பார்வையிட்டு மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதேசமயம் இலங்கையில் முள்கம்பிகளுக்கு மத்தியில் அகதிகளாக அடைபட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காக தமிழக அரசு மத்திய அரசிடம் பேசி அவர்களின் துயர் துடைக்க நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை எம்.பிக்கள் குழு பார்த்து வந்துள்ளது. அந்தக் குழுவில் தமிழ் ஆர்வம் கொண்ட எம்.பிக்களும் சென்று வந்துள்ளனர்.

பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் என்ற முறையில் நானும் விரைவில் இலங்கை செல்ல இருக்கிறேன். அதற்காக அங்குள்ள எங்கள் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் இலங்கை அரசை அணுகியிருக்கிறார்கள் - என்றார்.

# இராமேஸ்வரம் மீனவர் தற்காப்புக்காக துப்பாக்கி வைத்திருக்க அனுமதிக்குக

## இந்தியக் கம்யூ. பாண்டியன் வலியுறுத்து

இராமநாதபுரம், நவ. 05

இலங்கை அரசைத் தட்டிக்கேட்க முடியாத அரசாக மத்திய அரசு உள்ளது. எனவே, இராமேஸ்வரம் மீனவர்கள், தற்காப்புக்காக துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறினார்.

இராமேஸ்வரம் மீனவர்கள், இலங்கைக் கடற்படையின் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் துப்பாக்கி வழங்கக்கோரி இராமநாதபுரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார், மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இதுவரை 400 இற்கும் அதிகமான மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கொலை செய்யப்பட்டுள்ளனர். 300 இற்கும் மேற்பட்டோர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இலங்கைக் கடற்படை தாக்குதலில் கை, கால் இழந்து உடல் ஊனமுற்று தொழில் செய்ய முடியாமல் ஆயிரக்கணக்கானோர் இதற்கு சாட்சிகளாக உள்ளனர்.

இந்திய மக்களைக் காக்க வேண்டிய தலையாய பொறுப்பு மத்திய அரசுக்கு உள்ளது. இலங்கை அரசைத் தட்டிக்கேட்க முடியாத அரசாக மத்திய அரசு உள்ளது.

சோமாலியக் கடற்கொள்ளையர்கள் இந்தியக் கப்பல்களைச் சிறைப்பிடித்தால் விரைந்து செல்லும் கப்பல் படை, 40 ஆண்டுகளில் தமிழக மீனவர்களுக்காக ஒருமுறை கூடச் செல்லவில்லை.

இலங்கைத் தமிழர்களைக் கொலை செய்ய ஆயுத உதவி வழங்கிய இந்திய அரசு தமிழக மீனவர்களையும் படுகொலை செய்ய ஊக்கம் அளிக்கிறதோ என எண்ணத்தோன்றுகிறது.



முப்படைகளையும் வைத்திருக்கும் இந்தியாவால் தமிழக மீனவரைக் காப்பாற்ற முடியவில்லை.

எனவே, தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படும் போது தற்காத்துக்கொள்ள மீனவர்களுக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி கோரி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மீனவர்கள் சட்டத்தை மீற விரும்ப வில்லை. சட்டத்திற்கு உட்பட்டு துப்பாக்கியைப் பயன்படுத்துவோம் என உறுதி கூறியுள்ளனர்.

துப்பாக்கியும் தரமாட்டோம், பாதுகாக்கவும் மாட்டோம் என்று மத்திய அரசு இருந்தால் மீனவர்கள் வேறுவிதமாகச் சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள் - என்றார்.

# ஈழ அகதிகளுக்கு மத்திய அரசின் உதவிகள் தொடர்ந்து கிடைக்கும்

## முதல்வர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, நவ. 05



தமிழகத்தில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான மத்திய அரசின் உதவிகள் தொடர்ந்து கிடைக்கும் - என்று முதல்வர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள முகாம்களின் நிலையை மேம்படுத்த ரூபா 16 கோடி மதிப்பிலான முன்மொழிவுகளை மத்திய அரசுக்குத் தமிழகம் அனுப்பியுள்ளது. இது தொடர்பாக, மத்திய அரசிடம் இருந்து இதுவரை எந்தப் பதிலும் வரவில்லை.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர்கள் வாழும் முகாம்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கின்ற குறைகளைக் கண்டறிந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ளத்தான், அரசின் சார்பில் 12 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், மத்திய அரசின் உதவிகளும் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது - என்றுள்ளது.

# திருப்பதி ஏழுமலையானுக்கு ரூ. 50,000 கோடிக்கு நகைகள்

## வைரம், மாணிக்கங்களை மதிப்பிடுவதில் நிபுணர்கள் திணறல்

சித்தூர், நவ. 05

திருப்பதி வெங்கடாஜலபதிக்கு 50 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான நகைகளும், 32 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள அசையாச் சொத்துக்களும் உள்ளன என்று ஐதராபாத் உயர்நீதிமன்றத்தில் திருப்பதி திருமலை தேவஸ்தானம் தாக்கல் செய்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தங்க டொலர்கள் காணாமல்போனமை தெரிய வந்தது. இதையடுத்து, நெல்லூர் மாவட்டத்தை சேர்ந்த கோவிந்த ரெட்டி என்பவர், ஏழுமலையான் கோயில் நகைகள் பாதுகாப்பற்ற முறையில் பராமரிக்கப்படுகிறது எனவும், நகைகளைப் பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்தியுள்ளதால் அதுகுறித்து முழு விவரங்களையும் தேவஸ்தானம் தெரிவிக்க உத்தரவிடக் கோரி ஐதராபாத் உயர் நீதிமன்றத்தில் பொது நலன் வழக்கு தொடர்ந்தார்.

இதையடுத்து குறித்த சொத்து விவரங்களைத் தாக்கல் செய்யுமாறு உயர் நீதிமன்ற ஆயம் உத்தரவிட்டது.

ஏழுமலையானுக்கு மன்னர்கள் காலம் முதல் தற்போதுவரை பக்தர்கள் வழங்கியுள்ள நகைக்கான விவரப் பட்டியலையும், அவற்றில் காணாமல் போனவை குறித்தும் தேவஸ்தானம் அறிக்கை தாக்கல் செய்தது.



இந்த நகைகளின் மதிப்பு மட்டும் சுமார் ரூபா 50 ஆயிரம் கோடி ரூபாவாகும்.

இதுதவிர, அரசர் காலத்தைச் சோந்த விலை மதிக்க முடியாத வைரம், வைடூரியங்கள், மாணிக்கம், மரகதம், கோமேதகம் போன்றவை ஏராளமாக உள்ளன. இவற்றை மதிப்பிடுவதில் நிபுணர்களே திணறுகின்றனர்.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் ரகுராம், ரமேஷ் ரங்கநாதன் ஆகியோர் அடங்கிய [illegible] ளன்று விசாரணைக்கு வந்தது.

# ஈழ அகதிகளுக்கு சமத்துவபுரம் போன்ற குடியிருப்புகள் தேவை என்கிறார் ராமதாஸ்

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு சமத்துவபுரங்கள் போன்ற புதிய குடியிருப்புகளை உருவாக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் மானியமும், உணவும் போதுமானதாக இல்லை. இதனால் அவர்கள் துன்பமான வாழ்வையே வாழ வேண்டியுள்ளது. இந்த அவலநிலையைப் போக்க அவர்களுக்கான மானியம் உயர்த்தப்பட வேண்டும். அவர்களின் சிவில், சமூக வாழ்வில் அனைத்துச் சுதந்திரங்களும் பேணப்பட [illegible] அவர்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்கு சிறப்பு நிதி உதவியுடன் தனி வாரியம் அமைக்க வேண்டும்.

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள திபெத் அகதிகள் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர். ஈரோடு மாவட்டம் தாளவாடியையொட்டிய கர்நாடக எல்லைப் பகுதியில் அவர்களுக்குத் தனிக்குடியிருப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அங்கே அவர்கள் சொந்த வீடுகளில் ஆரோக்கியமான சூழலில் வாழ்ந்து வருகின்றனர்.

அந்தக் குடியிருப்புகளோடு ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான முகாம்கள் கொடுமையானவை. இலங்கைத் தமிழர்களுக்கான அகதிமுகாம்களைப் பார்வையிடுவதைவிட, திபெத் அகதிகளுக்கான குடியிருப்புகளைப் பார்த்து அதற்கேற்ப வசதிகளை இலங்கை அகதிகளுக்குச் செய்து கொடுக்கத் தமிழக அரசு முன்வர வேண்டும்- என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண் உற்பத்திக்கு விதிக்கப்பட்ட தடை நீதிமன்றத்தால் நீக்கம்

யாழ்ப்பாணம், நவ.05

யாழ்.நகரப்பகுதி பேக்கரி மற்றும் பேக்கரி உரிமையாளர் சங்கம் ஆகியவற்றில் இருந்து மனிதப்பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாதது என்ற சந்தேகத்தில் மீட்க்கப்பட்ட கோதுமை மா தொடர்பான வழக்கு எதிர்வரும் 11 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யாழ்.நீதிவான் இ.வசந்த சேனன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மேற்படி வழக்குத் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியாகாததையடுத்து வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்தார்.

இந்த வழக்கில் பிரஸ்தாபிக்கப்பட்டு பாண் உற்பத்தியை மேற்கொள்ளக் கூடாது எனத் தடை விதிக்கப்பட்ட பேக்கரி மீதான தடை நீக்கப்படுவதாகவும் நீதிவான் அறிவித்தார். எனினும் மனிதப் பாவனைக்கு உதவாது என்ற சந்தேகத்தில் மீட்கப்பட்ட கோதுமைமாவைத் தொடர்ந்து பயன்படுத்தக் கூடாது என்றும் விநியோகிக்கக் கூடாது என்றும் அவர் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட கோதுமை மா தொடர்பாக அடுத்த தவணையில் முடிவு தெரிவிக்கப்படும் என்றும் நீதிவான் கூறினார். (அ-1)

# அநாதரவான நிலையில் பெண்சிசு சங்கானைப் பகுதியில் நேற்று முன்தினம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ.05

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் அநாதரவான நிலையில் காணப்பட்ட பெண்சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

பிறந்து ஒருநாள் கூட ஆகாததாகக் கருதப்படும் பெண்குழந்தையொன்று, குறித்த பஸ்நிலையத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன்பின்னர் மானிப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இரவிரவாகப் பெய்த கொட்டும் மழைநடுவே பஸ்தரிப்பில் விட்டுச் செல்லப்பட்ட இக்குழந்தை பத்திரமாகக் காலையில் மீட்கப்பட்ட சம்பவம் இப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04-29)

# தமிழ் எம்.பிக்கள் இருவர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு, நவ.05

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக வெளிநாட்டில் தங்கியிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்று முற்பகல் நாடு திரும்பினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இந்தியாவிலும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் இரு வருடங்களுக்கு மேலாக இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தங்கியிருந்து இறுதியாக லண்டனில் தங்கியிருந்தார்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களில் செல்வம் அடைக்கலநாதன் விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார் என்று கூறப்பட்டது.

நாடு திரும்பிய இவர்கள் இருவரும் நேற்று நாடாளுமன்ற அமர்விலும் கலந்துகொண்டனர். (சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி ஜெகநாதன் விஜயமலர் தம்பதியினரின் ஏகபுதல்வன்

### செல்வன் ஜெ. டினோஷன்

அவர்கள் யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி வித்தி யாலயத்தில் கல்வி கற்று 2009ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப்பெற்றுச் சித்தியடைந்தமையை இட்டு அவருக்கு வழிகாட்டி, ஊக்குவித்த வித்தியாலய அதிபர், வகுப்பாசிரியர் செல்வி. பொ.சிவ னேஸ்வரி மற்றும் சக ஆசிரியர்களையும் நாம் மனமாரப் பாராட்டு வதுடன் நயினை நாகபூசணி அம்பாளின் அருள் பெற்று சகல சௌபாக்கியங் களுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வட்டாரம்-5
நயினாதீவு

நா.ஜெகநாதன் விஜயமலர்
(பெற்றோர்)

(90465)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மணிமாறன்-ஜனனி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரன் ஜிதுசன் இன்று 5.11.2009 வியாழக்கிழமை தெகிவளையில் உள்ள தனது இல்லத்தில் முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா,அம்மா, அண்ணா ஹர்சன், அம்மம்மா, அம்மப்பா, மஞ்சுமாமா, அப்பம்மா, அப்பப்பா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, தங்கை தாட்ஷா, டிலக்சினி, சித்தப்பா ஆகியோர் ஜிதுக்குட்டியை வெள்ளைப்பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

05 11 2009

ஜிதுசன்




தகவல்: அம்மம்மா குடும்பம்.
Rajee Restaurant
இராமலிங்கம்ரோட்,
திருநெல்வேலிகிழக்கு


## Digital Electronics



Internet Browsing
Photo Copy
Fax
Internet call
Stationary
Laminating
DVD, CD Writing

Browsing Corner

Typing & Printing
Net 2 Phone call
Face to Face call
Kit, Mobitel card
Dialog Mobitel Reload

வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்ற சேவை
உலகில் எம் பாகத்தில் இருந்தும் அனுப்பப்படும் பணத்தினை வேகமாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்வலாம்
(சனி, ஞாயிறு, போயா விடுமுறை தினங்களிலும்)

(ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
சம்பத் வங்கி முன்பாக
62/16 STANLEY ROAD,
JAFFNA.
T.P. 021 222 4040

இன்ரநெற் பிறவுசிங்
Internet Browsing
04.11.2009 - 10.11.2009 வரை
முதல் 30 நிமிடங்கள் இலவசம்


## பதவி வெற்றிடம்

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வரும் பிரபல நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளில் வெற்றிடம் உள்ளது.

1) சர்வதேச விமானரிக்கட் நிறுவன உத்தியோகத்தர் (பெண்கள்)
INTERNATIONAL AIR TICKETING SERVICE OFFICER
* ஆளுமைமிக்க 21 - 28 வயது வரையான பெண்கள்
* மொழியியல் தேர்ச்சி - ஆங்கிலம் விரும்பத்தக்கது

2) சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்
(MARKETING EXCECUTIVES)
* இருபாலரும்
* மொழியியல் தேர்ச்சி

3) சர்வதேச பொதிகள் சேவைகளுக்கான உத்தியோகத்தர்
INTERNATIONAL CARGO SERVICE OFFICER
* இருபாலரும்
* முன் அனுபவம் விரும்பத்தக்கது
* மொழியியல் தேர்ச்சி

சுயவிவரக்கோவையுடன் பின்வரும் முகவரிக்கு (07.11.2009) சனிக்கிழமை காலை 9.30 தொடக்கம் 1.30 வரை, பி.ப. 2 மணி தொடக்கம் 5.30 வரைக்கும் (முன் அனுபவம் இல்லாதவர்களும் பயிற்சி அடிப்படையில் இணைத்துக் கொள்ளப் படுவர்)

TILKO HOLIDAYS
NO : 70/6, K. K. S. ROAD,
JAFFNA.
Hot Line: 0773083820
Tel No: 0117200051
E.mail : pcity colombo @g.mail

(56212)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நேற்று (04.11.2009) புதன்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2008 ஆம் ஆண்டுக்கான 6வது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பட்டம் பெற்ற எங்கள் அன்புமகன்

### திருச்சிற்றம்பலம் நவநீதன்

(H.N.D.M 2006-2008)

அவர்களை வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்க்கையில் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: அம்மா-நிமலசோதி
அண்ணா-வஹரிகரன் (கனடா)
தங்கை- அனுசியா

[பட்டம்பெற்ற சகல மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.]

## UNIVERSITY OF JAFFNA

**Procurement Notice**

**PROCUREMENT OF COMPUTERS, PRINTERS, AND OTHER ACCESSORIES TO THE UNIVERSITY OF JAFFNA**

Bids are invited for the supply of following items by the Chairman, Procurement Committee, University of Jaffna upto 2.00 pm on 25.11.2009

| NO | ITEM | QTY |
|---|---|---|
| T-001 | Multimedia PC | 49 |
| T-002A | Note book Computer Type 1 | 07 |
| T-002B | Note book Computer Type 11 | 03 |
| T-003A | Impact Printer Type 1 | 02 |
| T-003B | Impact Printer Type 11 | 10 |
| T-004A | Lazer Printer Type 1 | 03 |
| T-004B | Lazer Printer Type 11 | 06 |
| T-005 | Scanner | 04 |
| T-006 | DVD Writer | 02 |
| T-007 | LCD Moniter | 05 |
| T-008 | Web Camera | 04 |
| T-009A | UPS 1.2 KVA | 32 |
| T-009B | UPS 2 KVA | 05 |
| T-009C | UPS 650 VA | 34 |
| T-010 | Visual Presenter | 01 |
| T-011 | Multimedia Projector | 04 |

Bidders are requested to pay a non refundable bid fee of Rs. 2500.00 by Money Order drawn in favour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or in Cash at the Shroff Counter of the University of Jaffna. Bidding Documents with relevant specifications, could be collected from the Snr. Asst. Bursar (Supplies), University of Jaffna between 06.11.2009 to 13.11.2009 during Working hours, by producing the Money Order or Cash Receipt. The Money Order/Cash Receipt to be attached with the Bidding Documents.

Bids in duplicate should be send by registered post to reach the Bursar or deposited in the Bid box available at the Bursar's office, University of Jaffna on or before 2.00 pm. on 25th November 2009. Bids will be opend on the same day immediately after the closer of Bids in the Board Room of the University of Jaffna. Bidders or their authorised representative could be present at the opening time. the Top of the left hand corner of the envelope should be marked as "**Bids for Computers and Accessories - UJ / F / PO / T / 03 / 2009**"

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி அகதி முகாம்களிலிருந்து இதுவரை ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் விடுவிப்பு

## வவுனியாவில் இன்னும் 1½ லட்சம் பேரே என்கிறார் அமைச்சார் ரிஷாத்



கொழும்பு,நவ.5

வவுனியா அகதி முகாம்களில் இருந்து இதுவரை ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் இன்னும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் மாத்திரமே அகதி முகாம்களில் எஞ் சியுள்ளனர் என்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்றுக் கூறினார்.

நாடாளுமன்றக்குழு அறையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்த காலத்தின்போது வடக்கில் இருந்து இரண்டு லட்சத்து 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து வந்துள்ளனர். அவர்கள் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் புல்மோட்டை ஆகிய இடங்களில் தங்கவைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்கள் மீள் குடியேற்றத்துக்குள்ளாகி வருகின்றனர். இதுவரை ஒரு லட்சம் 30 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் எஞ்சியுள்ளனர். வடக்கில் கண்ணிவெடிகள் அகற்றி முடிந்ததும் அவர்கள் மீள்குடியமர்த்தப்படுவர்.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 20 இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பயிற்றப்பட்ட ஆயிரம் பேர் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்னும் ஆயிரம் பேர் பயிற்றப்பட்டு வருகின்றனர்.

அகதி முகாம்களில் இருந்து மீள்குடியமர்த்தலுக்காக அழைத்துச் செல்லப்படும் மக்கள் வேறு முகாம்களில் தங்கவைக்கப்படுவதில்லை. பலரின் வீடுகள் எரிந்திருந்தமையால் முன்பு அவ்வாறு செய்யப்பட்டது. இப்போது இல்லை.

அதுவும் அவர்கள் பாடசாலைகளில் தான் தங்கவைக்கப்பட்டனர். அவர்கள் விருப்பத்திற்கேற்ப எங்கும் போய் வருவதற்கு வசதியாகவே அது இருந்தது.

கண்ணிவெடிகள் அகற்றும்பணி எவ்வளவு வேகத்தில் முடிகிறதோ அவ்வளவு வேகத்தில் மீள்குடியேற்றம் இடம்பெறும். தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சே கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளைச் செய்து வருகிறது.

கிழக்கில் மீள்குடியேற்றம் முற்றாக முடிவடைந்துள்ளது. மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் - என்றார். (அ-சி)

## தெல்லிப்பழையைச் சேர்ந்த 127 பேர் உறவினர்களிடம் நேற்று ஒப்படைப்பு

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 72 கர்ப்பிணித் தாய்மார்கள் உள்ளடங்கலாக 127 பேர் நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு உற வினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர்.

பஸ் வண்டிகளில் அழைத்துவரப்பட்ட இப்பொதுமக்களை நேற்றிரவு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் வைத்து தெல்லிப்பழைப் பிரதேச செயலர் முரளிதரன் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன் பின்னர் அவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். (04)

# எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் தமிழ்க் கூட்டமைப்பு இணையாது

கொழும்பு, நவ.5

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான எதிர்க்கட்சிகளின் ஐக்கிய தேசிய முன்னணியில் இணையும் நோக்கம் எதுவும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியில் தமிழ்க் கூட்டமைப்பு இணையவுள்ளதாக வெளிவந்த தகவல்களுக்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் நடவடிக்கையே ஐக்கிய தேசிய முன்னணி என்ற புதிய கூட்டமைப்பின் முக்கிய நோக்கம் என்று தெரிவித்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடு வேறு என்றும் சுட்டிக்காட் டியுள்ளார்.

எனவே, மேற்படி கூட்டமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணையாது என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

### இன்றைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது மற்றும் அரசியல் ரீதியாக வரக்கூடிய நெருக்கடிகளுக்கு ஒன்று சேர்ந்து முகம் கொடுப்பது போன்ற விடயங்களும் அதேவேளை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்த விடயங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் கலந்துரையாடப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் மூலமாக தமிழ், முஸ்லிம் கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்பு ஒன்றை எதிர்காலத்தில் உருவாக்குவது தொடர்பாக நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சந்திப்புத் தேர்தலை நோக்கமாகக் கொண்டு இடம்பெற்றது அல்ல என்றும் எதிர்காலத்தில் அமைக்கப்படவுள்ள கூட்டமைப்பும் தேர்தலை மையமாகக் கொண்டதல்ல எனவும் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்-முஸ்லிம் பிரதிநிதிகள் 'உதயனு'க்குத் தெரிவித்தனர். (அ-சி)

# கடலில் மூழ்கிய இலங்கையர்களை தேடும் பணியை கைவிட்டது ஆஸி.

## உயிர் தப்பியவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு

அவுஸ்திரேலியக் கடற்பரப்பில் மூழ்கிய படகிலிருந்த இலங்கையர்களைத் தேடும் பணியை அவுஸ்திரேலிய அரசு கைவிட்டுள்ளது. இந்த அனர்த்தத்தில் உயிர் தப்பியவர்கள் கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, படகில் பயணம் செய்தவர்களின் குடும்பத்தினர் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவிலுள்ள தமது உறவினர்களைத் தொடர்புகொண்டு நிலைவரத்தை அறிய விரும்புகின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலியாவின் கடல் பாதுகாப்பு அதிகாரசபை, காணாமற்போன ஒன்பது பேரும் கண்டுபிடிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லையென ஆலோசனை வழங்கியமையை அடுத்து தேடுதல் நடவடிக்கைகைவிடப்பட்டது.

விபத்தில் சிக்கியவர்களை மீட்பதற்குத் தம்மாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டனர் என அதிகார சபையின் தலைவர் பிசே தெரிவித்துள்ளார். காப்பாற்றப்பட்ட அனைவரும் நல்ல உடல் நிலையுடன் உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய உள்துறை அமைச்சர் பிரெளடன் ஓ கோணர், உயிர்தப்பியவர்கள், அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு கொண்டு செல்லப்படுவார்கள். அவர்களுக்கு உள, உடல் சிகிச்சைகள் வழங்கப்படும்- எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க படகு கவிழ்ந்த சம்பவம் குறித்து அறிந்ததும் இலங்கையிலிருந்து பலர் அவுஸ்திரேலியாவுக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தமது உறவினர்களின் நிலையை அறிய முயல்கின்றனர் என அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கிழக்குப் பகுதியிலிருந்து மூன்று வாரங்களுக்கு முன்னர் புறப்பட்ட படகே விபத்துக்குள்ளானது. அவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவுக்கு நேரடியாகச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தனர் என அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ் தெரிவித்துள்ளது. (அ-சி)

### தற்போதைய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்திலிருந்து நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வர். (அ-1)

வெளிவந்து விட்டது
அரச முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி
உளச்சார்பு மொழித்திறன்
P.Kamalthasan
கிடைக்குமிடம்:
பூபாலசிங்கம், துர்க்கா, அன்னை புத்தகசாலை.

# வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் பொலிஸார் அடிதடி, கண்ணீர்ப் புகைப் பிரயோகம்!

கொழும்பு, நவ. 05

அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகளில் ஐந்து பெண்கள் நேற்று பொலிஸாரால் நடத்தப்பட்ட அடிதடிப் பிரயோகத்தில் காயமடைந்துள்ளனர். அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 61 பட்டதாரிகள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வேலையற்ற பட்டதாரிகள் ஆயிரக் கணக்கானோர் கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இவர்கள் கோட்டை நிலையத்திலிருந்து அலரி மாளிகையை நோக்கி நேற்றுப் பேரணியாகச் செல்ல முயன்றனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் அலரிமாளிகைக்குள் உட்பிரவேசிக்கின்றமையைத் தடுத்து நிறுத்தப் பொலிஸார் அவசரமாகக் குவிக்கப்பட்டனர்.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில் வைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இதனையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகை, தண்ணீர்ப் பிரயோகம், அடிதடி, இறப்பர்க் குண்டுப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றனர்.

இதன் போதே ஐந்து பட்டதாரி பெண்கள் காயமுற்றனர். இவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டனர். மேலும் 61 பட்டதாரிகள் கைது செய்யப்பட்டனர். மூன்று பொலிஸாரும் காயமுற்றனர்.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களின் அலரி மாளிகைக்குள் பிரவேசிக்கும் முயற்சி தோல்வி அடைந்தது.

இருப்பினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை. அவர்கள் ஹில்டன் ஹோட்டலுக்கு எதிரிலுள்ள வீதியில் அமர்ந்திருந்து மறியல் போராட்டத்தில் இறங்கினர். இதனால் வீதிப் போக்குவரத்து பல மணி நேரமாக அங்கு பாதிக்கப்பட்டிருந்தது.

### ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீள்குடியேற்றத்தின் பின்னர் ஏற்படுத்தப்படவேண்டிய கட்டமைப்பு வசதிகள் குறித்து படைஅதிகாரிகளுடன் ஆராய்ந்தார் என்றும் கூறப்பட்டது. (அ-சி)

### பம்பலப்பிட்டி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்தார்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியால் கோட்டை ரயில் நிலையம் முன்பாக சுமார் இரண்டு மணிநேரமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

### அமெரிக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்கள் இந்தத் தகவலை வெளியிட்டனர். இராணுவ வட்டாரங்களும் இதனை உறுதிசெய்துள்ளதுடன் ''சரத் பொன்சேகா இன்று அதிகாலை 4.30 மணியளவில் கொழும்பை வந்தடைவார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைகளை எதிர்கொள்ளவில்லை'' எனத் தெரிவித்துள்ளன.

இவ்வாறு விசாரணைகளை எதிர்கொள்ளாமல் சரத் பொன்சேகா நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை அரசே மேற்கொண்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வாஷிங்டன் சென்றிருந்த ஜெனரல் சரத் பொன்சேகாவை விசாரணைக்கு சமுகமளிக்குமாறு அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.

நேற்று அமெரிக்க நேரப்படி மாலை 4.30 மணிக்கு சரத் பொன்சேகாவுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவிருந்தது.

சரத் பொன்சேகாவை அமெரிக்க அதிகாரிகள் யுத்தக் குற்ற விசாரணைக்கு அழைத்த சம்பவம் கொழும்பின் அரசியல் வட்டாரங்களில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருந்தது.

இந்த நிலையில் பொன்சேகா அமெரிக்க அதிகரிகளின் முன் ஆஜராகாமலேயே திடீரென நேற்று நாடு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

இலவசமாக 3ஆம் தவணைப் பரீட்சை
தரம்:4 முதல் 10 வரை
தரம்:4 முதல் தரம்: 10 வரை கற்கும் புதிதாக இணையும் மாணவர்களுக்கு நாளை(6.11.2009) நடைபெறும் 3ஆம் தவணைப் பரீட்சைக்கட்டணம் இலவசம். பரீட்சை முடிவில் பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.
அவ்வாறே..
GR:6&7 ENGLISH MEDIUM
2010 புதிய அனுமதியும் வழங்கப்படும்.
உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர. உங்கள் கற்பனை நிஜமாக இன்றே உங்கள் பிள்ளையை இணையுங்கள்
சயன்ஸ் அக்கடமி. நல்லூர்.அரியாலை
தரம்: 4,5 வெற்றித்தேர்வு பரீட்சையோடு சாதனை ஆசிரியர் திரு.தவயோகராஜாவின் புதிய பிரிவு:2 உடன் ஆரம்பம்
நேர அட்டவணையை இன்று பெறலாம்.
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்

அதிரடி சிறப்புத் தள்ளுபடி விற்பனை
COLLINS COBUILD ENGLISH DICTIONARY
~~2750~~/= 1500/=
மெடிக்கல் புத்தகங்களுக்கான கழிவு ~~20%~~ 30 %
ஏனைய புத்தகங்களுக்கு 10% முதல் 50% வரையான விசேட விலைக்கழிவு.
ஸ்ரேசனரிப் பொருள்கள் சிறப்புத் தள்ளுபடி விலையில்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவந்து விட்டது
2010
மெய்கண்டான் - கலண்டர், லீலா - கலண்டர்
சகல விதமான டயறி வகைகள்
படக் கலண்டர்கள் - 150 வகை
சுவாமி, சீநெறி, நடிகர், பூக்கள், பேபிபடம் உட்பட.
வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
அன்னை புத்தகசாலை,
இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 222 9881

PHYSICS
A/L 2011
நீர் நிலையியல்
(Thur 3.00, Sat, Sun -1.00)
ஆரம்பம்: 05.11.2009
(இன்று) 3.00 p.m.
K.கஜன்
NEC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.